www.malankaralibrary.com

## மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி

# படைப்பாளரான கடவுள்

## வகுப்பு – 5




மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி

ஐந்தாம் வகுப்பு வினா விடைகள்

தொடர்புக்கு: frmariajohn@gmail.com

www.malankaralibrary.com

# பாடம் 1

## படைப்பாளரான கடவுள்

## பயிற்சி வினாக்கள்

1. மனிதன் படைப்பவர் அல்ல. ஏன்? இல்லாததை உருவாக்கவோ வெறுமையிலிருந்து எதையாவது படைக்கவோ மனிதனால் முடியாது. உள்ளதை மற்றொரு வடிவாக்குவதற்கு மட்டுமே மனிதனால் முடியும். ஆகவே மனிதன் படைப்பாளியல்ல.

2. தந்தை கடவுள் தமது முழு அன்பையும் யார் வாயிலாக வெளிப்படுத்தினார்? காலத்தின் நிறைவில் தமது ஒரே மகனான இயேசு மெசியாவை உலகிற்கு அனுப்பி கடவுள் தமது அன்பை முழுமையாக வெளிப்படுத்தினார்.

3. வாரத்தின் ஏழாவது நாளின் சிறப்பு யாது? படைப்புச் செயல் அனைத்தையும் நிறைவு செய்த பின் ஏழாம் நாளை கடவுள் ஆசீர் வழங்கி புனிதப்படுத்தினார். வாரத்தில் ஒரு நாளை ஓய்வு நாளாகவும், ஆராதனைக்குரிய நாளாகவும் ஒதுக்க வேண்டுமென்று கடவுள் தீர்மானித்தார்.

4. எவ்வாறு நாம் படைத்தவரிடமுள்ள கடமையை நிறைவேற்றுகிறோம்? கடவுள் படைத்தவை எல்லாம் அழகாக உள்ளன. இயற்கையை அழிக்காமல் காப்பது நமது கடமையாகும். படைத்தவரின் நோக்கம் நிறைவேற படைப்புப் பொருட்களை உருவாக்க மனிதன் கவனம் செலுத்த வேண்டும். படைப்பின் மகுடம் மனிதன் ஆவான். ஆகவே அனைவரையும் அன்பு செய்யவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவும் நமக்கு கடமையுண்டு. இவ்வாறாக எல்லாவற்றையும் அன்பு செய்து கடவுளை புகழ்ந்து ஆராதிக்கும் போது நாம் படைத்தவரிடமுள்ள கடமையை நாம் நிறைவேற்றுகிறோம்.

5. கடவுள் எவ்வாறு மனிதனைப் படைத்தார்? கடவுள் தமது உருவிலும் சாயலிலும் மனிதனைப் படைத்தார். கடவுள் மானிடரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். அனைத்து படைப்புகளையும் ஆளும் அதிகாரத்தை கடவுள் அவனுக்கு வழங்கினார்.

6. தந்தைக் கடவுள் படைப்பாளர் எவ்வாறு? “தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தார். (தொநூ. 1:1) என்ற செய்தியுடன் தான் விவிலியம் தொடங்குகிறது. இவ்வாறாக வெறுமையிலிருந்து உலகைப் படைத்து, தாம் படைப்பவர் என்பதை கடவுள் வெளிப்படுத்தினார்.

7. எதற்காக கடவுள் தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார்? காலத்தின் நிறைவில் தமது ஒரே மகனான இயேசு மெசியாவை உலகிற்கு அனுப்பி கடவுள் தமது அன்பை முழுமையாக வெளிப்படுத்தினார். “அவரிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெற தம் ஒரே மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்!” (யோவான் 3:16) இந்த வெளிப்பாட்டின் வரலாறு இறை அன்பினுடையவும், மீட்பினுடையவும் வரலாறு ஆகும். இது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள உறவின் வரலாறு ஆகும்.

குறு வினா விடைகள்

1. படைப்பின் மகுடமாக கடவுள் யாரைப் படைத்தார்? மனிதனை
2. மனிதனின் அன்பும் அழகும் நன்மையும் நமக்கு எதனை தருகின்றன? ஆனந்தம்
3. உலகையே படைத்து காக்கின்றவர் யார்? எல்லாம் வல்ல கடவுள்
4. கடவுள் **அன்பாய்** இருக்கிறார்” (1 யோவான் 4:16)
5. இந்த அகிலமும் அதில் உள்ளவை அனைத்தும் எங்கிருந்து உருவாகின? தெய்வீக அன்பிலிருந்து
6. கலைஞனின் **கலைநயம்,** அவரது படைப்பிலிருந்தும், கவிஞரின் **கவித்திறன்** அவரது காவியத்திலிருந்தும் புரிகிறது.
7. படைப்பாளரான கடவுளின் மகிமை எங்கே வெளிப்படுகிறது? அவரது படைப்பாம் அகிலத்தில்
8. படைப்பு என்றால் என்ன? இல்லாத ஒன்றை உருவாக்குவது தான் படைப்பு.

www.malankaralibrary.com

9. **படைப்புக்கு** முன்னால் இந்த அகிலம் இருந்ததில்லை.

10. “மண்ணுலகு உருவற்று **வெறுமையாக** இருந்தது. ஆழத்தின் மீது **இருள்** பரவியிருந்தது." (தொ.நூ. 1:2)

11. **உள்ளதை** மற்றொரு வடிவாக்குவதற்கு மட்டுமே மனிதனால் முடியும்.

12. **“தொடக்கத்தில்** கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தார். (தொநூ. 1:1)

13. வெறுமையிலிருந்து உலகைப் படைத்து, தாம் யார் என்பதை கடவுள் வெளிப்படுத்தினார்? படைப்பவர்

14. கடவுள் படைத்தவை யாவை? விண்ணுலகும் அதிலுள்ள அனைத்து கோள்களும், பூமியும் அதிலுள்ள அனைத்தும்

15. புற்பூண்டுகளையும், விதை தரும் செடிகளையும், கனிதரும் பழ மரங்களையும் அந்த இனத்தின் படியே **நிலம்** விளைவிக்கட்டும். அது அவ்வாறே ஆயிற்று' (தொநூல். 1:11)

16. நீர்வாழ் உயிரினங்களையும் பறவைகளையும் விலங்குகளையும் படைத்தவர் யார்? கடவுள்

17. அனைத்து உயிரினங்களையும் படைத்து தாம் உயிர்களின் உறைவிடம் என்று தம்மை வெளிப்படுத்தியவர் யார்? கடவுள்

18. கடவுள் தமது உருவிலும் சாயலிலும் யாரைப் படைத்தார்? மனிதனை

19. அனைத்து படைப்புகளையும் ஆளும் அதிகாரத்தை கடவுள் யாருக்கு வழங்கினார்? மனிதனுக்கு

20. கடவுள் அனைத்து படைப்புகளின் மேல் தமக்குரிய அதிகாரத்தை வெளிப்படுத்தி அதனை யாரோடு பகிர்ந்து கொண்டார்? மனிதனோடு

21. கடவுள் **மானிடரை** ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்.

22. ஆண் பெண் இடையேயுள்ள அன்பு என்பது யாது? கடவுளின் கொடை

23. படைப்புச் செயல் அனைத்தையும் நிறைவு செய்த பின் எந்த நாளை கடவுள் ஆசீர் வழங்கி புனிதப்படுத்தினார்? ஏழாம் நாளை

24. வாரத்தில் ஒரு நாளை ஓய்வு நாளாகவும், ஆராதனைக்குரிய நாளாகவும் ஒதுக்க வேண்டுமென்று தீர்மானித்தவர் யார்? கடவுள்

25. மனிதன் படைப்பாளராகிய யாரை வழிபடவேண்டுமென கடவுளை விரும்புகிறார்? கடவுளை

26. இறைவெளிப்பாடு யார் வழியாக தொடர்ந்தது? ஆபிரகாம் வழியாகவும் அவரது தலைமுறைகள் வழியாகவும்

27. கடவுள் தமது அன்பை யார் வழியாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்? இறைவாக்கினர்கள், அரசர்கள், குருக்கள் வாயிலாக

28. காலத்தின் நிறைவில் யாரை உலகிற்கு அனுப்பி கடவுள் தமது அன்பை முழுமையாக வெளிப்படுத்தினார்? தமது ஒரே மகனான இயேசு மெசியாவை

29. “அவரிடம் **நம்பிக்கை** கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெற தம் ஒரே மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்!” (யோவான் 3:16)

30. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள உறவின் வரலாறு எனப்படுவது யாது? இறைவெளிப்பாடு

31. நாம் கௌமா மன்றாட்டில் எவ்வாறு படைப்பாளரான கடவுளை புகழ்கிறோம்? “இறைவா உமக்குப் புகழ் படைத்தவரே உமக்குப் புகழ் பாவிகளாகிய அடியார்மேல் இரங்கும் மெசியா அரசரே உமக்குப் புகழ்” என்று

32. மாலை மன்றாட்டில் நாம் தந்தைக் கடவுளை படைப்பாளர் என எவ்வாறு அறிக்கையிடுகிறோம்?

www.malankaralibrary.com

தந்தையாகிய கடவுளே, நீர் எங்களைப் படைத்து பராமரிப்பதால் உம்மைப் புகழ்கிறோம்"

33. விசுவாசபிரமாணத்தில் நாம் தந்தைக் கடவுளை படைப்பாளர் என எவ்வாறு மன்றாடுகிறோம்? "எல்லாம் வல்ல தந்தையும் வானத்தையும் வையத்தையும் படைத்தவருமாகிய மெய்யான ஒரே கடவுளில் நாங்கள் விசுவசிக்கின்றோம்"

34. படைப்பின் மகுடம் **மனிதன்** ஆவான்.

35. "படைப்பெல்லாம் **ஆண்டவரைப்** போற்றட்டும். ஏனெனில்; அவரது கட்டளையின் படி எல்லாம் படைக்கப்பட்டன" (தி.பா. 148:5)

**பாடம் 2**

## கடவுளிடமிருந்து அகன்ற மனிதன்

## பயிற்சி வினாக்கள்

1. ஆதாம் ஏவாளுக்கு கடவுள் கொடுத்த கட்டளை யாது? மனிதன் அங்கே குடியேறும் வேளையில் கடவுள் அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார். 'தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய் (தொநூ. 2:16-17)

2. ஏவாள் கடவுளின் கட்டளையை மீற காரணம் என்ன? ஒரு நாள் பாம்பு ஏவாளிடம் உண்ணக் கூடாது என்று கடவுள் கட்டளையிட்ட தோட்டத்தின் நடுவிலுள்ள அறிவின் மரத்திலுள்ள கனியை உண்ண தூண்டியது. பாம்பு ஏவாளோடு "நீங்கள் சாகவே மாட்டீர்கள், ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்" (தொநூ. 3:4-5) என்று பாம்பு கூறியதை நம்பிய ஏவாள் அந்த மரத்தின் கனியை உண்டாள்.

3. கடவுளின் கட்டளையை மீறிய ஆதாம் ஏவாளுக்கு நிகழ்ந்தது என்ன? விலக்கப்பட்ட மரத்தின் கனியை சாப்பிட்ட உடனே இருவருடைய கண்களும் திறந்தன. தாங்கள் ஆடையின்றி இருப்பதை உணர்ந்து அத்தி இலைகளால் ஆடை செய்து அணிந்தனர். ஆதாமும் ஏவாளும் கடவுளின் திருமுன்னிலிருந்து விலகி மரங்களுக்கிடையே ஒளிந்து கொண்டனர். கடவுளின் கட்டளையை மீறியதால் பாவம் செய்த ஆதிப்பெற்றோர்கள் கடவுளிடமிருந்து அகன்றனர். அவர்களை கடவுள் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார்.

4. காயீன் ஆபேலை கொன்றது ஏன்? காயினும், ஆபேலும் ஆதாம் ஏவாளின் புதல்வர்கள். காயின் பயிரிடுபவர். ஆபேல் ஆடு மேய்ப்பவர். ஒருநாள் காயினும், ஆபேலும் ஆண்டவருக்கு காணிக்கை செலுத்தினர். காயின் நிலத்தின் பலனிலிருந்து ஒரு பங்கையும் ஆபேல் தமது மந்தைகளிலிருந்து கொழுத்த தலையீறுகளையும் அர்ப்பணித்தார்கள். ஆபேலையும் அவன் காணிக்கையும் கனிவுடன் கண்ணோக்கிய கடவுள் காயினை கண்ணோக்கவில்லை. காரணம் அவனது காணிக்கை பொருட்கள் கடவுளுக்கு திருப்தியைத் தரவில்லை. இதனால் காயினுக்கு கோபமும் வேதனையும் தோன்றியது. ஒரு நாள் காயின் தமது சகோதரனான ஆபேலை வயல்வெளிக்கு கூட்டிச் சென்றான். அங்கு வைத்து காயின் அவனைக் கொன்றான். சகோதரனைக் கொன்ற காயினை கடவுள் தண்டித்தார் (தொநூ. 4:1-16).

5. இவ்வுலகில் பாவம் எவ்வாறு பெருகியது? பாவம் செய்து கடவுளிடமிருந்து அகன்ற ஆதிப்பெற்றோர்களின் புதல்வனாகிய காயினும் பாவத்தில் வீழ்ந்தான். உடன்பிறந்த சொந்த சகோதரனை கொன்ற அவன் கடவுளிடமிருந்தும் சகோதரனிடமிருந்தும் சமூகத்திலிருந்தும் அகன்றான். கடவுளுக்கு பணியாமலும், அவரை ஏற்றுக் கொள்ளாமலும் இருந்த மனிதன் தனது சகோதரனையும் வெறுத்தான். இவ்வாறாக ஆதிப்பெற்றோர்களின் பாவம் அடுத்த தலைமுறையிலும் தொடர்ந்தது.

6. பாவத்திலிருந்தும் பாவச் சூழல்களிலிருந்தும் விலக நான் என்னச் செய்ய வேண்டும்? தீமை நிறைந்த இவ்வுலகில் சாத்தானின் சதிகளிலிருந்து மீட்கப்பட்டு நன்மையின் வழியில் வாழ மனிதன் ஆசைப்படுகிறான்.

"துயில் நீத்தடியேனுணர்வுடனே திருமுன் நின்றிடுதல் வேண்டும் மீண்டுமுறங்கினதில் பாவம் தீண்டவிடாதீர் ஆண்டவரே" (துயிலுக்கு முன் மன்றாட்டு)

தூக்கத்தில் கூட பாவம் செய்யாமலிருக்க மனிதன் கடவுளை அழைத்து வேண்டுகிறான். தூக்கம் விட்டு உணர்வோடு கடவுளின் திருமுன்னிலிருக்க மனிதன் மன்றாடுகிறான். நமது திருவழிபாட்டில் பாவ விடுதலைக்கான மன்றாட்டுகள் ஏராளம் உள்ளன. திருவழிபாட்டில் பங்கேற்பதன் மூலம் நமக்கு பாவ விடுதலை கிடைக்கவும் நாம் கடவுளின் கிருபையில் பங்கு பெறவும் செய்கிறோம்.

7. கடவுள் ஆதாம் ஏவாள் இவர்களோடு எவ்வாறு உரையாடினார்? ஏதேன் தோட்டத்தில் பயிர் செய்யவும் அதை பாதுகாக்கவும் கடவுள் மனிதனை நியமித்தார். அங்கே கடவுளும் மனிதனும் ஒருவரோடொருவர் மகிழ்ச்சியுடன் பழகி வந்தனர். மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் கடவுள் வழங்கினார். மனிதன் அங்கே குடியேறும் வேளையில் கடவுள் அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார். 'தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய் (தொநூ. 2:16-17)

குறு வினாக்கள்

1. விண்ணுலகையும் மண்ணுலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்தவர் யார்? கடவுள்

2. படைப்புச் செயலின் முடிவில் தமது சாயலிலும் உருவிலும் கடவுள் யாரைப் படைத்தார்? மனிதனை

3. கடவுள் ஆணும் பெண்ணுமாக படைத்த ஆதி பெற்றோர்கள் யாவர்? ஆதாம், ஏவாள்

4. பூமியிலுள்ள அனைத்து படைப்புகளின் கண்காணிப்பையும் கடவுள் யாருக்கு வழங்கினார்? மனிதனுக்கு

5. மனிதனைப் படைத்த பிறகு கடவுள் எங்கே ஒரு தோட்டம் அமைத்தார்? கிழக்கே இருந்த ஏதேனில்

6. ஏதேன் தோட்டத்தில் பயிர் செய்யவும் அதை பாதுகாக்கவும் கடவுள் யாரை நியமித்தார்? மனிதனை

7. கடவுளும் மனிதனும் ஒருவரோடொருவர் எங்கே மகிழ்ச்சியுடன் பழகி வந்தனர்? ஏதேன் தோட்டத்தில்

8. கடவுள் படைத்த காட்டு விலங்குகளிலெல்லாம் மிகவும் சூழ்ச்சி மிக்கதாக இருந்தது எது? பாம்பு

9. தோட்டத்தின் நடுவிலுள்ள அறிவின் மரத்திலுள்ள கனியை ஏவாளிடம் உண்ணத் தூண்டியது எது? பாம்பு

10. "நீங்கள் சாகவே மாட்டீர்கள், என ஏவாளோடு கூறியது யாது? பாம்பு

11. நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் என ஏவாளோடு கூறியது யாது? பாம்பு

12. நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்" என ஏவாளோடு கூறியது யாது? பாம்பு

13. பாம்பு கூறியதை நம்பி முதலில் மரத்தின் கனியை உண்டது யார்? ஏவாள்

14. ஏவாள் தான் உண்ட பின்னர் யாருக்கு கனியைக் கொடுத்தாள்? ஆதாமுக்கு

15. ஆதாமும் ஏவாளும் எதனாலான ஆடையை செய்து அணிந்தனர்? அத்தி இலைகளால்

16. எப்பொழுது கடவுள் ஏதேன் தோட்டத்தில் உலவ வந்தார்? மென்காற்று வீசிய பொழுதினிலே

17. ஆதாமும் ஏவாளும் கடவுளின் திருமுன்னிலிருந்து விலகி எங்கே ஒளிந்து கொண்டனர்? மரங்களுக்கிடையே

18. எவ்வாறு பாவம் செய்த ஆதிப்பெற்றோர்கள் கடவுளிடமிருந்து அகன்றனர்? கடவுளின் கட்டளையை மீறி

www.malankaralibrary.com

19. கடவுளை விட தீமையின் வடிவான எதனை நம்பி கடவுளின் கட்டளையை விட சொந்த விருப்பத்தை நிறைவேற்ற ஆதிப்பெற்றோர்கள் விரும்பினர்? பாம்பை

20. கடவுளிடமிருந்து அகன்ற மனிதனை ஒருவரோடொருவர் அகன்று போகவும் செய்தது எது? ஆதிப்பெற்றோர்களின் பாவம்

21. ஆதிப்பாவத்திற்கு காரணம் என்ன? படைப்பாளரைப் போல் ஆவதற்கான படைப்பாகிய மனிதனின் பேராசையே

22. பாவம் செய்து நிலையான வாழ்வை இழந்த மனிதன் கடவுளிடமிருந்து அகன்றான்.

23. ஆதாம் ஏவாளின் புதல்வர்கள் யாவர்? காயினும், ஆபேலும்

24. காயினின் தொழில் என்ன? பயிர்த்தொழில்

25. ஆபேலின் தொழில் என்ன? ஆடு மேய்ப்பவர்.

26. காயின் ஆண்டவருக்கு காணிக்கை செலுத்தியது என்ன? நிலத்தின் பலனிலிருந்து ஒரு பங்கு

27. ஆபேல் ஆண்டவருக்கு காணிக்கை செலுத்தியது என்ன? தமது மந்தைகளிலிருந்து கொழுத்த தலையீறுகள்

28. காயின் தமது சகோதரனான ஆபேலை எங்கே வைத்து கொன்றான்? வயல்வெளியில்

29. மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தியது ஏன்? பூமியில் மனிதனின் தீமைகள் பெருகி, அவனது இதய சிந்தனைகளும் கற்பனைகளும் சீர்கெட்டுப்போயிருந்ததாக கடவுள் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார் (தொநூ. 6:6).

30. மனித குலத்தை கடவுள் வெள்ளப் பெருக்கினால் அழித்த போது கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப வாழ்ந்த எவரது குடும்பத்தை கடவுள் மீட்டார்? நோவாவையும் அவரது குடும்பத்தையும்

31. நோவாவின் வழிமரபினர் பூமியெங்கும் பரவி கட்டிய கோபுரம் எது? பாபேல்'

32. பாபேல்' என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? குழப்பம்

33. நோவாவின் குலத்தில் உள்ள செராகின் புதல்வன் யார்? ஆபிரகாம்

34. யாரைத் தேர்ந்தெடுத்து கடவுள் தமது அன்பின் வெளிப்பாட்டைத் தொடர்ந்தார்? ஆபிரகாமை

35. பாவமன்னிப்புக்கான மூன்றாம் மணி மன்றாட்டு யாது? “எங்கள் ஆண்டவரே, உம் அருளால் எங்கள் மேல் இரங்கியருளும், இரக்கம் நிறைந்த ஆண்டவரே! எங்களைப் புனிதப்படுத்தியருளும். உமது இரக்கத்தால் நாங்கள் செய்த தவறுகளை மன்னிப்பீராக. ஆண்டவரே பாவ மன்னிப்பிற்கும் அருட் கொடைகளுக்கும் எங்களை ஏற்புடையவராக்கியருளும். எங்கள் ஆண்டவரே தீய சிந்தனைகளையும் தீய நாட்டங்களையும் எங்களிடமிருந்து அகற்றியருளும். ஆண்டவரே, அலகையின் சூழ்ச்சிகளிலிருந்து எங்களை மீட்டருளும்” (மூன்றாம் மணி)

36. தூக்கத்தில் கூட பாவம் செய்யாமலிருக்க மனிதன் கடவுளை அழைத்து வேண்டுகின்ற பாடல் யாது? "துயில் நீத்தடியேனுணர்வுடனே திருமுன் நின்றிடுதல் வேண்டும் மீண்டுமுறங்கினதில் பாவம் தீண்டவிடாதீர் ஆண்டவரே” (துயிலுக்கு முன் மன்றாட்டு)

37. "துயில் நீத்தடியேனுணர்வுடனே திருமுன் நின்றிடுதல் வேண்டும் மீண்டுமுறங்கினதில் பாவம் தீண்டவிடாதீர் ஆண்டவரே” (துயிலுக்கு முன் மன்றாட்டு)

38. கடவுளுக்கு விருப்பமான நல்ல பிள்ளைகளாக வாழ வேண்டியதன் அவசியம் என்ன? பாவம் செய்யும் போது நாம் நல்லவராகிய கடவுளை வேதனையுறச் செய்கிறோம். நமது உள்ளத்தில் கடவுள் வைத்த இறை ஆன்மாவை வருத்தப்படுத்துகின்றோம். எனவே பாவத்திலிருந்து அகன்று கடவுளுக்கு விருப்பமுள்ள நல்ல பிள்ளைகளாக வாழ்வோம்.

39. “என் **கட்டளைகளைக்** கடைப்பிடி, நீ வாழ்வடைவாய்” (நீதிமொழிகள் 7:2)

www.malankaralibrary.com

**பாடம் 3**

**குலமுதுவரான ஆபிரகாம்**

**பயிற்சி வினாக்கள்**

1. ஆரானில் வைத்து கடவுள் ஆபிரகாமிற்கு அருளியதென்ன? ஆண்டவர் ஆபிரகாமுக்கு ஆரானில் வைத்து இவ்வாறு அருளினார் : “உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன்: உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்: நீயே ஆசியாக விளங்குவாய்” (தொநூ 12:1-2)

2. ஆபிரகாமும் லோத்தும் பிரிந்தது எதற்காக? கானான் தேசத்தில் ஒன்றாக வாழ்ந்து வந்த ஆபிரகாமும் சகோதரன் லோத்தும் மேன்மேலும் வசதிகளும் செல்வங்களும் பெறும் பொருட்டு பிரிந்தனர். யோர்தானின் சுற்றுப்புறப் பகுதியிலுள்ள நீர்வளம் நிறைந்த சோதோம் நகரை லோத்து தேர்ந்தெடுத்தார். ஆபிரகாம் கானான் தேசத்தில் வாழத்தொடங்கினார்.

3. கடவுள் ஆபிரகாமின் நம்பிக்கையை எவ்வாறு சோதித்தார்? ஒரு நாள் கடவுள் ஆபிரகாமின் நம்பிக்கையை சோதிக்க நினைத்தார். கடவுள் அவரோடு இவ்வாறு கூறினார் : "நீ அன்பு கூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக் கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நாம் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரிபலியாக அவனை நீ பலியிட வேண்டும்' கடவுளின் கட்டளையின்படி மகனை பலியிட ஆபிரகாம் பயணம் செய்தார். வழியில் வைத்து ஈசாக்கு ஆபிரகாமோடு இவ்வாறு கேட்டார் : “இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன. எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?” ஆபிரகாம் மறுமொழியாக கூறினார். “எரிபலிக்கான ஆட்டுக்குட்டியை கடவுளே பார்த்துக் கொள்வார்”, என்றார்.

கடவுள் சொன்ன இடத்தில் ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்தார். விறகுகளை அதன்மீது வைத்த பின் ஈசாக்கைக் கட்டி அதன் மேல் கிடத்தினார். மகனை பலி கொடுப்பதற்காக கத்தியை கையிலெடுத்தார். அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்திலின்று. “பையன்மேல் கை வைக்காதே ; அவனுக்கு எதுவும் செய்யாதே ; உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்.” அப்பொழுது முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்குட்டியை ஆபிரகாம் கண்டார். அவர் அதை ஈசாக்கிற்கு பதிலாக பலிபொருளாக்கினார் (தொநூ. 22:1-14). ஆபிரகாமின் உறுதியான நம்பிக்கையின் வெளிப்படுதலைத் தான் நாம் இங்கே காண்கிறோம்.

4. விசுவாசத்தின் தந்தை என ஆபிரகாமை அழைக்க காரணம் யாது? ஆபிரகாமின் வாழ்க்கை கடவுளிடம் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையில் நிலையாயிருந்தது. கடவுள் வாக்களித்ததை நிறைவேற்றுவார் என ஆபிரகாம் நம்பினார். ஆகவே தான் ஆண்டவர் கட்டளையிட்ட அனைத்திற்கும் ஆபிரகாம் கீழ்படிந்தார். “ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்” (தொநூ. 15:6). தூய பவுல் நம்பிக்கையின் மறு உருவாக ஆபிரகாமை சித்தரிக்கிறார் (உரோ. 4:3) விசுவாசத்தின் தந்தை' என்று திருச்சபை ஆபிரகாமை போற்றுகிறது.

5. எவ்வாறு கடவுள் மனிதகுலத்தை மீட்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தினார்? ஆபிரகாமை அழைத்ததன் மூலமாகவும் அவருக்கு அருளிய வாக்குறுதியின் மூலமாகவும் மனித குலத்தை மீட்பதற்கான தமது விருப்பத்தை கடவுள் வெளிப்படுத்தினார்.

6. எதிரிகளை வென்று வந்த ஆபிரகாமை வரவேற்றது யார்? லோத்தை அவரது சொத்துக்களுடன் எதிரிகள் கைது செய்து கொண்டு சென்றனர். இதை அறிந்த ஆபிரகாம் தமது ஆட்களை அனுப்பி எதிரிகளை தோற்கடித்தார். இவ்வாறாக அவர் லோத்தை மீட்டார். எதிரிகளை தோற்கடித்து திருப்பி வந்த ஆபிரகாமை சாலோம் அரசர் மெல்கிசதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து வரவேற்றார் (தொநூ. 14:1-24).

7. ஆபிரகாமுடன் கடவுள் செய்துகொண்ட உடன்படிக்கை என்ன? ஒருநாள் ஆபிரகாமுக்கு கடவுள் இவ்வாறு அருளினார். “வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால் விண்மீன்களை எண்ணிப் பார். இவற்றைப் போலவே

www.malankaralibrary.com

உன் வழிமரபினரும் இருப்பர்” (தொநூ. 15:5) ஆபிரகாமுக்கு கடவுள் சந்ததியினரை வாக்களித்தார்.

8. எவ்வாறு ஆபிரகாம் தன் மகனைப் பலி செலுத்த முயன்றார்? கடவுளின் கட்டளையின்படி மகனை பலியிட ஆபிரகாம் பயணம் செய்தார். வழியில் வைத்து ஈசாக்கு ஆபிரகாமோடு இவ்வாறு கேட்டார் : “இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன. எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?” ஆபிரகாம் மறுமொழியாக கூறினார். “எரிபலிக்கான ஆட்டுக்குட்டியை கடவுளே பார்த்துக் கொள்வார்”, என்றார்.

கடவுள் சொன்ன இடத்தில் ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்தார். விறகுகளை அதன்மீது வைத்த பின் ஈசாக்கைக் கட்டி அதன் மேல் கிடத்தினார். மகனை பலி கொடுப்பதற்காக கத்தியை கையிலெடுத்தார். அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்திலிருந்து. “பையன்மேல் கை வைக்காதே ; அவனுக்கு எதுவும் செய்யாதே ; உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்.” அப்பொழுது முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்குட்டியை ஆபிரகாம் கண்டார். அவர் அதை ஈசாக்கிற்கு பதிலாக பலிபொருளாக்கினார் (தொநூ. 22:1-14).

## குறு வினாவிடைகள்

1. ஆபிரகாம் வாழ்ந்த காலம் எது? கிறிஸ்துவிற்கு முன் 19 - ம் நூற்றாண்டில்
2. ஆபிரகாமின் குலம் எது? நீதிமானாகிய நோவாவின் குலம்
3. ஆபிரகாம் தந்தை யார்? தெராகு
4. ஆபிரகாம் பிறந்த இடம் எது? ஊர் என்ற கல்தேயர் நகரில் ஆபிரகாம் பிறந்தார்.
5. ஆபிரகாமின் குலத்தொழில் என்ன? ஆடு மேய்த்தல்
6. ஆபிரகாம் தன் தந்தையுடன் எங்கே வாழத் தொடங்கினார்? ஆரான் (திருவிவிலியத்தில் காரான்)
7. ஆபிரகாமின் தந்தை இறந்த இடம் எது? ஆரான் (திருவிவிலியத்தில் காரான்)
8. “உன் **<u>நாட்டிலிருந்தும்</u>** உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்.
9. உன்னை நான் பெரிய **<u>இனமாக்குவேன்</u>**: உனக்கு ஆசி வழங்குவேன்.
10. உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்: நீயே **<u>ஆசியாக</u>** விளங்குவாய்” (தொநூ 12:1-2)
11. யார் கட்டளைப் படி ஆபிரகாம் கானான் நாட்டிற்கு புறப்பட்டுச் சென்றார்? கடவுளின்
12. கானான் தேசத்திற்கு ஆபிரகாம் யாரை தன்னுடன் அழைத்துச் சென்றார்? தம் மனைவி சாராவையும், சகோதரன் லோத்தையும்
13. உன் வழிமரபினர் கானான் தேசத்தை உடைமையாக்கிக் கொள்வார்கள் என்று எங்கே வைத்து ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்களித்தார்? செக்கேமில்
14. ஆபிரகாமை அழைத்ததன் மூலமாகவும் அவருக்கு அருளிய வாக்குறுதியின் மூலமாகவும் தமது எந்த விருப்பத்தை கடவுள் வெளிப்படுத்தினார்? மனித குலத்தை மீட்பதற்கான
15. யோர்தானின் சுற்றுப்புறப் பகுதியிலுள்ள நீர்வளம் நிறைந்த சோதோம் நகரை தேர்ந்தெடுத்தவர் யார்? லோத்து
16. லோத்து சோதோமில் வாழ்ந்த போது ஆபிரகாம் எங்கே வாழ்ந்திருந்தார்? கானான் தேசத்தில்
17. "நீ இருக்கும் இடத்திலிருந்து உன் கண்களை உயர்த்தி வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே பார். யார் யாரிடம் கூறியது? கடவுள் ஆபிரகாமிடம்.
18. ஏனெனில் நீ காணும் இந்த நாடு முழுவதையும் உனக்கும் உன் வழிமரபினருக்கும் என்றென்றும் கொடுக்கப்போகிறேன்” யார் யாரிடம் கூறியது? கடவுள் ஆபிரகாமிடம்.
19. லோத்தை அவரது சொத்துக்களுடன் எதிரிகள் கைது செய்த போது லோத்தை மீட்டவர் யார்? ஆபிரகாம்
20. எதிரிகளை தோற்கடித்து திருப்பி வந்த ஆபிரகாமை எந்த அரசர் வரவேற்றார்? சாலோம் அரசர் மெல்கிசதேக்கு
21. மெல்கிசதேக்கு எவ்வாறு ஆபிரகாமை வரவேற்றார்? அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்து
22. எந்த நகரங்களை தீமைகளின் பொருட்டு அழிப்பதாக கடவுள் ஆபிரகாமுக்கு தெரியப்படுத்தினார்? சோதோம், கொமோரா
23. சோதோம், கொமோரா நகரங்களை அழிப்பதாக கடவுள் கூறிய போது யாரை மீட்பதற்காக ஆபிரகாம்

www.malankaralibrary.com

கடவுளோடு வேண்டினார்? லோத்தையும் குடும்பத்தையும்

24. “வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால் விண்மீன்களை எண்ணிப் பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர்” (தொநூ. 15:5) யார் யாரிடம் கூறியது? கடவுள் ஆபிரகாமிடம்.
25. ஆபிரகாமுக்கு எந்த வயதில் ஈசாக்கு பிறந்தான்? நூறு வயது ஆனபோது
26. சாரா ஈன்றெடுத்த மகனுக்கு ஆபிரகாம் என்ன பெயரிட்டார்? ஈசாக்கு
27. ஆபிரகாமின் முதல் பெயர் என்ன? ஆபிராம்
28. 'ஆபிரகாம்' என்ற சொல்லின் பொருள் என்ன? 'பெரிய மக்களினங்களின் தந்தை'.
29. ஆபிராம் என்ற பெயரை ஆபிரகாம் என்று மாற்றியவர் யார்? ஆண்டவர்
30. 'சாராய்' என்ற பெயரை சாரா' என்று மாற்றியவர் யார்? ஆண்டவர்
31. 'சாரா' என்ற வார்த்தையின் பொருள் என்ன? அரசி'
32. "நீ அன்பு கூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக் கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். யார் யாரிடம் கூறியது? கடவுள் ஆபிரகாமிடம்.
33. “இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன. எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?” யார் யாரிடம் கூறியது? ஈசாக்கு ஆபிரகாமிடம்.
34. “எரிபலிக்கான ஆட்டுக்குட்டியை கடவுளே பார்த்துக் கொள்வார்” யார் யாரிடம் கூறியது? ஆபிரகாம் ஈசாக்கிடம்
35. “பையன்மேல் கை வைக்காதே ; அவனுக்கு எதுவும் செய்யாதே ; உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்.” யார் யாரிடம் கூறியது? ஆண்டவரின் தூதர் ஆபிரகாமிடம்.
36. “ஆபிரகாம் **ஆண்டவர்** மீது நம்பிக்கை கொண்டார். அதை **ஆண்டவர்** அவருக்கு நீதியாகக் கருதினார்” (தொநூ. 15:6).
37. தூய பவுல் ஆபிரகாமை எவ்வாறு சித்தரிக்கிறார்? நம்பிக்கையின் மறு உருவம்
38. திருச்சபை ஆபிரகாமை எவ்வாறு போற்றுகிறது? விசுவாசத்தின் தந்தை'
39. இஸ்ரயேலின் குலமுதுவர்களில் முதன்மையானவர் யார்? ஆபிரகாம்.
40. இறைவெளிப்பாடு யார் வழியாக தொடங்குகிறது? ஆபிரகாம்
41. யார் வழியாக கடவுள் ஒரு குலத்தை தேர்ந்தெடுத்து தமக்கு சொந்தமாக்கினார்? ஆபிரகாம்
42. கடவுளின் சொந்த மக்களாகிய இஸ்ராயேலரின் தந்தை யார்? ஆபிரகாம்.
43. ஆபிரகாமின் நம்பிக்கை எதற்கு அடையாளம் ஆகும்? முழுமையான சமர்ப்பணத்தின்
44. ஆபிரகாம் எந்த வயது வரை வாழ்ந்தார்? நூற்றியெழுபத்தைந்து
45. சாராவை அடக்கம் செய்ய ஆபிரகாம் விலைக்கு வாங்கிய குகை எங்குள்ளது? கானான் நாட்டில் எபிரோனில்
46. திருப்பலியில் பகிரங்கத் திருச்சடங்கிற்கு முன் பகுதியில் ஆபிரகாமின் பலியோடு தொடர்புடைய பாடல் யாது?
    “ஆபேலின் செம்மறியும் நோவாவின் எரிபலியும்
    ஆபிரகாமின் வேள்வியும் ஏற்றவராம் ஆண்டவரே
    நோன்பும் வேண்டுதலும் ஏற்று
    பரிவாய்ப் பதிலருளும் நாதா"
47. வீடுகளின் ஆசீர்வாத வேளையில் ஆபிரகாமுடன் தொடர்புடைய மன்றாட்டு எது?
    "ஆண்டவரே! எங்கள் தந்தையும், உம் நண்பனுமாகிய ஆபிரகாமின் விசுவாசம் உம்மை மகிழ்வித்தது போல எங்கள் மன்றாட்டு உம்மை மகிழ்விப்பதாக”.
48. திருமணத்தின் மகுடம் ஆசீர்வாத வேளையில் ஆபிரகாமுடன் தொடர்புடைய பாடல் எது?
    “ஆப்ரஹாம் சாராள் தமை வாழ்த்திய இறைவன் பேரருள்மிகையால்
    இவர்களை வாழ்த்தி அருள்வாரே தேவா கனியுக அடியார்மேல்”
49. திருப்பலியில் பகிரங்கத் திருச்சடங்கிற்கு முன் ஆபிரகாமை எதிர்கொண்ட மெல்க்கிசதேக்கைப் பற்றி எவ்வாறு பாடுகிறோம்?
    "நாங்கள் செலுத்தும் வேள்விகளில் மகிழ்வீர் ஆண்டவரே

www.malankaralibrary.com

அப்பரசங்களைப் பலிப்பொருளாய் நாங்கள் செலுத்துகிறோம்.
மெல்க்கிசதேக்கின் காணிக்கைபோல்
அடியார் வேள்வியையும் ஏற்பீர்"

50. பாஸ்கா வியாழன் திருப்பலியில் நற்கருணை பெறும் வேளையில் ஆபிரகாமை எதிர்கொண்ட மெல்க்கிசதேக்கைப் பற்றி எவ்வாறு பாடுகிறோம்?
மெல்கிசதேக்கால் சமர்ப்பணமானோர் அப்பரசங்கள் இதன் முன்குறியே
விண்ணோரின் தலைவா மகிமை மணாளா
துதிசெய்து நாங்கள் புகழ்த்துகின்றோமே.

51. ஆபிரகாம் கடவுளிடம் உள்ள நம்பிக்கை நமக்கு எவ்வாறு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது? இறைவனின் சிறப்பு அழைப்பை பெற்ற ஆபிரகாம் கடவுளை முழுமையாக நம்பினார் வாழ்க்கையில் ஒன்றும் எதிர்பார்க்க முடியாத வேளைகளில் கூட கடவுளிடம் முழுமையான நம்பிக்கை கொள்ளவும் கடவுள் காட்டிய வழியில் நடக்கவும் செய்தார். எதிர்பாராத அனைத்து துன்ப வேளைகளிலும் கடவுளில் முழுமையான அடைக்கலம் தேடியவரே ஆபிரகாம். ஆபிரகாமிற்கு கடவுளிடம் உள்ள நம்பிக்கை நமக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆபிரகாமைப் போலவே நாமும் கடவுளில் நம்பிக்கைக் கொள்வோம்.

**52.** "ஆபிரகாம் **கடவுள்** மீது நம்பிக்கை கொண்டார்; அதைக் **கடவுள்**. அவருக்கு நீதியாகக் கருதினார்". (உரோ. 4:3)

## பாடம் 4

## ஈசாக்கு வாக்குறுதியின் நிறைவு

**பயிற்சி வினாக்கள்**

1. ஈசாக்கின் பிறப்பைப் பற்றி சுருக்கமாக விவரி? நீண்ட நாள் காத்திருப்பிற்குப் பின் சாராயிடமிருந்து ஆபிரகாமுக்கு ஈசாக் பிறந்தார். அவரது பிறப்பு கடவுளின் ஆசீரின் பலனும் வாக்குறுதியின் நிறைவும் ஆகும்.

2. கடவுள் ஈசாக்கோடு செய்த வாக்குறுதி என்ன? ஒரு நாள் கடவுள் ஈசாக்கிடம் தோன்றி இவ்வாறு அருளினார்: "எகிப்து நாட்டிற்கு நீ போகாமல், நான் உனக்குக் காட்டும் நாட்டிலே தங்கியிரு. அந்நாட்டில் நீ அன்னியனாய் வாழ்வாய். நான் உன்னோடு இருந்து உனக்கு ஆசி வழங்குவேன். இந்த நிலங்கள் அனைத்தையும் உனக்கும் உன் வழிமரபினர்க்கும் தருவேன். உன் தந்தை ஆபிரகாமுக்கு நான் ஆணையிட்டுக் கூறிய வாக்குறுதியை உறுதிப்படுத்துவேன். உன் வழிபரபை விண்மீன்களைப்போல் பெருகச் செய்வேன். உன் வழிமரபினருக்கு இந்த நிலங்கள் அனைத்தையும் தருவேன். உலகின் அனைத்து இனத்தாரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர்" (தொநூ 26:2-4).

3. ஈசாக்கு இயேசுவின் முன்னடையாளம் எவ்வாறு? பலி செலுத்த தேவையான விறகுடன் மலை ஏறிய ஈசாக் தமது சிலுவையும் சுமந்து கொகுல்த்தா செல்கின்ற இயேசுவின் முன் அடையாளம்.

4. ஈசாக்கின் புதல்வர்களின் சிறப்புகள் யாவை? ஈசாக்கிற்கும் ரெபேக்காவுக்கும் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். முதலில் பிறந்தது ஏசா. அவனது உடல் முழுவதும் உரோமமாக இருந்தது. 'ஏசா' என்ற வார்த்தைக்கு அடர்ந்த உரோமம் உடையவன்' என்று பொருள். பிறப்பின் வேளையில் யாக்கோபு ஏசாவின் குதிகாலைக் கையால் பற்றிக்கொண்டிருந்தார். 'யாக்கோபு' என்ற வார்த்தைக்கு 'ஏமாற்றுபவன்' என்று பொருள்.

5. ஈசாக் என்ற வார்த்தையின் பொருள் என்ன? ஈசாக்கு என்ற வார்த்தைக்கு சிரிப்பவன்' என்பது பொருள்.

6. ஏசா என்ற வார்த்தையின் பொருள் என்ன? 'ஏசா' என்ற வார்த்தைக்கு அடர்ந்த உரோமம் உடையவன்' என்று பொருள்.

## குறுவினாவிடைகள்

1. ஈசாக்கின் பெற்றோர் பெயர் என்ன? ஆபிரகாம், சாராயி
2. குலமுதுவர்களில் இரண்டாவது நபர் யார்? ஈசாக்கு.
3. ஆபிரகாமில் கடவுள் தொடங்கிய வெளிப்பாடு யார் வழியாக தொடர்ந்தது? ஈசாக்கு.
4. முதுமையில் ஒரு மகன் பிறப்பான் என்று கடவுள் வாக்களித்தபோது சாரா செய்த்து என்ன? தமக்குள்

www.malankaralibrary.com

சிரித்துக் கொண்டாள்.

5. வாக்களிக்கப்பட்ட நாடு கிடைக்குமென்ற நம்பிக்கையோடு ஈசாக்கு எங்கே வாழ்ந்து வந்தார்? கானான் நாட்டில்
6. "எகிப்து நாட்டிற்கு நீ போகாமல், நான் உனக்குக் காட்டும் நாட்டிலே தங்கியிரு. அந்நாட்டில் நீ அன்னியனாய் வாழ்வாய். யார் யாரிடம் கூறியது? கடவுள் ஈசாக்கிடம்
7. நான் உன்னோடு இருந்து உனக்கு ஆசி வழங்குவேன். இந்த நிலங்கள் அனைத்தையும் உனக்கும் உன் வழிமரபினர்க்கும் தருவேன். யார் யாரிடம் கூறியது? கடவுள் ஈசாக்கிடம்
8. உன் தந்தை ஆபிரகாமுக்கு நான் ஆணையிட்டுக் கூறிய வாக்குறுதியை உறுதிப்படுத்துவேன். யார் யாரிடம் கூறியது? கடவுள் ஈசாக்கிடம்
9. உன் வழிபரபை விண்மீன்களைப்போல் பெருகச் செய்வேன். உன் வழிமரபினருக்கு இந்த நிலங்கள் அனைத்தையும் தருவேன். யார் யாரிடம் கூறியது? கடவுள் ஈசாக்கிடம்
10. உலகின் அனைத்து இனத்தாரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர்" (தொநூ 26:2-4). யார் யாரிடம் கூறியது? கடவுள் ஈசாக்கிடம்
11. ஈசாக்கு எந்த வயதில் ரெபேக்காவை மணந்து கொண்டார்? நாற்பது வயதானபோது
12. குழந்தைப் பேறின்றி இருந்த ரெபேக்காவுக்கு பிறந்த இரட்டைப் பிள்ளைகள் யாவர்? 'ஏசா' 'யாக்கோபு'
13. 'ஏசா'வின் தனிச்சிறப்பு என்ன? ஏசாவின் உடல் முழுவதும் உரோமமாக இருந்தது.
14. 'ஏசா' என்ற வார்த்தைக்கு பொருள் என்ன? அடர்ந்த உரோமம் உடையவன்'
15. பிறப்பின் வேளையில் ஏசாவின் குதிகாலைக் கையால் பற்றிக்கொண்டே பிறந்தவர் யார்? யாக்கோபு
16. 'யாக்கோபு' என்ற வார்த்தைக்கு என்ற வார்த்தைக்கு பொருள் என்ன? 'ஏமாற்றுபவன்'
17. ஈசாக்கிற்கு குழந்தைகள் பிறந்த போது வயது எத்தனை? அறுபது வயது
18. ஈசாக்கு யாரை அதிகமாக விரும்பினார்? மூத்த மகன் ஏசாவை
19. ரெபேக்கா யாரை அதிகமாக விரும்பினார்? யாக்கோபுவை
20. ஒரு பாத்திரம் கூழுக்காக தலைமகனுரிமையை விற்றவர் யார்? ஏசா
21. ஈசாக்கு தமது ஆசியை யாருக்கு வழங்க விரும்பினார்? ஏசாவுக்கு
22. யார் உதவியுடன் யாக்கோபு ஆசியைத் தட்டிச் சென்றான்? ரெபேக்காவின்
23. ஈசாக்கு இறுதி காலத்தில் எங்கே வாழ்ந்து வந்தார்? எபிரோன்
24. எந்த வயதில் ஈசாக்கு இறந்தார்? நூற்றி எண்பது
25. ஈசாக்கை அடக்கம் செய்தவர்கள் யாவர்? யாக்கோபும் ஏசாவும்
26. ஆபிரகாமையும் சாராவையும் அடக்கம் செய்த எங்குள்ள குகையில் ஈசாக்கை அடக்கம் செய்தனர்? மாம்ரேயிலுள்ள
27. ஈசாக் கடவுளிடம் கொண்ட பக்தி பற்றிக் கூறுக? தமது தந்தையாகிய ஆபிரகாமுக்கு கடவுள் அளித்த வாக்குறுதியை தமக்கும் தமது வழி மரபினருக்கும் வழங்குவார் என நம்பினார். ஆபிரகாமைப் போலவே ஈசாக்கும் சிறந்த முறையில் கடவுளை நம்பினார். கடவுள் ஆபிரகாமை ஆசீர்வதித்ததைப் போலவே ஈசாக்கையும் ஆசீர்வதித்தார். பலியிட கொண்டு சென்ற ஈசாக்கை மீட்டது கடவுளே. பலிபீடத்திலிருந்து கடவுள் அவனுக்கு மறுவாழ்வு கொடுத்தார். இவ்வாறாக கடவுள் தமது வாக்குறுதியை ஈசாக்கிடமும் தொடர்ந்தார். கடவுளுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்த ஈசாக்கு கடவுளின் வாக்குறுதியை சிரமேற் கொண்டு இறுதிவரை வாழ்ந்தார். ஈசாக்கிடம் தொடர்பு கொண்ட வேளைகளிலெல்லாம் கடவுள் மனிதர்களைப் பற்றிய தமது திட்டங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

www.malankaralibrary.com

28. திருவழிபாட்டில் தூய நற்கருணை பெறும் போது பாடப்படுகின்ற ஈசாக்கை பற்றிய பாடல் எது?

“சீயோன் சிலுவை மகனை அறைய நாட்டியதாலே

சிலுவை சிறுமறி தருகனிமரமாய் மாறியதங்கே

அறையுண்டனவே இறைமகன் கைகள் ஆணியாலிங்கே

ஈசாக்கவரின் கட்டுகளனைத்தும் அவிழ்ந்ததுமிங்கே.

29. பாஸ்காவியாழன் நாளில் தூய நற்கருணை பெறும் போது பாடப்படுகின்ற ஈசாக்கை பற்றிய பாடல் எது?

"புதரில் கண்ட- ஆட்டின் வழியாய் ஈசாக்கை அன்று - மீட்டோரிவர்தான் விண்ணோரின் தலைவா மகிமை மணாளா துதிசெய்து நாங்கள் புகழ்ந்துகின்றோமே."

30. இறந்தவர்களுக்காக மன்றாடும் செதறாவில் ஈசாக்கை எவ்வாறு நினைவு கூர்கிறோம்? "எம் ஆண்டவரே, உம் அன்பர்களான ஆபிரகாம். ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் உம் திரு விருப்பம் நிறைவேற்றி, உம்மைப் பற்றிய எதிர்நோக்கில் துயிலடைந்த விசுவாசிகள் அனைவரோடும், உம் தந்தையின் வாழ்த்தப்பட்ட இல்லங்களில் இவரை வாழ செய்வீராக”,

31. மாலை மன்றாட்டில் ஈசாக்கை எவ்வாறு நினைவு கூர்கிறோம்? “ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்னும் மூதாதையரின் அருகில் அவர்களை வாழச் செய்தருளும்”.

32. ஈசாக்கின் நம்பிக்கை வாழ்வு எவ்வாறு நமக்கு எடுத்துக்காட்டாக உள்ளது? கடவுளின் விருப்பத்திற்கு உடன்பட்டு வாழ்ந்தவர் தான் ஈசாக்கு. தம் வாழ்க்கை முழுவதும் அவர் கடவுளிடம் நம்பிக்கை கொண்டு கடவுள் நடத்திய வழிகளில் பயணம் செய்யவும் செய்தார். இறை விருப்பத்தை புரிந்துகொள்ளவும் இறை விருப்பப்படி வாழவும் நாம் முயல்வோம். கடவுளிடம் நம்பிகையுள்ளவர்களாக வாழ்ந்து கடவுளை மகிமைப்படுத்துவோம்.

**33.** “ஆண்டவரது உடன்படிக்கையையும் ஒழுங்கு முறையையும் கடைப்பிடிப்போர்க்கு அவருடைய பாதைகளெல்லாம் **பேரன்பும், உண்மையும்** உள்ளனவாய் விளங்கும்”. (திருப்பாடல்கள் 25:10)

**பாடம் 5**

## குலத்தந்தை யாக்கோபு

**பயிற்சி வினாக்கள்**

1. யாக்கோபிற்கு தலைமகனுரிமை எவ்வாறு கிடைத்தது? ஈசாக்கு முதுமையடைந்தபோது தமது ஆசியை மூத்த மகனுக்கு வழங்கிய பின் மரணமடைய விரும்பினார். ஏசா வேட்டையாடி கிடைக்கின்ற வேட்டைக்கறி சமைத்து சாப்பிட வேண்டும் என ஆசி வழங்கும் முன் ஈசாக்கு விரும்பினார். ஈசாக்கின் இந்த விருப்பத்தை அறிந்த ரபேக்கா, ஆசீர் யாக்கோபுக்கு கிடைக்க வேண்டுமென ஆசைப்பட்டாள். ஏசா வேட்டை கறிக்குச் சென்றபோது ரபேக்கா தம் மகன் யாக்கோபை அழைத்து ஈசாக்கின் தீர்மானத்தை அறிவித்தாள். ரபேக்காவின் கட்டளையின் படி யாக்கோபு இரண்டு ஆடுகளை பிடித்துக் கொண்டு வந்தார். ரபேக்கா அவற்றை மிகவும் சுவையான முறையில் சமைத்தாள். ஏசா உடன் முழுவதும் அடர்ந்த உரோமமுடையவன். ஆனால் யாக்கோபின் உடல் மிருதுவாகயிருந்தது. ஆகவே ரபேக்கா தமது மூத்த மகன் ஏசாவினுடைய விலையுயர்ந்த ஆடைகளை எடுத்து யாக்கோபிற்கு அணிவித்தாள். ரபேக்கா சமைத்த இறைச்சியும் அப்பமும் கொண்டு யாக்கோபு ஈசாக்கிடம் சென்றார். மூத்த மகனென்று நினைத்து ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தார் (தொநூ. 27:1-29).

2. யாக்கோபு கடவுளை கண்டடைந்த நிகழ்ச்சிகளை விவரி? யாக்கோபு லாபானிடம் செல்கின்ற வேளையில் கடவுளின் வெளிப்பாடு அவருக்கு கிடைக்கிறது. பயணத்தின் நடுவில் ஓரிடத்தில் தங்கி அங்கேயே இரவைக் கழித்தார். தூக்கத்தில் யாக்கோபிற்கு ஒரு கனவு தோன்றியது. நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தை தொட்டுக் கொண்டு இருந்தது. அதில் கடவுளின் தூதர் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர். ஆண்டவர் அதற்கு மேல் நின்று கொண்டு. இவ்வாறு அருளினார் : “உன்

www.malankaralibrary.com

மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே. நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தந்தருள்வேன். உன் வழிமரபோ நிலத்தில் மணலுக்கு ஒப்பாகும்... உன்னிலும் உன் வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசி பெறுவன்". அப்போது யாக்கோபு தூக்கத்திலிருந்து விழித்தார். இது இறைவனின் இல்லமன்றி வேறொன்றுமில்லை என்று கூறி அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பெயரிட்டார் (தொநூ. 28:10-26). "பெத்தேல் என்று சொல்லிற்கு 'கடவுளின் இல்லம்' என்று பொருள்.

லாபானிடமிருந்து திரும்பி ஈசாக்கிடம் சென்றபோதும் யாக்கோபிற்கு வெளிபாடு கிடைத்தது. ஓர் இரவில் பொழுது விடியும் வரை ஓர் ஆடவர் யாக்கோபோடு மற்போரிட்டார். பொழுது புலர்ந்ததும் மற்போர் நடத்தியவர் போக முற்பட்டார். "நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போக விடேன்" என்று யாக்கோபு கூறினார். அப்போது அவர் கூறினார்: "உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாது, இஸ்ராயேல் எனப்படும். ஏனெனில் நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்" . "இஸ்ரயேல்' என்ற வார்த்தைக்கு 'இறைவனோடு போராடுகிறவன்' என்று பொருள். 'கடவுளின் முகத்தை நான் நேரில் கண்டேன்' என்று கூறி யாக்கோபு அந்த இடத்திற்கு 'பெனியேல்' என்று பெயரிட்டார். "பெனியேல்' என்ற வார்த்தைக்கு 'இறைவனின் முகம்' என்று பொருள்.

3. இஸ்ராயேல் என்ற பெயர் யாக்கோபிற்கு எவ்வாறு கிடைத்தது? லாபானிடமிருந்து திரும்பி ஈசாக்கிடம் சென்றபோதும் யாக்கோபிற்கு வெளிப்பாடு கிடைத்தது. ஓர் இரவில் பொழுது விடியும் வரை ஓர் ஆடவர் யாக்கோபோடு மற்போரிட்டார். பொழுது புலர்ந்ததும் மற்போர் நடத்தியவர் போக முற்பட்டார். "நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போக விடேன்" என்று யாக்கோபு கூறினார். அப்போது அவர் கூறினார்: "உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாது, இஸ்ராயேல் எனப்படும். ஏனெனில் நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்". "இஸ்ரயேல்' என்ற வார்த்தைக்கு 'இறைவனோடு போராடுகிறவன்' என்று பொருள்.

4. குறிப்பு வரைக : யாக்கோபின் திருமணம்

லாபானின் புதல்வியர்களான லேயாவையும் ராகேலையும் யாக்கோபு மணந்தார். இருபது வருடங்கள் யாக்கோபு லாபானிற்காக வேலை செய்தார். இருபது வருடத்திற்கு பின் யாக்கோபு தமது குடும்பத்தினர்களோடும் உடமைகளோடும் சேர்ந்து லாபானிடமிருந்து தப்பியோடினர்.

5. குறிப்பு வரைக : யாக்கோபின் இறப்பு

கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்ட போது கடவுளின் திட்டப்படி யாக்கோபு எகிப்திற்குச் சென்றார். அங்கே யாக்கோபு தமது புதல்வர்களுடன் வாழ்ந்து வந்தார். யாக்கோபு இறக்கும் தருவாயில் தமது புதல்வர்களை அழைத்து ஆசீர்வதித்தார். யாக்கோபிற்கு லேயாவில் பிறந்த நான்காவது புதல்வன் யூதாவிற்கு தலைமகனுரிமை கிடைத்தது. தமது தந்தையைப் போலவே தம்மையும் அடக்கம் செய்ய வேண்டுமென்பதே யாக்கோபின் இறுதி ஆசையாயிருந்தது. யாக்கோபின் இறப்பின் பொருட்டு எகிப்தியர் எழுபது நாட்கள் அவரை நினைத்து அழுதனர்.

**குறு வினாவிடைகள்**

1. குலமுதுவர்களில் மூன்றாமவர் யார்? யாக்கோபு.
2. ஈசாக்கு ரபேக்கா தம்பதியினரின் இரண்டாம் புதல்வன் யார்? யாக்கோபு.
3. இஸ்ராயேலின் பன்னிரெண்டு குலங்களின் தந்தை என்ற நிலையில் மீட்பு வரலாற்றில் மிகச் சிறந்த இடம் பெற்றுள்ளவர் யார்? யாக்கோபு
4. குலமுதுவர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோருக்கு கடவுள் அளித்த வாக்குறுதி **யாக்கோபு** வழியாகவும் தொடர்ந்தது.
5. வேட்டையாடுவதில் சிறந்தவனும், பயிரிடுபவனுமாயிருந்த யாக்கோபின் மகன் யார்? ஏசா
6. யூத மரபுப்படி மூத்த மகனுக்கு உரிய உரிமைகள் யாவை? யூத மரபுபடி குடும்பத்தில் மூத்த மகன் தலைமகனுரிமைக்கும் தந்தையின் வீட்டிற்கும் குடும்பத்திற்கும் உரிமையாளன் ஆவான்.
7. ஈசாக்கின் புதல்வர்களில் தலைமகனுரிமை ஆசிக்குரியவனாக கடவுள் யாரைத் தேர்ந்தெடுத்தார்? இளைய

மகனான யாக்கோபை

8. யாக்கோபு வயிற்றிலிருக்கும் போதே 'அவனைத் தேர்ந்தெடுப்பேன்' என்று கடவுள் யாரை அறிவித்திருந்தார்? ரபேக்காவுக்கு
9. சிறிதளவு கூழுக்காக தமது தலைமகனுரிமையை விற்று விட்டார்? ஏசா
10. மூத்த மகனென்று நினைத்து ஈசாக்கு யாரை ஆசீர்வதித்தார்? யாக்கோபை
11. ஏசாவின் கோபத்தை அறிந்த யாக்கோபு பெற்றோர்களின் ஆசியுடன் எங்கே சென்றார்? பதான்அராம்
12. பதான்அராமிலுள்ள ரபேக்காவின் சகோதரன் யார்? லாபான்
13. யாக்கோபுக்கு கடவுள் முதல் காட்சியின் போது வெளிப்படுத்தியது என்ன? “உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே. நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தந்தருள்வேன். உன் வழிமரபோ நிலத்தில் மணலுக்கு ஒப்பாகும்... உன்னிலும் உன் வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசி பெறுவன".
14. கடவுளின் முதல் காட்சி கண்ட இடத்திற்கு யாக்கோபு போட்ட பெயர் என்ன? பெத்தேல்
15. "பெத்தேல் என்று சொல்லிற்கு என்ன பொருள்? 'கடவுளின் இல்லம்'
16. லாபானிடமிருந்து திரும்பி ஈசாக்கிடம் சென்றபோது யாக்கோபு கண்ட இரண்டாம் காட்சியில் பொழுது விடியும் வரை மற்போரிட்டவர் யார்? ஓர் ஆடவர்
17. இரண்டாம் காட்சியில் மற்போரிட்ட ஆடவரிடம் யாக்கோபு கேட்டது என்ன? “நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போக விடேன்”
18. யாக்கோபுக்கு கடவுள் இரண்டாம் காட்சியின் போது வெளிப்படுத்தியது என்ன? "உன் பெயர் இனி யாக்கோபு எனப்படாது, இஸ்ராயேல் எனப்படும். ஏனெனில் நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்”.
19. “இஸ்ரயேல்' என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? 'இறைவனோடு போராடுகிறவன்'
20. கடவுளின் இரண்டாம் காட்சி கண்ட இடத்திற்கு யாக்கோபு போட்ட பெயர் என்ன? 'பெனியேல்'
21. கடவுளின் இரண்டாம் காட்சி கண்ட இடத்திற்கு யாக்கோபு எதைக்கூறி 'பெனியேல்' எனப்பெயரிட்டார்? 'கடவுளின் முகத்தை நான் நேரில் கண்டேன்'
22. “பெனியேல்' என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? 'இறைவனின் முகம்'
23. இஸ்ராயேலில் கடும் பஞ்சம் ஏற்பட்ட போதும் **<u>செக்கேமில்</u>** வாழ்ந்த வேளையிலும் கடவுள் தோன்றி தம்மைத்தாமே யாக்கோபிற்கு வெளிப்படுத்தினார்.
24. யாக்கோபு மணந்த லாபானின் புதல்வியர்கள் யாவர்? லேயா ராகேல்
25. எத்தனை வருடங்கள் யாக்கோபு லாபானிடம் வேலை செய்தார்? இருபது வருடங்கள்.
26. இருபது வருடத்திற்கு பின் யாக்கோபு எங்கே லாபானிடமிருந்து தப்பியோடினர்? கானான் தேசத்திற்கு
27. யாக்கோபிற்கு எத்தனை புதல்வர்கள் பிறந்தனர்? பன்னிரண்டு
28. யாக்கோபு தம் புதல்வர்களுள் யாரை அதிகமாக அன்பு செய்தார்? யோசேப்பை
29. கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்ட போது கடவுளின் திட்டப்படி யாக்கோபு தமது புதல்வர்களுடன் எங்கே சென்றார்? எகிப்திற்கு
30. யாக்கோபு தலைமகனுரிமை வழங்கிய லேயாவில் பிறந்த நான்காவது புதல்வன் யார்? யூதா
31. யாக்கோபின் இறப்பின் பொருட்டு எகிப்தியர் எத்தனை நாட்கள் அவரை நினைத்து அழுதனர்? எழுபது நாட்கள்
32. வீடு அர்ச்சித்தலின் மன்றாட்டில் யாக்கோபை எவ்வாறு நினைவு கூறுகிறோம்? “சோதோமில் தீயிலிருந்து

www.malankaralibrary.com

லோத்தை மீட்டு, லாபானின் இல்லத்தில் யாக்கோபை சோதித்து மேன்மைபடுத்தி செல்வம் பெருகச் செய்தீர்." யாக்கோபைக் பாதுகாத்து மேன்மையடைய செய்ததை போல் நமது இல்லங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென இவ்வேளையில் நாம் மன்றாடுகிறோம்.

33. இறந்தவர்களுக்கான போவூஸோவில் யாக்கோபை எவ்வாறு நினைவு கூறுகிறோம்? "ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபின் மடியில் மடிந்தவரெல்லாரும் வாழச் செய்திடுவீர்." குலத்தந்தையர்களான ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு ஆகியோரிடம் இறந்தவர் களையும் சேர்க்க வேண்டும் என்பதுதான் மன்றாட்டு.

34. திருமணத் திருச்சடங்கில் யாக்கோபை எவ்வாறு நினைவு கூறுகிறோம்? "யாக்கோபு ராக்கேல் தமை வாழ்த்திய இறைவன் பேரருள் மிகையால் இவர்களை வாழ்த்தி அருள்வாரே தேவா கனியுக அடியார்மேல்". மணமக்களின் வாழ்க்கையில், யாக்கோபு ராகேல் இவர்களை கடவுள் ஆசீர்வதித்ததைப் போல், இம்மணமக்களையும் ஆசீர்வதிக்க வேண்டும் என விசுவாசிகள் வேண்டுகின்றனர்.

**35.** "ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும் **<u>நீதியுடையவர்</u>**. அவர் தம் செயல்கள் யாவும் இரக்கச் செயல்களே". (திருப்பாடல்கள் 145:17)

**பாடம் 6**

## ஆளுநரான யோசேப்பு

**பயிற்சி வினாக்கள்**

1. யோசேப்பின் குலமுதுவர்கள் யாவர்? அவர்களின் குலத்தொழில் என்ன? குலமுதுவர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் குலத்தொழில் ஆடு வளர்த்தல் ஆகும். யாக்கோபின் புதல்வர்களும் இத்தொழிலைத் தொடர்ந்தனர்.

2. யோசேப்பின் சகோதரர்கள் அவரை வெறுக்க காரணம் என்ன? ஒரு நாள் யோசேப் ஒரு கனவு கண்டார். யோசேப்பும் அவரது சகோதரர்களும் வயலில் அறுத்த தூதர்களை கட்டும் பொழுது யோசேப்பின் கட்டு எழுந்து நின்றது. அப்போது சகோதரர்களுடைய கட்டுகள் யோசேப்பின் கட்டை சுற்றி வணங்கின. யோசேப்பு சகோதரர்களைவிட உயர்வடைவார் என்றும் அவர்கள் யோசேப்பை நாடுவர் என்றும் கடவுள் இக்கனவின் வழியாக விளக்கினார். இந்த கனவின் காரணமாக அவரது சகோதரர்கள் அவரை இன்னும் அதிகமாய் வெறுத்தனர். வேறொரு வேளையில் கதிரவனும் நிலவும் பதினொரு விண்மீன்களும் அவரை வணங்குவதாக யோசேப்பு கனவு கண்டார். அவர் இதைக் கூறிய போது சகோதரர்கள் அவர் மீது பொறாமை கொண்டனர். சகோதரர்கள் அவன் மீது வெறுப்பைக் காட்டினர்.

3. யோசேப்பின் கனவுகள் யாவை? அவற்றின் பொருள் என்ன? 1. ஒரு நாள் யோசேப் ஒரு கனவு கண்டார். யோசேப்பும் அவரது சகோதரர்களும் வயலில் அறுத்த தூதர்களை கட்டும் பொழுது யோசேப்பின் கட்டு எழுந்து நின்றது. அப்போது சகோதரர்களுடைய கட்டுகள் யோசேப்பின் கட்டை சுற்றி வணங்கின. யோசேப்பு சகோதரர்களைவிட உயர்வடைவார் என்றும் அவர்கள் யோசேப்பை நாடுவர் என்றும் கடவுள் இக்கனவின் வழியாக விளக்கினார். 2. வேறொரு வேளையில் கதிரவனும் நிலவும் பதினொரு விண்மீன்களும் அவரை வணங்குவதாக யோசேப்பு கனவு கண்டார்.

4. பார்வோனின் கனவுகள் யாவை ? யோசேப்பு அவற்றை எவ்வாறு விளக்கினார்? ஒரு நாள் பார்வோன் ஒரு கனவு கண்டார். பார்வோன் நைல் நதிக் கரையில் நின்றுகொண்டிருந்த போது அழகிய கொழுத்த ஏழு பசுக்கள் நதியிலிருந்து கரைக்கு வந்தன. தொடர்ந்து நலிந்து மெலிந்த ஏழு பசுக்கள் நதியிலிருந்து கரைக்கு வந்து கொழுத்த பசுக்களின் அருகில் நின்றன. நலிந்து மெலிந்த பசுக்கள் கொழுத்த அழகிய பசுக்களை விழுங்கி விட்டன. அதன் பின் பார்வோன் துயில் கலைந்தான். மீண்டும் அவர் தூங்கிய போது வேறொரு கனவு கண்டார். செழுமையான பொன் நிறமான ஏழு கதிர்கள் ஒரே நாளில் தோன்றியிருந்தன. அதன் பின் கீழைக் காற்றினால் தீய்ந்து போன ஏழு கதிர்கள் தோன்றின. அந்த பதரான கதிர்கள் ஏழும் செழுமையான முற்றிய கதிர்களை விழுங்கிவிட்டன. துயில் கலைந்தபோது தான் கண்டது ஒரு கனவு என்பதை பார்வோன் உணர்ந்தான். காலையில் எகிப்தின் அனைத்து மந்திரவாதிகளையும் ஞானிகளையும் வரவழைத்து தமது கனவின் பொருளை விளக்க பார்வோன் கேட்டான் எனினும் யாராலும் அதை விளக்க இயலவில்லை . இறுதியில் மது பரிமாறுவோனின் வேண்டுகோளுக்கிணங்க சிறையிலிருந்து

www.malankaralibrary.com

யோசேப்பைக் கொண்டு வந்தனர். யோசேப்பு, பார்வோனின் கனவை விளக்கினார். எகிப்து நாடு முழுவதும் மிகவும் வளமான ஏழு ஆண்டுகள் வரவிருக்கின்றன. தொடர்ந்து பஞ்சமான ஏழு ஆண்டுகள் வரவிருக்கின்றன. அப்போது எகிப்தின் வளமையான காலம் மறந்து போகும். வரவிருக்கும் பஞ்சம் மிகவும் கொடியதாயிருக்கும் (தொ.நூ. 41:1-36).

5. இஸ்ராயேலர் எகிப்திற்கு ஏன் சென்றனர்? எகிப்தில் தானியங்கள் இருக்கின்றதை அறிந்த யாக்கோபு தமது புதல்வர்களை எகிப்திற்கு அனுப்பினார். தானியம் வாங்கச் சென்ற யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடையாளம் காணவில்லை. ஆனால் யோசேப்பு தமது சகோதரர்களை அடையாளம் கண்டு கொண்டார். யோசேப்பு தம்மை சகோதரர்களுக்கு வெளிப்படுத்தினார். பின்னர் யோசேப்பின் விருப்பப்படி யாக்கோபு தமது அனைத்து குடும்ப உறுப்பினர்களுடனும் சொத்துக்களுடனும் எகிப்திற்கு பயணம் செய்தார். இவ்வாறாக அவர்கள் எகிப்தில் குடியேறினர்.

6. யோசேப்பு எவ்வாறு எகிப்தில் ஆளுநரானார்? பஞ்சத்தை கையாளும் பொறுப்பை பார்வோன் யோசேப்பிடம் ஒப்படைத்தார். நாட்டின் மிகவும் உயர்ந்த ஊழியனாக பார்வோன் அவரை நியமித்தார். பஞ்சத்தை எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை யோசேப்பு மேற்கொண்டார். வளமான ஏழு வருடங்களில் கணக்கற்ற தானியங்களை யோசேப்பு சேகரித்தார். பஞ்சத்தின் ஆண்டுகள் தொடங்கிய பொழுது எகிப்தில் ஏராளமான தானியங்கள் இருந்தன. யோசேப்பிடமிருந்து தானியங்களை வாங்க அனைத்து தேசங்களிலிருந்தும் ஆட்கள் வந்தனர். இவ்வாறு யோசேப்பு எகிப்தில் மிகப்பெரிய பொறுப்பை வகித்திருந்தார்.

7. புனிதர்களை நாம் ஏன் வணங்கவேண்டும்? எகிப்தில் வைத்து இறந்த யோசேப்பின் எலும்புகளை மோசே கானான் நாட்டிற்கு கொண்டு வந்தார். இதையே இந்த மன்றாட்டில் நினைவு கூர்கிறோம். மோசே யோசேப்பை மதித்ததுபோல் நாமும் புனிதர்களை மதிக்க வேண்டும். நாம் தண்டனை தீர்ப்புக்குள்ளாகாதிருக்க அவர்கள் நமக்காக மன்றாடுவார்கள்.

## குறு வினா விடைகள்

1. யோசேப்பின் பெற்றோர் யாவர்? யாக்கோபு, ராகேல்
2. யாக்கோபின் பதினொன்றாவது புதல்வன் யார்? யோசேப்பு
3. 'யோசேப்பு' என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? 'சேர்த்துத் தருகிறார்'
4. குலமுதுவர்களான குலத்தொழில் என்ன? ஆடு வளர்த்தல்
5. யாக்கோபின் புதல்வர்களின் குலத்தொழில் என்ன? ஆடு வளர்த்தல்
6. லாபானிடமிருந்து ஓடிப்போன யாக்கோபு எங்கே வாழ்ந்து வந்தார்? கானான் தேசத்தில்.
7. யாக்கோபின் மிகவும் அன்புக்குரிய புதல்வன் யார்? யோசேப்பு
8. யாக்கோபின் புதல்வர்கள் யாரை எகிப்திய வணிகக் குழுவிடம் விற்றனர்? யோசேப்பை
9. யாக்கோபின் புதல்வர்கள் எகிப்திய வணிகக் குழுவிடம் எந்த விலைக்கு யோசேப்பை விற்றனர்? இருபது வெள்ளிக்காசுக்கு
10. எகிப்திய வணிகக் குழுவிடமிருந்து யோசேப்பை விலைக்கு வாங்கிய பார்வோனின் ஊழியர் யார்? போத்திபர்
11. யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்ட போது சிறையிலிருந்த யாருடைய கனவுகளுக்கு விளக்கம் கொடுத்தார்? பார்வோனுக்கு மது பரிமாறுவோனும், அப்பம் தயாரிப்போனும்
12. பார்வோனின் கனவை விளக்க மது பரிமாறுவோன் யாரை பரிந்துரைத்தான்? யோசேப்பைக்
13. பஞ்சத்தை கையாளும் பொறுப்பை பார்வோன் யாரிடம் ஒப்படைத்தார்? யோசேப்பிடம்
14. நாட்டின் மிகவும் உயர்ந்த ஊழியனாக பார்வோன் யாரை நியமித்தார்? யோசேப்பை
15. யோசேப்பு எந்த எகிப்திய பெண்ணான திருமணம் செய்தார்? ஆசினத்து

www.malankaralibrary.com

16. பார்வோனிடம் பணியாளனாக பொறுப்பேற்றபொழுது யோசேப்பிற்கு வயது எத்தனை? முப்பது.

17. யோசேப்பின் புதல்வர்கள் யாவர்? மனாசே, எப்ராயிம்

18. மனாசே என்பதற்கு பொருள் என்ன? 'மறத்தல்'

19. எப்ராயிம் என்பதற்கு பொருள் என்ன? 'பலுகுதல்'

20. யாக்கோபு தமது புதல்வர்களை தானியங்களுக்காக எங்கே அனுப்பினார்? எகிப்திற்கு

21. யாக்கோபு தமது இறப்பின் வேளையில் யாரை ஆசீர்வதித்தார்? தமது புதல்வர்களையும் யோசேப்பின் புதல்வர்களையும் ஆசீர்வதித்தார்.

22. யோசேப்பின் ஆயுள் எத்தனை? நூற்றுப்பத்து ஆண்டுகள்.

23. தமது எலும்புகளை எகிப்திலிருந்து எடுத்துச் சென்று மூதாதையரோடு அடக்கம் செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டவர் யாவர்? யோசேப்பு

24. திருமணத் திருச்சடங்கில் யோசேப்பை நினைவு கூரும் பாடல் எது? எகிப்தினில் யௌசே-ப்பினை வாழ்த்திய இறைவன் பேரருள் மிகையால் இவர்களை வாழ்த்தி அருள்வா-ரே தேவா கனியுக அடியார்மேல்

25. மணமக்களை ஆசீர்வதிக்கும்போது பாடப்படுகின்ற பாடலே இது. எகிப்தில் வைத்து யோசேப்பை ஆசீர்வதித்தது போல் இந்த மணமக்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென விசுவாசிகள் அனைவரும் சேர்ந்து மன்றாடுகின்றனர்.

26. யோசேப்பின் எலும்புகளை கானான் நாட்டிற்கு கொண்டு வந்தது பற்றிய பாடல் எது?

"யோசேப்பவரின் எலும்புகளை மோசே வணங்கியதால்

நாமும் வணங்குவம் புனிதர் எலும்புகளை

அது நம் கடமையுமாமன்றோ

இறைவன் சினந்தெழுமாம் காலை

நீதியின் தண்டதனால் நம்மை

அடியாமல் வேண்டிடுவாரவர்கள்.

எகிப்தில் வைத்து இறந்த யோசேப்பின் எலும்புகளை மோசே கானான் நாட்டிற்கு கொண்டு வந்தார். இதையே இந்த மன்றாட்டில் நினைவு கூர்கிறோம். மோசே யோசேப்பை மதித்ததுபோல் நாமும் புனிதர்களை மதிக்க வேண்டும். நாம் தண்டனை தீர்ப்புக்குள்ளாகாதிருக்க அவர்கள் நமக்காக மன்றாடுவார்கள்.

27. இல்ல ஆசீர்வாதத்தின் வேளையில் எவ்வாறு யோசேப்பை நினைவு கூர்கிறோம்? எகிப்தில் வைத்து யோசேப்பினை உமது பராமரிப்பினால் பாதுகாத்து அவரை ஆட்சியாளரும். ஆளுநருமாக உயர்த்தி அவரது செல்வச் செழுமையை பன்மடங்காக பலுகச் செய்தீர். எல்லா துன்பங்களிலிருந்தும் அவரைக் காப்பாற்றினீர். யோசேப்பை சிறப்பாக கடவுள் ஆசீர்வதித்ததை இன்று நாம் இல்ல ஆசீர்வாதத்தின் வேளையில் நினைவு கூர்கிறோம். இதைப் போல நம்மையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்பதே இந்த மன்றாட்டின் பொருள் ஆகும்.

28. யோசேப்பு நமக்கு காட்டும் வாழ்க்கைச் சான்று என்ன? யோசேப்பு கடவுளுக்கு அன்புடையவராயிருந்தார். தம்மோடு வெறுப்பும் பொறாமையும் கொண்டிருந்த தமது சகோதரர்களை யோசேப்பு மன்னிக்கவும் அன்பு செய்யவும் செய்தார். உண்மைக்காகவும் நீதிக்காகவும் நிலை கொண்ட யோசேப்பின் வாழ்க்கைச்சான்று பின்பற்ற தகுந்ததே. யோசேப்பு கடவுளுக்கு உகந்தவராக வாழ்ந்ததால் கடவுள் யோசேப்பை சிறப்பாக ஆசீர்வதித்தார். யோசேப்பின் வாழ்க்கை நமக்கு மாதிரியாகவும் தூண்டுகோலாகவும் அமையட்டும்.

**29.** "எனக்குத் துன்பம் விளைந்தது என் **நன்மைக்காகவே.** அதனால், உம் விதிமுறைகளை நான்

www.malankaralibrary.com

**ஏற்றுக்கொண்டேன்"**. (திருப்பாடல்கள் 119:71)

**பாடம் 7**

**மோசேயின் அழைப்பு**

**பயிற்சி வினாக்கள்**

1. மோசேயின் குழந்தை பருவத்தை விவரி? லேவியர் குலத்தைச் சார்ந்த தம்பதியருக்கு அழகான ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் தாய் மூன்று மாதம் வரை குழந்தையை மறைத்து வளர்த்தினார். தொடர்ந்து மறைத்து வைக்க இயலாததால் ஒரு பேழை செய்து குழந்தையை அதனுள் வைத்து நைல் நதியில் ஒழுகி போகச் செய்தாள். பார்வோனின் மகள் நீராட வந்த பொழுது பேழையைக் கண்டு அதை எடுத்தாள். அதிலிருந்த குழந்தையை வளர்க்க ஒரு எபிரேய பெண்மணியை ஏற்படுத்தினாள். அந்த பெண் தான் அக்குழந்தையின் தாய். குழந்தை வளர்ந்த போது அவனை பார்வோனின் மகளுக்கு திருப்பிக் கொடுத்தாள். அவள் அவனை புதல்வனாக ஏற்றுக்கொண்டாள். நீரிலிருந்து எடுக்கப்பட்டவனாதலால் அவனுக்கு 'மோசே' என்று பெயர் சூட்டினாள். பார்வோனின் அரண்மனையில் மோசே வளர்ந்தார்.

2. முட்செடியில் மோசே கண்ட காட்சியை விவரி? ஒரு நாள் கடவுளின் மலையாகிய ஒரேபில் மோசே ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார். அங்கே முட்புதரின் நடுவில் தீ பிழம்பில் கடவுளின் தூதர் அவருக்குத் தோன்றினார். எரிந்து கொண்டிருந்த முட்புதர் தீய்ந்து போகவில்லை என்று கண்ட மோசே இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக முட்புதரின் அருகில் செல்ல முயன்றார். மோசே முட்புதரை அணுகி வருவதைக் கண்ட கடவுள் முட்புதரிலிருந்து அவரை அழைத்தார். பிறகு இவ்வாறு அருளினார்: "இங்கே அணுகி வராதே; உன் பாதங்களி லிருந்து மிதியடிகளை அகற்றிவிடு ; ஏனெனில் நீ நின்று கொண்டிருந்த இந்த இடம் புனிதமான நிலம். உங்கள் மூதாதையரின் கடவுள். ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள் நானே" (வி.ப.3:5-6) என்றார்.

3. மோசேயின் பிரதிநிதியாக கடவுள் ஆரோனை நியமித்தது ஏன்? கடவுள் தான் மோசேயை அனுப்பினார் என்பதை இஸ்ரயேல் மக்களும் பார்வோனும் நம்பும் விதமாக அற்புதங்களை செய்யும் வலிமையை கடவுள் மோசேக்கு வழங்கினார். இருப்பினும் மோசே கடவுள் ஒப்படைத்த பொறுப்பிலிருந்து பின்வாங்க முயன்றார். மோசே கடவுளிடம் இவ்வாறு கூறினார் : "ஆண்டவரே நான் நாவன்மை அற்றவன் - பேசும் போது திக்குவாய் உடையவன் நான்". தான் திக்குவாய் என்று மோசே மீண்டும் கூறிய போது கடவுள் மோசேயின் சகோதரன் ஆரோனை அவருக்கு உதவியாளராக ஏற்படுத்தினார். ஆரோனை மோசேயின் பிரதிநிதியாக கடவுள் ஏற்படுத்தினார்.

4. மோசே எகிப்தில் சென்று தமது பொறுப்பை ஏற்றுக் கொண்டது எப்படி? கடவுளின் கட்டளைக்கேற்ப மோசே தமது மாமனாரான இத்திரோவின் அனுமதியுடன் எகிப்திற்கு புறப்பட்டார். பயணத்தின் நடுவே மோசே தமது சகோதரனாகிய ஆரோனை கண்டடைந்தார். மோசே ஆரோனிடம் கடவுள் தமக்குக் கொடுத்த பொறுப்புக்களைப் பற்றி விவரித்தார். தொடர்ந்து அவர்கள் எகிப்தில் சென்றடையவும் இஸ்ரயேல் தலைவர்களை காணவும் செய்தனர். கடவுள் மோசேக்கு அருளிய செய்திகளை இஸ்ரயேல் மக்களுக்கு ஆரோன் எடுத்துக் கூறினார். மக்கள் அதை நம்பி கடவுளை வழிபட்டனர். இவ்வாறாக கடவுள் தமக்கு கொடுத்த பொறுப்பை மோசே ஏற்றுக்கொண்டார்.

5. மோசேயின் அழைத்தலைப் பற்றி விவரி? ஒரு நாள் கடவுளின் மலையாகிய ஒரேபில் மோசே ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார். அங்கே முட்புதரின் நடுவில் தீ பிழம்பில் கடவுளின் தூதர் அவருக்குத் தோன்றினார். எரிந்து கொண்டிருந்த முட்புதர் தீய்ந்து போகவில்லை என்று கண்ட மோசே இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக முட்புதரின் அருகில் செல்ல முயன்றார். மோசே முட்புதரை அணுகி வருவதைக் கண்ட கடவுள் முட்புதரி லிருந்து அவரை அழைத்தார். பிறகு இவ்வாறு அருளினார்: "இங்கே அணுகி வராதே; உன் பாதங்களி லிருந்து மிதியடிகளை அகற்றிவிடு ; ஏனெனில் நீ நின்று கொண்டிருந்த இந்த இடம் புனிதமான நிலம். உங்கள் மூதாதையரின் கடவுள். ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள் நானே" (வி.ப.3:5-6) என்றார்.

எகிப்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்த இஸ்ரயேல் மக்களை அவர்களின் துன்பங்களிலிருந்து விடுவிக்க

www.malankaralibrary.com

கடவுள் இறங்கி வந்தார். கடவுள் மோசேயோடு தொடர்ந்து கூறினார். “நான் உம்மை பார்வோனின் பக்கம் அனுப்புவேன். நீ எனது மக்களாகிய இஸ்ரேயேலை எகிப்திலிருந்து விடுவிக்க வேண்டும்”. கடவுள் மோசேயுடன் இருப்பார் என்று உறுதியளித்தார்.

6. எரியும் முட்புதரில் கடவுள் மோசேயோடு கூறியது என்ன? கடவுள் மோசேயோடு தொடர்ந்து கூறினார். “நான் உம்மை பார்வோனின் பக்கம் அனுப்புவேன். நீ எனது மக்களாகிய இஸ்ரேயேலை எகிப்திலிருந்து விடுவிக்க வேண்டும்”. கடவுள் மோசேயுடன் இருப்பார் என்று உறுதியளித்தார்.

7. எதற்காக கடவுள் மோசேக்கு அற்புதங்களாற்றும் வல்லமையை கொடுத்தார்? கடவுள் தான் மோசேயை அனுப்பினார் என்பதை இஸ்ரயேல் மக்களும் பார்வோனும் நம்பும் விதமாக அற்புதங்களை செய்யும் வலிமையை கடவுள் மோசேக்கு வழங்கினார்.

**குறுவினா விடைகள்**

1. எகிப்தில் வந்த இஸ்ரயேல் மக்கள் பெரிய மக்கள் கூட்டமான பின்னர் எங்கே அடிமைகளாக்கப்பட்டனர்? எகிப்தில்.
2. இஸ்ரயேல் மக்களின் சக்தியைக் கண்டு பயந்து ஆண் குழந்தைகளை நைல் நதியில் வீசி கொலை செய்யவும் ஆணை பிறப்பித்தவன் யார்? பர்வோன்
3. மோசேயின் தாய் எத்தனை மாதம் வரை குழந்தையை மறைத்து வளர்த்தினார்? மூன்று
4. மோசேயின் தாய் குழந்தையை பேழையில் கிடத்தி எந்த நதியில் ஒழுகிப் போகச் செய்தாள்? நைல்
5. பேழையிலிருந்து குழந்தையை எடுத்தவள் யார்? பார்வோனின் மகள்
6. பார்வோனின் மகள் குழந்தையை வளர்க்க யாரிடம் ஒப்படைத்தாள்? எபிரேய பெண்மணியை
7. பார்வோனின் மகள் நீரிலிருந்து எடுக்கப்பட்டவனாதலால் குழந்தைக்கு எவ்வாறு பெயர் சூட்டினாள்? 'மோசே'
8. மோசே எந்த அரண்மனையில் வளர்ந்தார்? பார்வோனின் அரண்மனையில்
9. மோசே பார்வோனின் பிடியிலிருந்து தப்பி ஓடி எந்நாட்டை சென்றடைந்தார்? மிதியான்
10. மோசே மணந்த அர்ச்சகராகிய இத்திரோவின் மகள் யார்? சிப்போராவை
11. மோசே மிதியானில் யாருடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்? இத்திரோவின்
12. கடவுளின் மலையாகிய **ஒரேபில்** மோசே ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார்.
13. முட்புதரில் தீப்பிழம்பாக மோசேவுக்கு தோன்றியவர் யார்? கடவுளின் தூதர்
14. “இங்கே அணுகி வராதே; உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு; ஏனெனில் நீ நின்று கொண்டிருந்த இந்த இடம் புனிதமான நிலம். உங்கள் மூதாதையரின் கடவுள். ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள் யாக்கோபின் கடவுள் நானே” (வி.ப.3:5-6) யார் யாரிடம் கூறியது? கடவுளின் தூதர் மோசேயிடம்
15. “நான் உம்மை **பார்வோனின்** பக்கம் அனுப்புவேன். நீ எனது மக்களாகிய **இஸ்ரேயேலை** எகிப்திலிருந்து விடுவிக்க வேண்டும்”.
16. இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு வழி நடத்திச் செல்ல கடவுள் யாரை ஏற்படுத்தினார்? மோசேயை
17. "ஆண்டவரே நான் நாவன்மை அற்றவன் - பேசும் போது திக்குவாய் உடையவன் நான்". யார் யாரிடம் கூறியது? மோசே கடவுளிடம்
18. மோசே திக்குவாய் கொண்டதால் கடவுள் யாரை உதவியாளராக ஏற்படுத்தினார்? ஆரோனை
19. மோசேவை நினைவு கூறும் ஓரிரு திருவழிபாட்டுப் பாடல்களைக் கூறுக?

www.malankaralibrary.com

வைகறையில் மலையினிலே மோசை

அரிதொரு காட்சியைக் கண்டாரே

எரிமயரும் ஆன்மிக தூதர்களும்

பரவும் பரனைக்கண்டாரே

எரியா முட்புதர் நடுவினிலே

எரியும் நெருப்பும் கண்டாரே

இங்குன் இறைவன் உறைவதனால்

அங்குன் மிதியடி அகற்றிடுவாய்

என்றொரு குரலும் கேட்டாரே

கடவுளின் மலையான ஒரேபில் வைத்து மோசேக்கு ஏற்பட்ட காட்சியை இங்கே நாம் நினைவு கூர்கிறோம். கடவுளின் ஆலயம் புனிதமானது. அங்கு நாம் புனிதர்களாக நுழைய வேண்டுமென இந்தப் பாடல் நமக்கு உணர்த்துகிறது.

"முட்புதரில் தாம் இறங்கியபோது மோசே கண்ட இறைவன் இவரே"

முட்செடியில் கடவுள் இறங்கி வந்த போது மோசே கண்டதைப் போல் இறைமகனை திருப்பலியில் விசுவாசிகள் காணவும் வழிபடவும் செய்கின்றனர் என இந்தப் பாடல் பொருள்படுகிறது.

20. மோசேவின் வாழ்வு நமக்குத் தரும் வாழ்க்கைச் சான்று என்ன? கடவுள் நம்மையும் தமது திட்டங்களை செயல்படுத்துவற்காக அழைத்தார். கடவுள் நம்மை அழைப்பது நமது தகுதிகளை பார்த்தல்ல. அவர் யாரை அழைத்தாலும் அவருக்குத் தேவையான அருளையும் அளிப்பார். அன்றாட வாழ்வில் கடவுளின் குரலைக் கேட்டு கடவுளுக்காக பணியாற்ற நாமும் தயாராவோம். கடவுளுக்கு என்றும் நம்பிக்கையுடையவர்களாக இருப்போம்.

**21.** "கடவுள் **ஞானிகளை** வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றைத் தேர்ந்து கொண்டார்". (1 கொரிந்தியர் 1:27)

**பாடம் 8**

## அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

### பயிற்சி வினாக்கள்

1. எகிப்தியரின் மேல் கடவுள் துன்பங்களை அனுப்ப காரணம் என்ன? கடவுளின் கட்டளைக்கேற்ப மோசே மீண்டும் பார்வோனிடம் இஸ்ரயேல் மக்களை விட்டுவிட வேண்டும் என்று வேண்டினார். பார்வோன் சம்மதிக்கவில்லை. கடவுள் பார்வோனை கடின மனமுடையவனாக்கினார். அவன் மோசேயின் வார்த்தைக்கு செவிசாய்க்கவில்லை. மோசே மீண்டும் கடவுளின் கட்டளையை எடுத்துரைக்க பார்வோன் கடின மனமுடையவராகத் தொடர்ந்தான். இதனால் கடவுள் எகிப்திற்கு துன்பங்களை அனுப்பினார்.

2. எகிப்தில் அனுப்பப்பட்ட பத்தாவது பெருந்துன்பம் எது? இறுதியில் பத்தாவதாக கடவுள் எகிப்தின் தலைமகன்களை சாகடித்தார். கடவுள் இவ்வாறு அருளினார்: "அரியணையில் வீற்றிருக்கும் பார்வோனின் தலைமகன் முதல் மாவரைக்கும் கற்களுக்குப் பின் அமர்ந்திருக்கும் அடிமைப் பெண்ணின் தலைமகன் வரை உள்ள முதற்பேறு அனைத்தும் இறந்துவிடுவர்" (வி.ப. 11:5).

3. இஸ்ரயேலர் எவ்வாறு பாஸ்கா கொண்டாடினர்? இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தமட்டில் மிகவும் முக்கியமான திருவிழா தான் பாஸ்கா. எகிப்திலிருந்து விடுதலை அடையும் வேளையில் இஸ்ரயேலர் பாஸ்கா கொண்டாட வேண்டுமென கடவுள் மோசேக்கு கட்டளையிட்டார். வருடத்தின் முதல் மாதம் பதினான்காம் நாள் பாஸ்கா கொண்டாட வேண்டும். 'பாஸ்கா' என்ற வார்த்தைக்கு 'கடந்து செல்லல்' என்று பொருள். ஒரு வீட்டிற்கு ஒரு ஆட்டுக்குட்டி என தேர்ந்தெடுக்க வேண்டும். மாதத்தின் பத்தாம் நாளே இந்த ஆட்டுக்குட்டியை தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு வயதான குறைபாடற்ற குட்டியை தேர்ந்தெடுக்க வேண்டும்.

www.malankaralibrary.com

பதினான்காம் நாள் மாலையில் இஸ்ரயேல் குலம் முழுவதும் இந்த ஆடுகளைக் கொன்று அதன் இரத்தத்திலிருந்து சிறிதளவு எடுத்து வீட்டின் இரு கதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் தெளிக்க வேண்டும். அதன் இறைச்சியை நெருப்பில் சுட்டு புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக் கீரையோடும் உண்ண வேண்டும். இடையில் கச்சை கட்டி, கால்களில் காலணி அணிந்து, கையில் கோல் பிடித்து விரைவாக உண்ண வேண்டும். இஸ்ரயேலரில் விருந்தசேதனம் செய்து கொண்ட ஆண்கள் அனைவரும் பாஸ்கா கொண்டாட வேண்டும். கடவுள் கூறியபடியே இஸ்ரயேலர் பாஸ்கா உண்டனர். அந்த இரவில் கடவுளின் தூதர் எகிப்தின் அனைத்து மனிதர்களுடையவும் விலங்குகளுடையவும் தலையீற்றுகளைச் சாகடித்தார். ஆனால் கதவு நிலைகளில் இரத்தம் தெளித்ததனால் இஸ்ரயேலரின் தலையீற்றுகளை சாகடிக்காமல் கடவுளின் தூதர் கடந்து சென்றார்.

4. இஸ்ரயேல் எகிப்திலிருந்து எவ்வாறு விடுதலை பெற்றனர்? எகிப்தியர் அனைவரின் தலையீறுகள் சாகடிக்கப்பட்டதனால் இஸ்ரயேலர்களை பார்வோன் விடுதலை செய்ய ஒப்புக்கொண்டார். இஸ்ரயேலர் மோசேயின் தலைமையில் எகிப்திலிருந்து புறப்பட்டனர். தங்களுக்கிருந்த அனைத்து செல்வங்களுடன் அவர்கள் பயணம் தொடங்கினர். கடவுள் தமது வலிமையான கரங்களால் இஸ்ரயேலை வழிநடத்தினார்.

5. இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தனர்? இஸ்ரயேலர்கள் எகிப்தில் நானூற்று முப்பது ஆண்டுகள் வாழ்ந்திருந்தனர்.

6. இஸ்ராயேல் மக்களைப் பின்தொடர்ந்த எகிப்தியருக்கு என்ன நிகழ்ந்தது? இஸ்ரயேலர் எகிப்தை விட்டுச் சென்றபின் அவர்களை அனுப்பியதற்காக பார்வோனும் மக்களும் வேதனையடைந்தனர். அவர்களைத் திருப்பி கொண்டு வருவதற்காக பார்வோனும் படைகளும் இஸ்ரயேலரைப் பின்தொடர்ந்தனர். அவ்வேளையில் இஸ்ரயேலர் செங்கடலை நெருங்கியிருந்தனர். கடவுளின் கட்டளைப்படி மோசே தமது கைகளில் இருந்த கோலை கடல் மீது நீட்டினார். கடல் இரண்டாக பிரிந்து, மக்கள் தரை மீது நடந்து மறுகரை சேர்ந்தனர். இஸ்ராயேல் மக்கள் கடலை கடந்ததும் திரும்பி நின்று தமது கரங்களை கடல் மீது நீட்டினார். கடல் ஒன்று சேர்ந்தது. இஸ்ரயேலரைப் பின் தொடர்ந்து எகிப்தியர்களான பார்வோனின் படைகள் செங்கடலில் மூழ்கி மடிந்தனர்.

7. எகிப்து நாட்டிற்கு கடவுள் அனுப்பிய 10 பெருந்துன்பங்கள் எவை? 1. முதல் துன்பமாக நைல் நதியின் தண்ணீர் முழுவதும் இரத்தமாக மாறியது. எகிப்தியர்களுக்கு நைல் நதியின் தண்ணீரைப் பருக இயலவில்லை. நைல் நதியிலுள்ள மீன்கள் அனைத்தும் செத்து மிதந்தன. 2. அதைத் தொடர்ந்து எகிப்து முழுவதும் தவளைகளால் நிறைந்தது. 3. தொடர்ந்து எகிப்து முழுவதும் கொசுக்கள் பெருகின. 4. தொடர்ந்து எகிப்து முழுவதும் ஈக்கள் பெருகின. 5. ஐந்தாவதாக எகிப்தின் கால்நடைகள் அனைத்தும் மடிந்து போகச் செய்தார். 6. இதன்பின் எகிப்திலுள்ள மனிதர்களின் மேலும் விலங்குகளின் மேலும் கொப்புளங்கள் தோன்றின. 7. கடவுள் அப்பொழுது எகிப்தின் அனைத்து மனிதர்களின் மேலும் விலங்குகளின் மேலும் கல்மழையை பொழியச்செய்தார். 8. அதைத்தொடர்ந்து எகிப்து முழுவதும் வெட்டுக்கிளிகள் நிறைந்தன. இதன் மூலம் தாவரங்களில் பச்சையாயிருந்த எதுவும் மிஞ்சவில்லை. 9. ஒன்பதாவதாக எகிப்து முழுவதும் மூன்று நாட்கள் காரிருள் படர்ந்தது. அவர்களால் எதுவுமே செய்ய இயலவில்லை. 10. இறுதியில் பத்தாவதாக கடவுள் எகிப்தின் தலைமகன்களை சாகடித்தார்.

### குறு வினாவிடைகள்

1. மோசே கடவுளின் கட்டளையின்படி எங்கிருந்து எகிப்திற்கு வந்தார்? மிதியானிலிருந்து
2. பார்வோனிடம் இஸ்ராயேல் மக்களை விடுவிக்க வேண்டுமென்று முறையிட்டவர்கள் யாவர்? மோசேயும் ஆரோனும்
3. "பாலைநிலத்தில் எனக்கொரு விழா எடுக்குமாறு என் மக்களைப் போக விடு என இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைத்துள்ளார்" (வி.ப. 5:1) யார் யாரிடம் கூறியது? மோசே பார்வோனிடம்
4. குலமுதுவர்களான ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு ஆகியோருக்கு **<u>வாக்களித்த</u>** கானான் நாட்டை அவர்களது வழிமரபினருக்கு வழங்குவேன் என்று கடவுள் வாக்களித்திருந்தார்.
5. கடவுள் எகிப்திற்கு எத்தனை துன்பங்களை அனுப்பினார்? பத்து
6. கடவுள் எகிப்திற்கு ஏன் பத்து துன்பங்களை அனுப்பினார்? அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் மக்களை

www.malankaralibrary.com

விடுவிக்க

7. “அரியணையில் வீற்றிருக்கும் பார்வோனின் தலைமகன் முதல் மாவரைக்கும் கற்களுக்குப் பின் அமர்ந்திருக்கும் அடிமைப் பெண்ணின் **தலைமகன்** வரை உள்ள முதற்பேறு அனைத்தும் இறந்துவிடுவர்” (வி.ப. 11:5).
8. இஸ்ரயேல் மக்களின் மிக முக்கியமான விழா எது? பாஸ்கா.
9. எகிப்திலிருந்து விடுதலை அடையும் வேளையில் இஸ்ரயேலர் **பாஸ்கா** கொண்டாட வேண்டுமென கடவுள் மோசேக்கு கட்டளையிட்டார்.
10. பாஸ்கா விழா எப்போது கொண்டாடப்பட வேண்டும்? வருடத்தின் முதல் மாதம் பதினான்காம் நாள்
11. 'பாஸ்கா' என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? 'கடந்து செல்லல்'
12. மாதத்தின் எந்நாளில் 'பாஸ்கா' விழாவிற்கான ஆட்டுக்குட்டியை தேர்ந்தெடுக்க வேண்டும்? பத்தாம் நாளே
13. பதினான்காம் நாள் மாலையில் இஸ்ரயேல் குலம் முழுவதும் ஆடுகளைக் கொன்று அதன் இரத்தத்தை என்ன செய்ய வேண்டும்? அதன் இரத்தத்திலிருந்து சிறிதளவு எடுத்து வீட்டின் இரு கதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் தெளிக்க வேண்டும்.
14. பாஸ்கா விழாவின் போது ஆட்டுக்குட்டியின் இறைச்சியை எவ்வாறு உண்ண வேண்டும்? பாஸ்கா விழாவின் போது ஆட்டுக்குட்டியின் இறைச்சியை நெருப்பில் சுட்டு புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக் கீரையோடும் உண்ண வேண்டும். இடையில் கச்சை கட்டி, கால்களில் காலணி அணிந்து, கையில் கோல் பிடித்து விரைவாக உண்ண வேண்டும்.
15. இஸ்ரயேலர் யார் தலைமையில் எகிப்திலிருந்து புறப்பட்டனர்? மோசேயின்
16. எகிப்தியர்களான பார்வோனின் படைகள் எங்கே மூழ்கி மடிந்தனர்? செங்கடலில்
17. எகிப்தில் நடந்த ஒப்புமையாகும் பாஸ்கா இன்று நிறைவேறிற்று **வாழ்வின் - செம்மறி -** பன்னிருவருக்கு தனது உடலை பகிர்ந்தே அளித்தார்.
18. பாஸ்கா விழாவுக்கும் நற்கருணைக்கும் உள்ள தொடர்பு என்ன? எகிப்தில் நடந்த ஒப்புமையாகும் பாஸ்கா இன்று நிறைவேறிற்று **வாழ்வின் - செம்மறி -** பன்னிருவருக்கு தனது உடலை பகிர்ந்தே அளித்தார். தலைவரான மோசேயின் தலைமையில் எகிப்திலிருந்து விடுதலையடைந்த வேளையில் இஸ்ரயேல் மக்கள் பாஸ்கா கொண்டாடினர். அதைப் போன்று இயேசுவின் வாழ்வின் இறுதியில் சீடர்கள் பாஸ்கா கொண்டாடினர். மோசேயின் தலைமையில் இஸ்ரயேலர் கொண்டாடிய முதல் பாஸ்காவும் இயேசு நற்கருணையை நிறுவிய பாஸ்காவும் மீட்பின் திட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.
19. பாஸ்கா விழாவுக்கும் வீடாசீர்வாத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? இஸ்ரயேலர் எகிப்தில் வைத்து பாஸ்கா கொண்டாடிய போது அவர்களின் வீட்டின் இரு கதவு நிலைகளிலும் மேல் சட்டத்திலும் இரத்தம் தெளித்ததே அவர்களுக்கு மீட்பாய்த் தீர்ந்தது. அதனால் கடவுளின் தூதர் அவர்களின் இல்லங்களை அழிக்கவில்லை. குருவானவர் வீடு ஆசீர்வதிக்கும் வேளையில் வீட்டின் கதவு நிலைகளில் புனித நீரால் முத்திரையிடுவது, மீட்பின் அடையாளமே.
20. “நான் இன்னலுற்ற வேளையில் **ஆண்டவரை** நோக்கி மன்றாடினேன். அவரும் எனக்குச் செவி சாய்த்தார்' (திருப்பாடல்கள் 120:1)

## பாடம் 9

## பாலைவனப் பயணம்

**பயிற்சி வினாக்கள்**

1. இஸ்ரயலேர் பகலும் இரவும் எவ்வாறு பயணம் செய்தனர்? மோசேயின் தலைமையில் செங்கடலைக் கடந்த மக்கள் பாலைநிலம் வழியாக பயணம் தொடர்ந்தனர். இஸ்ரயேல் மக்களுக்கு பயணம் செய்வதற்காக பகலில் மேகத் தூணாகவும் இரவில் நெருப்புத் தூணாகவும் கடவுள் அவர்களுக்கு முன்னே சென்றார். இஸ்ரயேல் மக்களோடு கடவுளின் பிரசன்னம் எப்பொழுதும் இருந்தது (வி.ப. 13:21).

2. இஸ்ரயேலர்களுக்கு பாலைவனத்தில் உணவும் நீரும் கிடைக்க கடவுள் என்னென்ன செய்தார்? இஸ்ரயேல் மக்கள் மோசேயின் தலைமையில் வாக்களித்த நாட்டை நோக்கி பயணம் தொடர்ந்தனர். பயணத்தின் போது அவர்கள் சீன் பாலைநிலத்தை அடைந்தனர். இஸ்ரயேல் மக்கள் தம்முடன் எடுத்து வந்த உணவுப் பொருட்கள் அனைத்தும் தீர்ந்து விட்டது. பசியால் வாடிய மக்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக

www.malankaralibrary.com

முணுமுணுத்தனர். அவர்களின் தேவையை அறிந்த கடவுள் மோசேயிடம் இவ்வாறு கூறினார் : "நான் உங்களுக்காக வானத்திலிருந்து அப்பத்தைப் பொழியப் போகிறேன்". இஸ்ரயேல் மக்களுக்கு மாலையில் நிறைவான அளவு இறைச்சியும் காலையில் தேவையான அளவு அப்பமும் கடவுள் வழங்குவார் என மோசே மக்களுக்கு தெரிவித்தார். மோசே கூறியபடியே அவர்களுக்கு தேவையான காடைகள் பாளையத்தில் கிடைத்தன. காலையில் பாளையத்தைச் சுற்றி மென்மையான ஒரு உறைபணி போன்ற சிறிய பொருள் காணப்பட்டது. அது தேன் கலந்த அப்பத்தின் சுவை பெற்றிருந்தது. அதைக் கண்டதும் "இது என்ன?" என்று அவர்கள் மாறி மாறி கேட்டுக்கொண்டனர். அவர்கள் அதற்கு மன்னா என்று பெயர் சூட்டினர். 'மன்னா' என்ற வார்த்தைக்கு 'இது என்ன? என்று பொருள். இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்திலிருந்த நாற்பது ஆண்டுகளும் கடவுள் அவர்களுக்கு மன்னா வழங்கினார். (வி.ப. 16:1-36)

பாலைவனம் வழியாக பயணம் தொடர்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு பல நாட்களாக தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் மக்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முணுமுணுத்தனர். மோசே கடவுளின் உதவியை நாடினார். பாறையிலிருந்து தண்ணீர் புறப்படச் செய்து மக்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிக்க கொடுப்பதாக கடவுள் கூறினார். மோசே பாறையில் இரண்டுமுறை தமது கோலால் அடித்தார். அப்பொழுது பாறையிலிருந்து தண்ணீர் ஏராளமாக புறப்பட்டது (வி.ப. 17:1-7).

3. சீனாய் உடன்படிக்கையில் கடவுள் வாக்களித்தது என்ன? எகிப்திலிருந்து புறப்பட்ட மக்கள் சீனாய் பாலைநிலத்தை அடைந்தனர். சீனாய் மலையின் அடிவாரத்தை அடைந்த மக்களோடு உடன்படிக்கை செய்து கொள்ள கடவுள் தீர்மானித்தார். கடவுள் மோசேயை மலைமேல் அழைத்தார். அங்கே கடவுள் இஸ்ரயேல் மக்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார். கடவுள் மோசே யோடு இவ்வாறு கூறினார்: "நீங்கள் என் வார்ர்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைபிடித்தால் அனைத்துலகும் என் உடைமையேயெனினும் நீங்கள் எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள்" (வி.ப. 19:5). சீனாய் மலையில் வைத்து கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு பத்து கட்டளைகள் வழங்கினார். இவை தவிர வேறு சட்டங்களும் இஸ்ரயேல் மக்களுக்கு கடவுள் வழங்கினார்.

4. மோசே சீனாய் மலையில் இருந்த போது இஸ்ரயேல் மக்கள் செய்த தவறு யாது? கடவுள் இஸ்ரயேல் மக்களிடம் உடன்படிக்கை செய்து கொண்டார். எனினும் மோசே அவர்களிடம் இல்லாத தருணத்தில் அவர்கள் மிகவும் கொடூரமான பாவத்தில் விழ நேர்ந்தது. ஒரே கடவுளான ஆண்டவரை வழிபடுவதற்குப் பதிலாக தங்கத்தால் ஒரு காளைக்குட்டியை உருவாக்கி அவர்கள் அதை வழிபடத் தொடங்கினர். மலைமேலிருந்து இறங்கி வந்த மோசே இதனால் கோபமடைந்தார். அவர் கட்டளைகளின் கற்பலகைகளை உடைக்கவும், காளைக்குட்டியை அழிக்கவும் செய்தார். மோசேயின் விண்ணப்பத்தினால் கடவுள் இஸ்ரயேல் மக்களோடு இரக்கம் காட்டினார். மீண்டும் கட்டளைகளின் கற்பலகைகளை மோசேக்கு கடவுள் வழங்கினார்.

5. ஆரோன் யார்? அவரின் கடமைகள் என்ன? கடவுள் மோசேயை எகிப்திற்கு அனுப்பியது முதல் அவரோடு இருந்தவர் தான் ஆரோன். ஆரோன் மோசேயின் சகோதரர் திக்குவாயனாகிய மோசேக்கு பதிலாக பார்வோனிடம் பேசியதும் மக்களோடு பேசியதும் ஆரோனே. சில வேளைகளில் மோசேக்காக அதிசயங்கள் கூட ஆரோன் நிகழ்த்தினார். மோசேயின் பிரதிநிதியாக ஆரோன் செயல்பட்டார். மக்களை வழிநடத்த மோசேயுடன் ஆரோனும் இருந்தார். சீனாய் உடன்படிக்கையைத் தொடர்ந்து ஆரோன் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். சந்திப்புக் கூடாரத்தில் நுழையும் போது ஆரோன் சிறப்பான ஆடைகள் அணிய வேண்டும். சந்திப்புக் கூடாரம் மற்றும் உடன்படிக்கைப் பேழையை கண்காணிக்கும் பொறுப்பு ஆரோனுக்கு வழங்கப்பட்டது. தூப பீடத்தில் தூபம் அர்ப்பிக்கின்ற பொறுப்பும் ஆரோனுக்கே உரியது.

6. மோசே வெண்கலப் பாம்பை உருவாக்கியது ஏன்? பாலைவன பயணம் நெடுநாட்களாகத் தொடர்ந்ததனால் மக்கள் பொறுமையிழந்தனர். ஓர் என்ற மலையிலிருந்து செங்கடலை நோக்கிய பயணத்தின் நடுவில் அவர்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினர். இதனால் கடவுள் இஸ்ரயேலர்களிடையே கொள்ளிவாய்ப் பாம்புகளை அனுப்பினார். அவை கடிக்கவே மக்களில் பலர் மாண்டனர். இவ்வேளையில் மக்கள் இவ்வாறு கூறினார் : "நாங்கள் பாவம் செய்துள்ளோம், நாங்கள் ஆண்டவருக்கும் உமக்கும் எதிராகப் பேசியுள்ளோம். அவர் இந்த பாம்புகளை அகற்றி விடும்படி நீர் ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளும் " (எண். 21:7). அதன் படி மோசே மக்களுக்காக மன்றாடினார். மோசேயின் மன்றாட்டுக்கு கடவுள் பதில் கொடுத்தார். கடவுள் கட்டளையிட்ட படியே மோசே வெண்கலத்தால் ஒரு பாம்பை செய்து அதை ஒரு கம்பத்தில்

நாட்டினார். கொள்ளிவாய்ப் பாம்பின் கடியேற்றவர்கள் வெண்கலப் பாம்பைப் பார்த்து உயிர் பிழைத்தனர். இவ்வாறாக இந்த தண்டனையிலிருந்து இஸ்ரயேலர் மீட்பு பெற்றனர்.

7. மாராவின் கசப்பு நீர் எவ்வாறு சுவை பெற்றது? பாலைவனத்தின் வழியாக பயணம் செய்த இஸ்ரயேல் மக்களுக்கு பல நாட்களாக குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் மாரா என்ற இடத்தை அடைந்தபோது அங்கே தண்ணீர் கிடைத்தது. எனினும் அவர்களால் அதைப் பருக இயலவில்லை. காரணம் அது கசப்பாக இருந்தது. மக்கள் மோசேக்கு எதிராக முணுமுணுத்தனர். மக்களின் துயரத்தை புரிந்து கொண்ட மோசே கடவுளிடம் வேண்டினார். கடவுள் அவருக்கு ஒரு மரத்துண்டை காட்டி அதை தண்ணீரில் போடச் சொன்னார். அதைத் தண்ணீரில் போட்டதும் தண்ணீர் சுவைபெற்றது.

8. மன்னா என்ற வார்த்தையின் பொருள் என்ன? 'மன்னா' என்ற வார்த்தைக்கு 'இது என்ன? என்று பொருள்.

9. இஸ்ராயேல் மக்களின் தாகத்தை தணிய செய்ய மோசே என்ன செய்தார்? பாலைவனம் வழியாக பயணம் தொடர்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு பல நாட்களாக தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் மக்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முணுமுணுத்தனர். மோசே கடவுளின் உதவியை நாடினார். பாறையிலிருந்து தண்ணீர் புறப்படச் செய்து மக்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிக்க கொடுப்பதாக கடவுள் கூறினார். மோசே பாறையில் இரண்டுமுறை தமது கோலால் அடித்தார். அப்பொழுது பாறையிலிருந்து தண்ணீர் ஏராளமாக புறப்பட்டது (வி.ப. 17:1-7).

## குறு வினா விடைகள்

வத்து கசப்பு நீர் சுவை நீராக மாறியது? மாரா
ளுக்கு இறைவன் அளித்த ஒரு உறைபணி போன்ற தேன் கலந்த அப்பத்தின் சுவை பெற்றிருந்த சிறிய
ன்ன?" மன்னா
ந்த இஸ்ரயேல் மக்களுக்கு நாற்பது ஆண்டுகளும் கடவுள் எந்த உணவை வழங்கினார்? மன்னா
வார்ர்த்தைக்குச் செவிசாய்த்து என் **உடன்படிக்கையைக்** கடைபிடித்தால் அனைத்துலகும் என்
னும் நீங்கள் எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள்" (வி.ப. 19:5).
வுள் இஸ்ரயேல் மக்களுக்கு பத்து கட்டளைகள் வழங்கினார்? சீனாய் மலையில்
போது இஸ்ரயலர்கள் எதை வழிபட்டனர்? தங்கத்தால் ஒரு காளைக்குட்டியை
ருந்து இறங்கி வந்த மோசேயின் முகம் **ஒளிமயமாயிருந்தது**.
ஒளிமயமாயிருந்ததால் எதை அணிந்து கொண்டு வாழ்ந்து வந்தார்? முக்காடு
க வேண்டுமென கடவுள் சீனாய் மலையில் வைத்து மோசேக்கு கூறினார்? சந்திப்புக் கூடாரம், உடன்படிக்கைப்
தூபபீடம் போன்றவைகளை எவ்வாறு உருவாக்க வேண்டுமென கடவுள் சீனாய் மலையில் வைத்து மோசேக்கு
ன் சிறப்பான பிரசன்னமுள்ள இடமே சந்திப்புக் கூடாரம். கடவுளின் கட்டளைப்படி மோசே அவற்றை

கையைத் தொடர்ந்து யார் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார்? ஆரோன்
மற்றும் உடன்படிக்கைப் பேழையை கண்காணிக்கும் பொறுப்பு தூப பீடத்தில் தூபம் அர்ப்பிக்கின்ற பொறுப்பும்
ட்டது? ஆரோனுக்கு
ம்பின் கடியேற்றவர்கள் எதைப் பார்த்து உயிர் பிழைத்தனர்? வெண்கலப் பாம்பை
மன்னாவையும் தொடர்பு படுத்தும் பாடல் எது? "பாலை வனத்தில் இசரேல் குலத்தார் சுவை பார்த்த மன்னா
ன்" (பாஸ்கா வியாழன்). இஸ்ரயேல் மக்களுக்கு மன்னர் வழங்கி உயிர் வழங்கியதைப் போல பாவம் மூலம்
கயை இழந்த மனிதனுக்கு நற்கருணை வழியாக கடவுள் உயிர் வழங்குகிறார். பாம்பின் தீண்டலை ஏற்ற
க்கையோடும் மனவருத்தத்தோடும் வெண்கலப் பாம்பை நோக்கிய போது மரணத்திலிருந்து விடுதலை
பாலைவனத்தில் வெண்கலப் பாம்பை உயர்த்தியதன் நினைவாகவே பெரிய நோன்பின் இடையே ஆலய
தா நிலை நாட்டுகின்றோம். வெண்கலப் பாம்பை நோக்கி இஸ்ரேலர் மீட்பு பெற்றதைப் போலவே. புனித
கி வணங்குகின்றவர் மீட்பைப் பெறுவர். ஆயர்களின் செங்கோலில் வெண்கலப் பாம்பின் உருவம் உள்ளதன்
சே உயர்த்திய வெண்கலப் பாம்பே ஆகும்.
லிமை, என் **கேடயம்**; அவரை என் உள்ளம் நம்புகின்றது" (திருப்பாடல்கள் 28:7)

**பாடம் 10**

www.malankaralibrary.com

**யோசுவாவின் தலைமையில்**

**பயிற்சி வினாக்கள்**

1. யோசுவா எவ்வாறு மோசேயின் பின்வந்தவர் ஆனார்? யோசுவா என்ற வார்த்தைக்கு 'கடவுளின் உதவி பெற்றவன்' என்று பொருள். யோசுவா மோசேயின் உதவியாளராயிருந்தார். கடவுளின் கட்டளைப்படி யோசுவாவைத் தலைவனாக நியமிக்க மோசே அவரை கூட்டிக்கொண்டு சந்திப்புக் கூடாரத்திற்குள் சென்றார். அங்கு கடவுள் மோசேக்கு இறுதி கட்டளைகளை வழங்கினார். சந்திப்புக் கூடாரத்தில் வைத்து கடவுள் யோசுவாவோடு இவ்வாறு அருளினார் : "வலிமை பெறு, துணிவு கொள். ஏனெனில் நீ இஸ்ரயேல் மக்களை நான் அவர்களுக்கு ஆணையிட்டுக் கூறிய நாட்டுக்குள் கொண்டு போவாய். நான் உன்னோடு இருப்பேன்" (இச 31:23). கடவுளின் இந்த கட்டளைப்படி யோசுவா இஸ்ரயேலின் தலைமை பொறுப்பை ஏற்றார்.

2. தலைமை ஏற்ற யோசுவாவுக்கு கடவுள் அருளியது என்ன? சந்திப்புக் கூடாரத்தில் வைத்து கடவுள் யோசுவாவோடு இவ்வாறு அருளினார் : "வலிமை பெறு, துணிவு கொள். ஏனெனில் நீ இஸ்ரயேல் மக்களை நான் அவர்களுக்கு ஆணையிட்டுக் கூறிய நாட்டுக்குள் கொண்டு போவாய். நான் உன்னோடு இருப்பேன்" (இச 31:23).

3. இஸ்ரயேல் மக்கள் எவ்வாறு யோர்தான் நதியைக் கடந்தனர்? கடவுளின் கட்டளைக்கு கீழ்படிந்து உடன்படிக்கை பேழையை எடுத்துக் கொண்டு மக்களுக்கு முன்னே நடையுங்கள் என்று குருக்களுக்கு யோசுவா கட்டளையிட்டார். பேழையை கொண்டு சென்ற குருக்களின் பாதங்கள் நீரில் தொட்டன. அந்நேரம் யோர்தான் நதியிலுள்ள நீர் இரண்டாக பிரிந்தது. இஸ்ரயேல் மக்கள் வறண்ட நிலத்தின் வழியாக யோர்தானைக் கடந்து மறுகரையை அடைந்தனர். அனைத்து இஸ்ரயேலர்களும் யோர்தான் நதியைக் கடக்கும் வரை குருக்கள் உடன்படிக்கை பேழையுடன் யோர்தான் நதியின் நடுவே வறண்ட நிலத்தில் நின்றனர். மக்கள் யோர்தானைக் கடந்த பின் குருக்கள் கரைக்கு வந்தனர். யோர்தான் நதியில் மீண்டும் தண்ணீர் ஓட தொடங்கியது.

4. யோசுவாவின் தலைமையில் இஸ்ரயேல் மக்களுக்கு ஏற்பட்ட முன்னேற்றங்களை விவரி? யோசுவாவின் தலைமையில் இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டை அடைந்தனர். கடவுள் அவர்களோடு இருந்தார். வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைந்த அவர்கள் முதலில் எரிக்கோ நகரை கைப்பற்றினர். தொடர்ந்து கானான் நாட்டிலுள்ள பல பகுதிகளை இஸ்ரயேலர் சொந்தமாக்கினர். யோசுவா முதுமையடைந்தார். நிறைய இடங்கள் கைப்பற்றவேண்டியிருந்தது. கைப்பற்றிய தேசங்களை இஸ்ரயேல் குலங்களுக்கு யோசுவா பிரித்துக் கொடுத்தார். இவ்வாறு இஸ்ரயேலுக்கு வழங்குவேன் என மூதாதையர்களுக்கு கடவுள் வாக்களித்த தேசம் அவர்களுக்கு கிடைத்தது.

5. மோசே இறந்த போது அவருக்கு வயது எத்தனை? மோவாபு தேசத்தில் வைத்து மோசே இறந்தார். அப்போது மோசேக்கு வயது நூற்றியிருபது.

6. மோசே எந்த இடத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டைப் பார்த்தார்? மோவாபு தேசத்திலுள்ள நெபோ மலையிலிருந்து மோசே வாக்களிக்கப்பட்ட நாட்டை பார்த்தார்.

7. எத்தனை நாட்கள் மக்கள் மோசேக்காக துக்கம் கொண்டாடினர்? இஸ்ரயேல் மக்கள் மோசேயை நினைத்து முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடினர்.

**குறு வினா விடைகள்**

1. பாலைவனப் பயணத்தின் இறுதியில் இஸ்ரயேல் மக்கள் எந்த சமவெளியை அடைந்தனர்? மோவாபு
2. யோசுவா எந்த குலத்தைச் சார்ந்தவர்? எப்ராயிம்
3. யோசுவாவின் தந்தை யார்? நூன்
4. யோசுவா என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? 'கடவுளின் உதவி பெற்றவன்'
5. கடவுளின் கட்டளைப்படி யோசுவா எங்கு வைத்து இஸ்ரயேலின் தலைமை பொறுப்பை ஏற்றார்? சந்திப்புக் கூடாரத்திற்குள்
6. "வலிமை பெறு, துணிவு கொள். ஏனெனில் நீ இஸ்ரயேல் மக்களை நான் அவர்களுக்கு ஆணையிட்டுக் கூறிய நாட்டுக்குள் கொண்டு போவாய். நான் உன்னோடு இருப்பேன்" (இச 31:23). யார்

www.malankaralibrary.com

யாரிடம் கூறியது? ஆண்டவர் யோசுவாவிடம்

7. யோசுவாவிடம் **ஞானத்தின்** ஆன்மா நிறைந்திருந்தது.
8. “உன் வாழ்நாள் முழுவதும் எந்த மனிதனும் உன்னை எதிர்க்கமாட்டான். மோசேயுடன் நான் இருந்தது போல் உன்னோடும் இருப்பேன்... இம்மக்களின் மூதாதையருக்குக் கொடுப்பதாக நான் வாக்களித்த நாட்டை இவர்கள் உரிமையாக்கிக் கொள்ளுமாறு செய்வாய்” (யோசுவா 1:5-6). ). யார் யாரிடம் கூறியது? ஆண்டவர் யோசுவாவிடம்
9. வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைந்த இஸ்ரயேல் மக்கள் முதலில் எந்நகரை கைப்பற்றினர்? எரிக்கோ
10. கைப்பற்றிய தேசங்களை இஸ்ரயேல் குலங்களுக்கு பிரித்துக் கொடுத்தவர் யார்? யோசுவா
11. யோசுவா இறந்த போது வயது எத்தனை? நூற்றிப்பத்து
12. எரிக்கோ கைப்பற்றியதைப் பற்றி பாசுரமாலை திங்கள் காலை மன்றாட்டில் நாம் எவ்வாறு பாடுகிறோம்?
13. “ஆண்டவர் தாமே நம் கடவுள்
14. இஸ்ராயேலர் வைகறையில்
15. எக்காளமுடன் ஆர்க்குகையில்
16. எரிக்கோ வீழ்ந்ததுவே
17. எனவே வாரீர் தோழர்களே
18. குரலுயர்த்திடுவீர் காலையிலே
19. புவிமேற் கடவுள் அருள்கூர
20. புகழ் பாடிடுவீரே
21. கடவுளின் பராமரிப்பும், அருளும் உலகில் கிடைப்பதற்காக நாம் ஒன்று சேர்ந்து கடவுளைப் புகழ்வோம் என்று இந்தப் பாடல் நம்மை அழைக்கிறது.
22. எரிக்கோ கைப்பற்றியதைப் பற்றி பெரிய நோன்பில் வெள்ளி மாலை மன்றாட்டின் மன்றாடுவது என்ன? பெரிய நோன்பில் வெள்ளி மாலை மன்றாட்டின் செதறாவில் நாம் இவ்வாறு மன்றாடுகிறோம் : "நூனின் மகனான யோசுவா நோன்பால் தூய்மையாக்கப்பட்டு எரிக்கோ மதில்களை தகர்க்கவும் செய்தார்”.
23. “ஆண்டவருக்கு அஞ்சி **உண்மையோடும்** நேர்மையோடும் அவருக்கு ஊழியம் புரியுங்கள்” (யோசுவா 24:14),

## பாடம் 11

## வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ரயேலர்

**பயிற்சி வினாக்கள்**

1. யோசுவா இஸ்ரயேல் மக்களுக்கு நாட்டை எவ்வாறு பிரித்துக்கொடுத்தார்? வாக்களித்த நாட்டை இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் பிரித்துக் கொடுத்தார். யோர்தானுக்கு கிழக்கும் மேற்குமாக தேசத்தைப் பிரித்து கொடுத்தனர். குருக்களின் பிரிவான லேவிய குலத்திற்கு தனியாக தேசத்தை பிரித்துக் கொடுக்கவில்லை . ஆனால் பிற குலங்கள் தங்களுக்குக் கிடைத்த நிலங்களிலிருந்து நகர்களும் மேய்ச்சல் நிலங்களும் உட்பட ஒரு பகுதியை லேவியர்களுக்குக் கொடுத்தனர்.

2. இஸ்ரயேல் மக்களுக்கு எதிர்நோக்கை ஏற்படுத்திய மீட்பரைப் பற்றிய இறைவாக்குகள் யாவை? குலமுதுவரான யாக்கோபு தமது புதல்வர்களை ஆசீர்வதித்த போது யூதாவை இவ்வாறு ஆசீர்வதித்தார் : “அரசுரிமை உடையவர் வரும்வரையில் மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில் யூதாவை விட்டுச் செங்கோல் நீங்காது; அவர் மரபை விட்டுக் கொற்றம் மறையாது” (தொ.நூல் 49:10). வரவிருக்கின்ற மெசியாவைப் பற்றிய மிகச் சிறப்பான வாக்குறுதியே இது. தாவீது அரசனோடு நாத்தான் இறைவாக்கினர் நடத்திய இறைவாக்கை பாருங்கள் : “என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும். உமது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்” (2சாமு. 7:16). பின்னர் எசாயா இறை வாக்கினர் வரவிருந்த மெசியாவைக் குறித்து இவ்வாறு கூறினார்: “இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு அவர் அம்மானுவேல் என்று பெயரிடுவார்”

www.malankaralibrary.com

(எசா.7:14).

தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து மீட்பை தருவதற்காக ஒரு மீட்பர் வருவார் என இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். மக்களின் எதிர்பார்ப்பு இயேசுவின் பிறப்பால் நிறைவேறியது. யூதா குலத்தில் தாவீதின் வழிமரபில் இயேசு பிறந்தார். இவ்வாறாக மீட்பரைப் பற்றிய எதிர்பார்ப்பும் இறைவாக்குகளும் இயேசுவில் நிறைவேறின.

3. குறிப்பெழுதுக:

*1. **நீதித்தலைவர்கள்*** கானான் நாட்டைக் கைப்பற்றி அங்கே வாழ்ந்து வந்த இஸ்ரயேல் மக்களை யோசுவாவின் காலத்திற்குப் பிறகு நீதித்தலைவர்கள் தலைமையேற்று நடத்தினர். அவர்கள் திறமை வாய்ந்த, இறைமக்களாயிருந்தனர். படைவீரர்களான அவர்கள் இஸ்ரயேலை பிற எதிரிகளிடமிருந்து விடுவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள். கடவுளிடமிருந்து அகன்ற மனிதர்களை கடவுளிடமே திருப்பி கொண்டு வர வேண்டிய பொறுப்பையும் அவர்கள் சிறப்பாக செய்தனர். இப்தா, கிதியோன், சிம்சோன், சாமுவேல் ஆகியோர் நீதித்தலைவர்களில் புகழ் பெற்றவராயிருந்தனர். அரசர்கள் ஆட்சி தொடங்குவது வரை அவர்கள் இஸ்ரயேலை வழிநடத்தினர்.

*2. **அரசர்கள்*** கடைசி நீதித்தலைவரான சாமுவேல் முதுமையடைந்த போது தங்களுக்கு ஒரு அரசர் வேண்டுமென மக்கள் அவரோடு கேட்டுக் கொண்டனர். இறைவிருப்பப்படி சாமுவேல் இஸ்ரயேலின் முதல் அரசராக சவுலை அபிஷேகம் செய்தார். சவுலைத் தொடர்ந்து தாவீது அரசரானார். அவர் எருசலேமை இஸ்ரயேலின் தலைநகராக உருவாக்கினார். இஸ்ரயேலின் வரலாற்றில் மிகவும் வலிமை மிக்க அரசர் தாவீது. தாவீதின் குடும்பமும் அரசும் என்றும் உறுதியாயிருக்கும் என கடவுள் வாக்களித்தார் (2 சாமுவேல் 7:16). தாவீதைத் தொடர்ந்து சாலமோன் அரசரானார். எருசலேம் தேவாலயத்தை கட்டியெழுப்பினார். சிறந்த ஞானியான சாலமோனின் காலத்திற்குப் பிறகு இஸ்ரயேல் நாடு இரண்டாக பிளவுண்டது.

*3. **இறைவாக்கினர்கள்*** இஸ்ரயேல் மக்களுக்கு இறைவிருப்பத்தை வெளிப்படுத்தியவர்களே இறைவாக்கினர்கள். மக்களை தீமையிலிருந்து அகற்றி கடவுளிடம் கொண்டு வருவதில் கவனம் செலுத்தினர். வேற்று தெய்வங்களின் பின்னால் அலைந்த இஸ்ரயேல் மக்களை ஒரே கடவுள் நம்பிக்கையில் நிலைபெறச் செய்வதற்காக இறைவாக்கினர்கள் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தனர். வேதனையடைபவர்களுக்காகவும், அடிமைத்தனத்தில் உழல்பவர்களுக்காகவும் இறைவாக்கினர் குரல் கொடுத்தனர். அரசர்களுக்கு பரிந்துரைகள் வழங்கியவர்களும் இவ்விறைவாக்கினர்களே. இஸ்ரயேல் மக்கள் வேற்று நாடுகளிலிருந்த போது அவர்களை உறுதிப்படுத்தியதும் இறைவாக்கினர்களே. வரவிருந்த மெசியாவைக் குறித்து அவர்கள் முன்னறிவித்தனர். மக்கள் எதிர்நோக்கோடு வாழ்வதற்கு இது உதவியது. ஏலியா, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், ஆமோஸ் போன்றவர்கள் இறைவாக்கினர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

4. வடநாட்டில் எத்தனை குலங்கள் இருந்தன? வடக்கு பிரதேசத்தின் பத்து குலங்கள் இணைந்து இஸ்ரயேல் என்ற பெயரில் ஒரு நாடு உருவாக்கப்பட்டது.

5. மாவீரன் அலக்சாண்டர் பாலஸ்தீனாவை கைப்பற்றிய ஆண்டு எது? கி.மு. 322-ல் மாவீரன் அலக்ஸாண்டர் பாலஸ்தீனாவை கைப்பற்றினர்.

6. யார் தலைமையில் யூதர்கள் சிரியர்களுக்கு எதிராக போரிட்டு வெற்றி பெற்றனர்? யூதாஸ் மக்கபேயுசின் தலைமையில் யூதர்கள் சிரியர்களுக்கு எதிராக போரிட்டு வென்றனர்.

## குறு வினாவிடைகள்

1. யோசுவாவின் காலத்திற்குப் பின்னர் இஸ்ரயேல் மக்களை வழிநடத்தியவர்கள் யாவர்? நீதித்தலைவர்கள்
2. கடைசி நீதித்தலைவராயிருந்தவர் யார்? சாமுவேல்
3. இஸ்ரயேலின் முதல் அரசர் யார்? சவுல்
4. சவுலை அரசராக அபிஷேகம் செய்தவர் யார்? சாமுவேல்
5. தாவீது அரசர் பற்றி குறிப்பு வரைக? சவுலைத் தொடர்ந்து தாவீது அரசரானார். அவர் எருசலேமை இஸ்ரயேலின் தலைநகராக உருவாக்கினார். இஸ்ரயேலின் வரலாற்றில் மிகவும் வலிமை மிக்க

www.malankaralibrary.com

அரசர் தாவீது. தாவீதின் குடும்பமும் அரசும் என்றும் உறுதியாயிருக்கும் என கடவுள் வாக்களித்தார் (2 சாமுவேல் 7:16).

6. சாலமன் அரசர் பற்றி குறிப்பு வரைக? தாவீதைத் தொடர்ந்து சாலமோன் அரசரானார். எருசலேம் தேவாலயத்தை கட்டியெழுப்பினார். சாலமோன் மிகச்சிறந்த ஞானியாவார்.
7. வடக்கு பிரதேசத்தின் பத்து குலங்கள் இணைந்த நாட்டின் பெயர் என்ன? இஸ்ரயேல்
8. இரண்டு குலங்கள் கொண்ட தெற்கு நாட்டின் பெயர் என்ன? யூதா
9. இஸ்ரயேல் நாடு எப்போது உருவாக்கப்பட்டது? கி.மு. 931-ல்
10. இஸ்ரயேல் நாடு எப்போது அசீரியரின் ஆட்சிக்குட்பட்டது? கி.மு. 722-ல்.
11. இஸ்ரயேல் நாட்டின் தோல்விக்கு காரணங்கள் யாவை? சிலை வழிபாடும் கடவுளிடமுள்ள அவநம்பிக்கையும் பாவமும் பெருகியதே இஸ்ரயேலின் தோல்விக்கு காரணங்கள்.
12. இஸ்ரயேலின் அழிவிற்குப் பின் யூதா அரசு எத்தனை நூற்றாண்டுகள் நிலைத்திருந்தது? ஒன்றரை நூற்றாண்டு
13. யூதா நாடு எப்போது பாபிலோனின் ஆட்சிக்குட்பட்டது? கிமு. 587-ல்
14. யூதா நாட்டின் தோல்விக்கு காரணங்கள் யாவை? சிலை வழிபாடும், பாவமும் காரணமாக யூதாவும் அடிமைப்படுத்தப்பட்டது.
15. இஸ்ரயேல் மக்களுக்கு **இறைவிருப்பத்தை** வெளிப்படுத்தியவர்களே இறைவாக்கினர்கள்.
16. இறைவாக்கினர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் யாவர்? ஏலியா, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், ஆமோஸ்
17. யார் தலைமையில் யூதர்கள் சிரியர்களுக்கு எதிராக போரிட்டு வென்றனர்? யூதா மக்கபேயு
18. கி.மு. 63-ல் பாலஸ்தீனாவைக் கைப்பற்றிய உரோமை படைத்தளபதி யார்? போம்பே
19. இஸ்ரயேலர் ஏராளமான தோல்விகளை சந்தித்தபோதும் எந்த எதிர்நோக்குடன் வாழ்ந்து வந்தனர்? இஸ்ரயேலர் வாழ்க்கையில் ஏராளமான தோல்விகளை சந்தித்தபோதும் தங்களுக்காக ஒரு மீட்பர் பிறப்பார் என்ற எதிர்நோக்குடன் வாழ்ந்து வந்தனர்.
20. “அரசுரிமை உடையவர் வரும்வரையில் மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில் யூதாவை விட்டுச் **செங்கோல்** நீங்காது; அவர் மரபை விட்டுக் கொற்றம் மறையாது” (தொ.நூல் 49:10).
21. “என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும். உமது **அரியணை** என்றுமே நிலைத்திருக்கும்” (2சாமு. 7:16).
22. “இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு அவர் **அம்மானுவேல்** என்று பெயரிடுவார்” (எசா.7:14).
23. மீட்பரைப் பற்றிய எதிர்பார்ப்புடன் கிறிஸ்து பிறப்பு நாளில் பாடுவது என்ன? மீட்பரைப் பற்றிய எதிர்பார்ப்பு இஸ்ரயேலரின் வாழ்க்கையில் நிறைந்து நின்றிருந்தது. இறைவாக்கினர்களும் குலமுதல்வர்களும் மெசியாவின் வருகையைப் பற்றி உருவகங்கள் வழியாக வெளிப்படுத்தினர். கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்ட நாளின் இரவு மன்றாட்டில் நாம் இவ்வாறு பாடுகிறோம்.

“பற்பல வழிகளில் இறைவாக்கினரால்

இறைவன் குல முதுவர்களிடமாய் அறிவித்தார்.

காலநிறைவில் - தம் மகனை

அனுப்பி முன்மொழிந்ததுபோல்

உலகம் உருவாகுமுன்னே இருந்தவராம்.

**24.** “ஆண்டவரே உம்மை ஏத்திப் புகழ்வேன்; ஏனெனில் நீர் என்னை **கைதூக்கி** விட்டீர்” (திருப்பாடல்கள் 30:1).

**பாடம் 12**

## ஆலயத்தின் அமைப்பு

**பயிற்சி வினாக்கள்**

www.malankaralibrary.com

1. ஆலயங்களை கிழக்கு தரிசனமாக அமைப்பது ஏன்? கடவுள் வாழும் இல்லமே ஆலயம். மலங்கரை மரபில் ஆலயங்கள் கிழக்கு தரிசனமாக அமைக்கப்பட்டு அர்ச்சிக்கப்படுகின்றன. கிழக்கிலிருந்து சூரியன் உதிப்பதைப்போல நீதியின் சூரியனாகிய ஆண்டவரின் இரண்டாம் வருகையும் கிழக்கிலிருந்தே வரும் என எதிர்பார்க்கின்றோம். எனவே வழிபடுகின்ற இறைமக்கள் சமூகம் ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி கிழக்கு நோக்கி நின்று செபிக்கின்றனர்.

2. எருசலேம் தேவாலயத்தின் அமைப்பை விவரி? மலங்கரை வழிபாட்டு தேவாலயங்களின் அமைப்பு சாலமோன் கட்டி முடித்த எருசலேம் தேவாலயத்தை ஒத்திருக்கின்றன. எருசலேம் ஆலயத்தின் வெளியே உள்ள பகுதியில் பிற இனத்தவர்களுக்கு நுழைய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. உள்ளே உள்ள பகுதியில் யூதர்கள் மட்டுமே நுழைய அனுமதிக்கப்பட்டனர். லேவியர் தூயகத்திலும் தலைமை குருக்கள் அதித்தூயகத்திலும் அனுமதிக்கப்பட்டனர்.

3. மலங்கரை ஆலயத்தின் நான்கு பகுதிகள் யாவை? மலங்கரை ஆலயங்களில் நான்கு பகுதிகள் உள்ளன. கிழக்கு எல்லையில் அதிதூயகத்திற்கு சமமாக மத்பஹா, அதற்கு கீழாக அழிக்ககம் என்றழைக்கப்படுகின்ற கெஸ்த்றூமா, அதற்கு கீழாக இறைமக்கள் நிற்கின்ற ஹைக்கலா, மேற்கு எல்லையில் எருசலேம் தேவாலயத்தின் வெளிப்பகுதிக்கு சமமான மோண்டளம்.

1. மத்பஹா (வேள்விக்கூடம் அல்லது தூயகம்) குறிப்பு வரைக? ஆலயத்தின் மிகப்புனிதமான இடம் மத்பஹா. 'மத்பஹா' என்ற சுறியானி வார்த்தைக்கு 'திருப்பலி ஒப்பு கொடுக்கும் பீடம்' என்றும் 'திருப்பலிபீடம் அமைந்துள்ள பகுதி' என்றும் பொருள். இறைவனின் பிரசன்னமும் மகிமையும் இந்த இடத்தில் சிறப்பாக காணப்படுவதால் இதை மிகவும் பரிசுத்தமான இடம் என்று அழைக்கிறோம். கெஸ்த்றூமாவிலிருந்து ஒன்பது படிகளுள்ள உயர்ந்த இடமே மத்பஹா. குறைந்தது மூன்று படிகளாவது இருக்க வேண்டும். கடவுளின் அரியணையாகிய த்ரோணோஸ் (பலிபீடம்) அமைந்திருக்கும் இடத்திலிருந்து ஒன்பது படிகள் கீழே காணப்படுவது தூதர்களின் ஒன்பது குழுக்களை குறிக்கின்றது. மூன்று படிகளென்றால் மூன்று படி நிரைகள் நிற்கின்ற இடங்களைக் குறிக்கின்றது.

2. கெஸ்த்றூமா (அழிக்ககம்) குறிப்பு வரைக? எருசலேம் தேவாலயத்தின் தூய இடத்தோடு இதனை ஒப்புமைப்படுத்தலாம். 'கெஸ்த்றூமா' என்ற சுறியானி வார்த்தைக்கு 'தரையிலிருந்து உயர்ந்த இடம்' என்று பொருள். மத்பஹாவுக்கும் ஹைக்கலாவிற்கும் இடையேயுள்ள உயர்ந்த இடம் தான் இது. அழிகளால் வேறுபடுத்தி இருப்பதால் மலங்கரை திருச்சபையில் இதனை அழிக்ககம் என்று அழைக்கிறோம். மத்பஹாவில் நுழையாத குருக்களும் திருத்தொண்டர்களும் இங்கே நிற்கின்றனர். பாடகர் குழுவினுடைய இடமும் இதுவே. இன்று மலங்கரை ஆலயங்களில் செப மேசையும் இங்கே தான் வைக்கப்படுகின்றது. இங்கே சிலுவையும் திருவிவிலியமும் வைக்கப்பட்டிருக்கும்.

3.. ஹைக்கலா (வழிபாட்டு இடம்) குறிப்பு வரைக? ஆலயத்தின் மிகப்பெரிய பகுதி ஹைக்கலா ஆகும். இந்த சுறியானி வார்த்தைக்கு வழிபாட்டு இடம் என்று பொருள். இதுவே இறைமக்கள் நிற்கும் இடம். எருசலேம் தேவாலயத்தின் உட்பகுதியுடன் இதை ஒப்புமைப்படுத்தலாம். எருசலேம் தேவாலயத்தில் பெண்கள் ஆண்களின் பின்னால் நின்று கொண்டு ஆராதனையில் பங்கேற்றனர். ஆரம்பகாலத்தில் சுறியானி முறையில் உள்ள ஆலயங்களில் இம்முறையே பின்பற்றப்பட்டிருந்தது. ஹைக்கலாவின் வடக்குப் பகுதியில் ஆண்களும் தெற்குப் பகுதியில் பெண்களும் நிற்கின்ற முறையை இறை ஊழியர் மார் இவானியோஸ் ஆண்டகை நடைமுறைப்படுத்தினார். திருச்சபைத் தந்தையர்கள் ஹைக்கலாவை பூமியின் அடையாளமாக சித்தரிக்கின்றனர்.

4. மோண்டளம் (ஆறுதலின் இடம்) குறிப்பு வரைக? எருசலேம் தேவாலயத்தின் வெளிப்பகுதிக்கு சமமான பகுதியே மோண்டளம். இது ஆலயத்தின் மேற்கு எல்லையில் அமைந்த பகுதியாகும். ஆதித்திருச்சபையில் திருமுழுக்கு பெறாதவர்கள், வேதத்தைக் கற்பவர்கள், அனுதாபிகள், தண்டனையில் இருக்கின்றவர்கள் போன்றவர்களுக்கு வேளை செபங்களிலும் திருப்பலியின் முதல் பகுதியான நற்செய்தி ஆராதனையிலும் பங்கு கொள்வதற்கான இடமே இது. திருமுழுக்கு பெறவேண்டியவர்கள் விசுவாசம் கற்பதும் மன்றாடுவதும் இந்த பகுதியில் வைத்தே ஆகும். இன்று ஆலயத்தைச் சுற்றி பவனியின் போது விவிலியம் வாசிப்பதற்காக இந்த இடத்தைப் பயன்படுத்துகின்றனர்.

www.malankaralibrary.com

4. திருவழிபாட்டுக் காலத்தின் இரண்டாம் ஞாயிறு எவ்வாறு அழைக்கப்படுகிறது? திருவழிபாட்டின் ஆண்டின் இரண்டாம் ஞாயிறு ஹுதோஸ் ஈத்தோ என்றழைக்கப்படுகிறது. 'திருச்சபையின் புதுப்பித்தல்' என்பதே இந்த வார்த்தையின் பொருள்.

**குறு வினா விடைகள்**

கிழக்கிலிருந்து சூரியன் உதிப்பதைப்போல நீதியின் **சூரியனாகிய** ஆண்டவரின் இரண்டாம் வருகையும் கிழக்கிலிருந்தே என எதிர்பார்க்கின்றோம்.

1. இறைமக்கள் சமூகம் ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி **கிழக்கு** நோக்கி நின்று செபிக்கின்றனர்.
2. தேவாலயத்தின் அமைப்பு சாலமோன் கட்டி முடித்த **எருசலேம்** தேவாலயத்தை ஒத்திருக்கிறது.
3. மத்பஹா பற்றிய திருச்சபை தந்தையர்களின் கருத்து என்ன? திருச்சபைத் தந்தையாகிய ஏதென்ஸ் நகர் திவன்னாசியோஸ் மத்பஹாவை 'இம்மானுவேல்' எனக் குறிப்பிடுகின்றார். இம்மானுவேல் என்ற வார்த்தையின் பொருள் 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பதாகும். தூய நற்கருணை வாயிலாக இயேசு மத்பஹாயில் நம்மோடு இருக்கிறார். எனவே மலங்கரை முறைப்படி ஆலய அர்ச்சிப்பின் போது மத்பஹா அர்ச்சிப்பிற்கு மிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. திருச்சபை தந்தையர்கள் மத்பஹாவை பரலோகத்தின் முன் அடையாளமாக சித்தரிக்கின்றனர்.
4. ஹைக்கலாவில் விசுவாசிகள் எவ்வாறு செயல்பட வேண்டும்? ஹைக்கலாவின் நடுப்பகுதியில் சாதாரணமாக தொங்கும் விளக்கு காணப்படுகிறது. இதனில் விசுவாசிகள் காணிக்கையாக எண்ணெய்யும் திரியும் கொண்டு வந்து சமர்ப்பிப்பது வழக்கமாகும். ஹைக்கலாவில் நுழைவதற்கு முன்னால் விசுவாசிகள் தலைவணங்கி சிலுவை வரைந்து இவ்வாறு கூறுகின்றனர்: 'எரிபலியுடன் உமது இல்லத்தினுள் செல்வேன்: என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்' (திருப்பாடல்கள் 66:13). அதன் பின் ஹைக்கலாயில் நுழைந்து வணங்கிய பின் இவ்வாறு மன்றாடுகிறோம்: 'நானோ உம் பேரருளால் உமது இல்லம் சென்றிடுவேன்: உம் திருத்தூயகத்தை நோக்கி இறையச்சத்துடன் உம்மைப் பணிந்திடுவேன்' (திருப்பாடல்கள் 5:7).
5. மோண்டளம் முதல் மத்பஹா வரையுள்ள படிநிலைகளின் பொருள் என்ன? மோண்டளம், ஹைக்கலா, கெஸ்த்றூமா, மத்பஹா என்ற வரிசையில் ஒவ்வொன்றும் ஒழுங்கு முறைப்படி உயர்ந்து காணப்படுகிறது. இந்த உயர்வு பாவநிலையிலிருந்து - தூய்மை நிலைக்குள்ள வளர்ச்சியைக் காட்டுகிறது.
6. ஹுதோஸ் ஈத்தோ நாளில் நற்செய்தி வாசகத்திற்குப் பின் பாடுகின்ற பாடல் எது? தூய்மை மிகும் துயகமுள் நுழைவோராம் குருமார்களை அழைத்துரைப்பீர் இங்ஙனமாய் நன்முறையில் கைகழுவி அகத்தூய்மை அடைந்தபின்பே திருத்தலத்தில் நுழைந்திடுவீர் ஹா-உ-ஹா நெருப்பை அன்றோ சேவிக்கின்றீர்
7. “என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய **இறைவேண்டலின்** வீடு என அழைக்கப்படும்” | (மாற்கு 11:17).

**பாடம் 13**

**ஆலயத்தின் புனிதப் பொருட்கள்**

**பயிற்சி வினாக்கள்**

1. த்றோணோஸ் எவற்றையெல்லாம் குறிப்பிடுகிறது? விவரி? 'த்ரோணோஸ்' என்ற சுறியானி வார்த்தைக்கு 'அரியணை' என்று பொருள். விண்ணகத் தந்தையின் சிறப்பான பிரசன்னம் த்ரோணோசில் காணப்படுவதால் அதை விண்ணக அரசர் வீற்றிருக்கும் அரியணை என்கிறோம். அது எருசலேம் தேவாலயத்தில் அமைந்திருந்த இரக்கத்தின் இருக்கையைக் (எபி. 9:5) குறிக்கின்றது. திருப்பலியின் வாயிலாக இயேசு மெசியாவின் சிலுவை மரணத்தையும் கல்லறை அடக்கத்தையும் உயிர்த்தெழுதலையும் நினைவு கூர்வதனால் த்ரோணோஸ் கோகுல்த்தா மலையையும் ஆண்டவரின் கல்லறையையும் குறிக்கின்றது.

www.malankaralibrary.com

வாழ்வின் அப்பமாகிய தூய நற்கருணை த்ரோணோசின் மேல் கொண்டாடப்படுவதால் வாழ்வின் மேசை என்றும் அழைக்கப்படுகிறது. த்ரோணோசின் மேல் திருப்பலி நிறைவேற்றப்படுவதால் இது 'பலி பீடம்' என்றும் அழைக்கப்படுகிறது. த்ரோணோஸ் நமது ஆண்டவரை குறிக்கின்றது.

2. விரிகூட்டத்தின் பல்வேறு நிறங்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றன? தூய த்ரோணோசின் நடுவில் தபலீத்தா வைத்து அதன்மேல் மூன்று நிறங்களுடன் கூடிய விரிகூட்டம் விரித்து அவற்றின் மேல் தான் காசாவும் பீலாசாவும் வைக்கப்படுகின்றன. விரிகூட்டத்தின் நடுப்பகுதி வெள்ளையும் அதன் பின்னால் பச்சையும் மிகவும் பின்னால் சிவப்பும் தான் இதன் நிறங்கள். வெள்ளை நிறம் தூய கத்தோலிக்க திருச்சபையையும், பச்சை நிறம் பல வண்ணங்கள் நிறைந்த பூமியையும், சிவப்பு நிறம் அகிலத்தையும் குறிக்கின்றது.

3. சித்தோலை எதைக் குறிப்பிடுகிறது? அது ஒரே நிறத்திலான மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பது ஏன்? த்ரோணோஸை அலங்கரிப்பதற்கான பட்டுத் துணியே சித்தோலை. கல்லறை அடக்க வேளையில் இயேசுவின் திருவுடலைப் பொதிந்த மேல்தரமான பட்டுத் துணியை இது குறிக்கின்றது. சித்தோலை அரியணையிலிருக்கும் ஆண்டவரின் மாட்சியைக் குறிக்கிறது. ஒரே கடவுள் மூன்று ஆட்களாக அறியப்படுவதால் சித்தோலை எனும் ஒரே துணியானது மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இம்மூன்று பகுதிகளிலுமுள்ள ஒரே நிறம் திரித்துவத்தின் மூன்று ஆட்களும் உள்ளியல்பில் சரிநிகரானவர்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது. சிலுவை அடையாளமுடைய நடுப்பகுதி இறைமக்களையும், இடப்பகுதி தந்தைக் கடவுளையும், வலப்பகுதி தூய ஆவியையும் குறிக்கின்றன. நடுப்பகுதியிலுள்ள சிலுவை கல்வாரியில் உயர்த்தப்பட்ட மீட்பின் அடையாளமாம் சிலுவையைக் குறிக்கின்றது. மனித அவதாரம் எடுத்த கிறிஸ்துவிற்கு மூவோரிறைவனில் என்றுமுள்ள உறவை சித்தோலை குறிக்கின்றது.

4. மலங்கரை முறையில் சிலுவையில் அறைப்பட்ட உருவமில்லாத சிலுவையை பயன்படுத்துவது ஏன்? த்ரோணோசின் நடுவிலுள்ள சிலுவை இயேசுவைக் குறிப்பிடுகிறது. கிழக்கத்திய திருச்சபைகளின் மரபில் சிலுவை ஆண்டவரின் பாடுகளையும், மரணத்தையும் மட்டுமல்லாமல் உயிர்த்தெழுந்த இயேசுவையும் குறிக்கின்றது. எனவே மலங்கரை முறைப்படி அறையப்பட்ட உருவம் இல்லாத சிலுவையை நாம் பயன்படுத்துகிறோம்.

5. தூபகலசம் எதைக் குறிக்கின்றது? தூப கலசம் இறைத்தாயையும், நெருப்பு தூய கன்னிமரியின் கருவில் வாழ்ந்த இறைவனையும் குறிப்பிடுகிறது. அதன் சங்கிலிகளில் முதலாவது தந்தையாகிய கடவுளையும், இரண்டாவதும் மூன்றாவதுமான சங்கிலிகள் மனித அவதாரம் செய்த இறைவனும் மனிதனுமான இறைமகனையும், நான்காவது சங்கிலி தூய ஆவியையும் குறிக்கின்றன. சங்கிலிகளை ஒன்றிக்கின்ற மேலுள்ள வளையம் தூய திருத்துவத்தின் ஒன்றிப்பையும் சங்கிலிகளிலுள்ள 12 மணிகள் 12 திருத்தூதர்களையும், 72 கண்ணிகள் 72 சீடர்களையும் குறிக்கின்றன. தூப கலசத்தின் மேல்தட்டு விண்ணகத்தையும், அடித்தட்டு மண்ணகத்தையும் அதில் போடப்படும் கரி பாவிகளான மனித குலத்தையும், தீ தூய ஆவியாகிய கடவுளையும் குறிக்கிறது. பாவ மாசுகளால் கரிக்கு ஒப்பான மனிதர் இறைவனின் பிரசன்னத்தில் தீ வடிவிலாக்கப்பட்டு தூய ஆவியால் நிரப்பப்படுகின்றார். தூப கலசத்திலிருந்து உயர்கின்ற தூபம் மனிதர்களின் மன்றாட்டும் புண்ணியங்களும் இறைவனுக்கு காணிக்கையாக அர்ப்பணிக்கப்படுவதை குறிக்கின்றது.

6. குறிப்பு வரைக: தபலீத்தா, மென்துகில், புனித சிலுவை, திரை, காசா, பீலாசா, நற்கருணை பேழை.

1 தபலீத்தா (சிறிய த்ரோணோஸ்)

திருப்பலிக்கான கிண்ணமும், தட்டமும் (காசா, பீலாசா) வைக்கக்கூடிய ஒரு சிறிய பலகையே தபலீத்தா. அர்ச்சிக்கப்பட்ட த்ரோணோசிலும் தபலீத்தாவின் பயன்பாடு மறுக்க முடியாததகும். அவசர வேளைகளில் அர்ச்சிக்கப்பட்ட த்ரோணோஸ் இல்லாமலிருந்தாலும் தபலீத்தா மேல் திருப்பலி நிறைவேற்றலாம். தலீத்தா மீட்பின் சிலுவையைக் குறிப்பிடுகிறது. எனவே தான் மலங்கரை சபையில் தபலீத்தா மரத்தினால் செய்யப்படுகிறது. தபலீத்தாயின் ஒருபுறம் புனித மூறோனால் அர்ச்சிக்கப்படுகிறது. மறுபக்கம் அர்ச்சித்த ஆயரின் பெயரும், அர்ச்சிக்கப்பட்ட நாளும் சிலுவை வடிவில் சுறியானியில்

www.malankaralibrary.com

எழுதப்பட்டிருக்கும். ஆயரின் அப்போஸ்தலிக்க அதிகாரத்தையே இது குறிப்பிடுகிறது.

2. சோசப்பா (மென்துகில்)

இது காசாவையும் பீலாசாவையும் மூடுகின்ற ஒரு வெள்ளைத் துணி ஆகும். புனித மறைபொருட்களில் மறைந்திருக்கின்ற இறைவனின் காண இயலாத தன்மையை இது குறிக்கின்றது. இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களுக்கும் பாலைவனத்தில் வைத்து தண்ணீர் வழங்கிய நெருப்பு பாறை. ஆண்டவரின் கல்லறையில் வைக்கப்பட்டுள்ள கல் முதலியவற்றை இது நினைவூட்டுகிறது.

3. புனித சிலுவை

த்ரோணோசின் நடுவிலுள்ள சிலுவை இயேசுவைக் குறிப்பிடுகிறது. கிழக்கத்திய திருச்சபைகளின் மரபில் சிலுவை ஆண்டவரின் பாடுகளையும், மரணத்தையும் மட்டுமல்லாமல் உயிர்த்தெழுந்த இயேசுவையும் குறிக்கின்றது. எனவே மலங்கரை முறைப்படி அறையப்பட்ட உருவம் இல்லாத சிலுவையை நாம் பயன்படுத்துகிறோம்.

4. திரை

திரை த்ரோணோசின் மறைபொருள் தன்மையையும் புனிதத் தன்மையையும் நினைவூட்டுகிறது. எருசலேம் தேவாலயத்தின் தூயகத்தையும் அதிதூயகத்தையும் பிரித்துக் காட்டுவதற்கே திரை பயன்படுத்தப்பட்டது. விண்ணகத்திற்கும் மண்ணகத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை திரை குறிக்கின்றது. தலைமை குருவாகிய கிறிஸ்து மனித குலத்திற்காக பலி செலுத்துவதைப் போன்று மத்பஹாயில் குருக்கள் விசுவாசிகளுக்காக பலி நிறைவேற்றுகின்றனர்.

5. காசாவும் பீலாசாவும் (கிண்ணமும், தட்டமும்)

திருப்பலிக்குள்ள இரசத்தை வைக்கின்ற பாத்திரமே காசா (கிண்ணம்). திருப்பலிக்குள்ள அப்பத்தை வைக்கின்ற பாத்திரமே பீலாசா (தட்டம்). உடன்படிக்கை பேழையில் மன்னா வைக்கப்பட்டிருந்த பொற்சாடிக்கு சமமானதே இந்த காசாவும் பீலாசாவும். அவை நமது ஆண்டவரின் திருவுடல் வைக்கப்பட்டிருந்த கல்லறையைக் குறிக்கின்றது.

6. சக்றாரி (நற்கருணை பேழை)

தேவ நற்கருணை பாதுகாக்கப்படும் பேழையே இது.

## குறு வினா விடைகள்

1. ஆலயம் என்றால் என்ன? கடவுள் வாழும் இல்லமே ஆலயம். ஆலயத்தில் நடத்தப்படும் ஆராதனை பரலோக அனுபவத்தின் முன்சுவையே. ஆலயத்தின் அமைப்பும் அதில் பயன்படுத்துகின்ற புனிதப்பொருட்களும் இறைபிரசன்னத்தை எடுத்துரைக்கின்றன.
2. 'த்ரோணோஸ்' என்ற சுறியானி வார்த்தைக்கு 'அரியணை' என்ன பொருள்? 'த்ரோணோஸ்' என்ற சுறியானி வார்த்தைக்கு 'அரியணை' என்று பொருள்.
3. சிறு பலிபீடம் எனப்படுவது யாது? தபலீத்தா(சிறிய த்ரோணோஸ்)
4. தபலீத்தாவில் என்ன எழுதப்படுகிறது? தபலீத்தாயின் ஒருபுறம் புனித மூறோனால் அர்ச்சிக்கப்படுகிறது. மறுபக்கம் அர்ச்சித்த ஆயரின் பெயரும், அர்ச்சிக்கப்பட்ட நாளும் சிலுவை வடிவில் சுறியானியில் எழுதப்பட்டிருக்கும். ஆயரின் அப்போஸ்தலிக்க அதிகாரத்தையே இது குறிப்பிடுகிறது.
5. மலங்கரை வழிபாட்டில் மெழுகுவர்த்திகளின் சிறப்பு என்ன? த்ரோணோசில் எரியும் மெழுகுவர்த்திகள் இறைப்பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றன. மெழுகுவர்த்தியிலிருந்து எழும் ஒளியானது பாவ இருளினின்று விசுவாசிகள் ஒளியை நோக்கி திரும்ப வேண்டுமென்று கற்பிக்கிறது. மத்பஹாயில் வைக்கப்பட்டுள்ள பதிமூன்று மெழுகுவர்த்திகளில் பன்னிரண்டு மெழுகுவர்த்திகள் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களையும் நடுவிலுள்ள மெழுகுவர்த்தி இறைபிரசன்னத்தை (இயேசுவை) குறிக்கின்றது.
6. மலங்கரை வழிபாட்டில் நற்செய்தி பீடத்தின் முக்கியத்துவம் என்ன? விசுவாசிகளுக்கு இரண்டு

www.malankaralibrary.com

வகையான ஆன்மீக உணவு தேவாலயத்திலிருந்து கிடைக்கிறது. நமது ஆண்டவரின் திருஉடலும், திருஇரத்தமும், இறைவனின் திருவார்த்தையும் ஆகும். முதலாவது த்ரோணோசிலிருந்தும், இரண்டாவது நற்செய்தி பீடத்திலிருந்தும் கிடைக்கிறது.

7. கபலானா (திருப்பாத்திர மூடி) என்றால் என்ன? காசாவையும் பீலாசாவையும் மூடப்பயன்படும் சிவப்பு துணியே இது.
8. மலங்கரை வழிபாட்டில் மணி மற்றும் மறுபஹாஸா பயன்படுத்துவதன் பொருள் என்ன? மணி மற்றும் மறுபஹாஸா இவற்றின் முழக்கம் இறைபிரசன்னத்தின் நினைவும், வானதூதர்களின் புகழ்ச்சியின் அடையாளமுமாகும். த்றோணோசை சுற்றி நிற்கும் வானதூதர்களை மறு-பஹாஸா குறிக்கின்றது. விசிறி போன்ற இஃது வானதூதர்களின் சிறகுகளைக் குறிக்கின்றது.
9. சிலுவையை சுறியானியில் எவ்வாறு அழைக்கிறோம்? 'ஸ்லீபோ'
10. சிலுவையை மதிப்பதைப் பற்றியும், சிலுவை வரைவதைப்பற்றியும் சிலுவையின் குக்கிலியோனில் (தூப மன்றாட்டு) பாடும் பாடல் எது?
11. "வாழ்வீயும் நம் சிலுவையினை அல்பகலென்றும்
12. வணங்குகிறோம் நாங்கள்
13. அரணும் சரணும் அது வென்றே நெற்றியதன் மேல்
14. வரைகின்றோம் நாங்கள்
15. கா-க்கும் சிலுவை அல்லும் பகலும் பகைவனவன் சேனை-நின்று தினம்-எம்மை".
16. "படைகளின் ஆண்டவரே! உமது **<u>உறைவிடம்</u>** எத்துணை அருமையானது!" (திருப்பாடல்கள் 84:1)

பாடம் 14

## திருவழிபாட்டில் அடையாளச் செயல்கள்

### பயிற்சி வினாக்கள்

1. அடையாளம் என்றால் என்ன? சில உண்மைகளை புரியவைப்பதற்காக நாம் பயன்படுத்துகின்ற சின்னங்களே அடையாளங்கள். எடுத்துக்காட்டாக தாய் தன் குழந்தைக்கு முத்தம் வழங்குவதன் வாயிலாக தாயின் அன்பை நாம் புரிந்து கொள்கிறோம். இங்கே இந்த முத்தம் ஒரு அடையாளமாகும். இதைப்போன்று நம் அனுதின வாழ்வில் ஏராளமான அடையாளச் செயல்களை நாம் பயன்படுத்துகின்றோம்.

2. மலங்கரை திருவழிபாட்டு முறைப்படி கிழக்குத் திசை நோக்கி மன்றாடுவது ஏன்? கிழக்கு நோக்கி மன்றாடுவது நமது மரபு. தொடக்கத் திருச்சபை நீதியின் சூரியனாக இயேசு கிறிஸ்துவை கருதியது. ஆகவே சூரியன் உதிக்கும் திசையான கிழக்கிற்கு தொடக்கத் திருச்சபை முக்கியத்துவம் கொடுத்திருந்தது. நம் ஆண்டவர் கிழக்கிலிருந்து மீண்டு வருவாரென்ற எதிர்பார்ப்பும் அறிவுரையும் திருத்தூதர்களிடமிருந்து திருச்சபைக்கு கிடைத்தது. அதன் விளைவாக ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி நாம் காத்திருக்கின்றோம். எனவே நாம் கிழக்குத் திசை நோக்கி மன்றாடுகின்றோம் (மத்தேயு 24:27-30).

3. சிலுவை வரையும் போது நாம் எவற்றை நினைவு கூர்கின்றோம்? சிலுவை வரையும் போது நமது ஆண்டவரின் பாடுகளை நினைவு கூரவும் அவற்றோடு ஒன்றிணையவும் செய்கிறோம்.

4. தூப அர்ப்பணத்திற்கு மலங்கரை திருவழிபாட்டு முறையில் முக்கிய பங்கு வழங்கியிருப்பது ஏன்? திருச்சபையின் வழிபாட்டு வாழ்வில் இன்றியமையாத ஒரு பகுதியே தூப அர்ப்பணம். திருப்பலியிலும் வேளை செபங்களிலும், அருளடையாளங்களிலும் திருச்சடங்குகளிலும் நாம் தூப அர்ப்பணம் நடத்துகின்றோம். நமது மன்றாட்டுக்கள் விண்ணகத்திற்கு உயர்வதன் அடையாளமே தூப அர்ப்பணம். நபர்களையும் உடைமை களையும் இடங்களையும் புனிதப்படுத்துவதனுடையவும் மதிப்பளிப்பதனுடையவும் அடையாளமாக தூப அர்ப்பணம் நடத்துகின்றோம்.

5. மலங்கரை திருவழிபாட்டில் பவனிகள் எதை பொருள்படுத்துகின்றன?

நமது திருவழிபாட்டு முறைப்படி பல்வேறு பவனிகளை நடத்துகின்றோம். திருப்பலியில் நாம் நடத்துகின்ற பவனி மத்பஹாவில் மட்டுமே நடத்துகிறோம். முக்கியமாக திருப்பலியில் நான்கு முறை பவனி நடத்தப்படுகிறது. 1. பகிரங்கத் திருச்சடங்கு தொடங்கும்போது, 2. தூபகலசம் வாழ்த்தியபின், 3.

www.malankaralibrary.com

தேவநற்கருணை பெறுவதற்கு முன், 4. தேவநற்கருணை உட்கொண்ட பின். இவை அனைத்திலும் தூபகலசம், ஒளிரும் மெழுகுவர்த்திகள் போன்றவைகளோடு மணிகள் மறுபஹாஸா போன்றவை ஒலிக்கப்படவும் பெரிய மணி அடிக்கவும் செய்யும்போது பவனியின் மதிப்பும் பக்தியும் ஈர்ப்பும் அதிகரிக்கின்றன.

மேற்கூறியவையன்றி மத்பஹாவின் வெளியே, ஆலயத்தின் உள்ளேயும் ஆலயத்தின் வெளியேயும் திருநாட்களில் நாம் பவனிகள் நடத்துகிறோம். இவை ஒவ்வொன்றிற்கும் வேறுபட்ட பொருளுண்டு. எனினும் நமது ஆராதனை முறைகளில் நாம் நடத்துகின்ற பவனிகள் அனைத்தும் புனித பயணத்தின் அடையாளமாக நிலைகொள்கின்றன. திருச்சபை வாழ்வு ஒரு திருப்பயணம் ஆகும். இது விண்ணக கானான் அல்லது விண்ணரசை நோக்கிய திருச்சபையின் திருப்பயணம். அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கும், பாவத்திலிருந்து நிலைவாழ்விற்கும் இருளிலிருந்து ஒளிக்குமுள்ள இறைமக்களின் புனித பயணமே திருச்சபை வாழ்வு. ஆகவே மேற்கூறிய பவனிகள் அனைத்தும் இந்த புனித பயணப் பண்பை குறிப்பிடுகின்றன.

### குறு வினா விடைகள்

1. மலங்கரை திருவழிபாட்டு முறை எந்த வழிபாட்டுமுறை குடும்பத்தை சார்ந்தது? அந்தியோக்கியன் திருவழிபாட்டுமுறை குடும்பம்
2. சில உண்மைகளை புரியவைப்பதற்காக நாம் பயன்படுத்துகின்ற **<u>சின்னங்களே</u>** அடையாளங்கள்.
3. கிழக்குத் திசையில் ஆண்டவரின் இரண்டாம் வருகையை பற்றி விவிலியத்தில் நற்செய்தியில் உள்ள பகுதி எது? மத்தேயு 24:27-30
4. கிழக்குத் திசையில் மலங்கரை வழிபாட்டு முக்கியச் செயல்கள் என்ன? மலங்கரை ஆலயங்களை கிழக்கு மேற்காக கட்டி எழுப்புகிறோம். கிழக்குத் திசை நோக்கி நின்று திருப்பலி நிறைவேற்றுகிறோம். இறந்தவர்களை கிழக்கு முகமாக அடக்கம் செய்கிறோம்.
5. மலங்கரை திருவழிபாட்டில் எப்போது சிலுவை வரைய வேண்டும்? திருத்துவபுகழ் கூறும்போதும், ஸ்லீபா என்ற வார்த்தையை சொல்லும் போதும், சிலுவையை முத்தம் செய்யும் போதும் ஆசீர்வாதம் ஏற்கும் போதும் நாம் சிலுவை வரைகிறோம்.
6. 'சிலுவையில் நாம் எவற்றை நினைவு கூர்கிறோம்? நமது ஆண்டவரின் மீட்பின் நிகழ்வுகளை சிலுவையின் வாயிலாக நாம் நினைவுகூர்கிறோம். சிலுவை மரணம் வாயிலாக மனுக்குலத்தை கடவுள் மீட்டார். ஆகவே சிலுவையை நாம் ஆராதிக்கின்றோம். வணங்குகின்றோம், மதிக்கின்றோம்.
7. நாம் சிலுவை வரைய வேண்டிய முறை பற்றிக் கூறுக? மூவொரிறைவனின் இரண்டாவது ஆளான மகனாகிய இறைவன் மனிதரை மீட்பதற்காக விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கியதை காண்பிப்பதற்கு நெற்றியிலிருந்து நெஞ்சிற்கும், பாவத்தால் இடது பக்கமாயிருந்த (இறைவனின் கோபத்திற்கு ஆளாயிருந்த) நம்மை மீட்பர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பால் வலது பக்க மக்களாக (இறைவனின் மகிழ்ச்சிகுரியவர்கள்) காண்பிப்பதற்கு இடது தோளிலிருந்து வலது தோளிற்கும் சிலுவை வரைய வேண்டும்.
8. சிலுவை எதற்கு அடையாளமாக உள்ளது? சிலுவை இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள உறவையும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவையும் சுட்டிக் காட்டும் அடையாளமாகும். தியாகம், அன்பு இவற்றின் சிறந்த மாதிரியை நாம் சிலுவையில் காண்கிறோம். இறந்து உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சிலுவையில் நாம் காண்கிறோம்.
9. மலங்கரை திருவழிபாட்டில் நின்று கொண்டு மன்றாடுதலின் பொருள் என்ன? திருப்பலியிலும் நமது வேளை மன்றாட்டுகளிலும் நாம் நின்று கொண்டே பங்கேற்கின்றோம். இது முற்றிலும் ஒரு அடையாளமாகும். கடவுள் நமது தந்தையும் நாம் அவரது பிள்ளைகளும் ஆவோம். பிள்ளைகளுக்குள்ள சுதந்திரத்தையும் அதே வேளையில் தந்தையோடு உள்ள பக்தியையும் காட்டுகிறது. மட்டுமன்றி நாம் உயிர்த்தெழுதலின் மக்கள் என்பதையும் இது குறிக்கின்றது.
10. மலங்கரை திருவழிபாட்டில் பணிந்து வணங்குதலின் பொருள் என்ன? இறைவன் கெத்சமெனித் தோட்டத்தில் மூன்று முறை முழந்தாள் படியிட்டு மன்றாடியதை தியானித்தும் நம்மை முழுவதுமாக அர்ப்பணித்தும் நெற்றி நிலத்தை தொடும் வண்ணம் நாம் பணிந்து வணங்குகிறோம். படைத்தவரின் முன்னிலையில் படைப்பின் முழு பணிவை இது குறிப்பிடுகிறது.

www.malankaralibrary.com

11. மலங்கரை திருவழிபாட்டில் தலை வணங்குதலின் பொருள் என்ன? இறையாசீர் பெற்றுக்கொள்வதற்காக நாம் எளிய மனத்தோடு தலை வணங்குகிறோம். தலை வணங்குதல் நமது எளிமையையும், பணிவையும் அடையாளப்படுத்துகிறது. திருப்பலியில் பல வேளைகளில் நாம் தலை வணங்கி மன்றாடுகிறோம். கடவுள் அரசரின் அரசரானதால் நமது சிறப்பு மன்றாட்டுகளின் வேளையில் நாம் இறைவனின் முன்னால் நிற்பதனால், அவருக்கு ஆதரவை வெளிப்படுத்த நாம் தலை வணங்கி கும்பிடுகின்றோம்.
12. மலங்கரை திருவழிபாட்டில் கரம் விரித்து நின்றபடி செபித்தலின் பொருள் என்ன? 'பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே' என்ற மன்றாட்டைச் சொல்லும் போது நாம் கைகளை விரித்து மன்றாடுகிறோம். அதைப் போலவே திருப்பலியில் குருவானவர் பல வேளைகளிலும் கை விரித்து மன்றாடுகின்றார். இது நம்மையும் உலகையும் இறைவன் திருமுன்னிலையில் சமர்ப்பிப்பதனுடையவும், இறைவனிடமிருந்து ஆசீரும் அருளும் பெற்றுக்கொள்வதனுடையவும் அடையாளமாகும். கைகளை நெஞ்சோடு சேர்த்து நிற்பதும் கைகளை கூப்பி நிற்பதும் பயபக்தியின் அடையாளமாகும்.
13. ஆரோனுடையவும் சக்கரியாவினுடையவும் தூபத்தை நினைவு கொண்டு திருப்பலியில் நாம் பாடும் பாடல் எது?
“ஆரோன் செக்கரியா இவர்கள் தூபம் ஏற்றதுபோல்
சாவை வென்றோர் பினகாசின் வேண்டல் கேட்டது போல்
அடியார் தூபமிதை நாதா அன்புடன் ஏற்றருள்வீர் நீரும்”
14. “கடவுளே! உமது **கோவிலின்** நடுவில் உம் பேரன்பை நினைந்து உருகினோம்” (திருப்பாடல்கள் 48:9).

**பாடம் 15**

## மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையில் காலம் சென்ற ஆயர்கள்

### பயிற்சி வினாக்கள்

1. பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகை கத்தோலிக்கத் திருச்சபையில் எவ்வாறு மறுஒன்றிப்படைந்தார்? கி.பி 52-ல் இயேசுவின் சீடரான தோமையார் நற்செய்தியை அறிவிப்பதற்காக இந்தியாவுக்கு வந்தார். கேரளாவில் அவர் உருவாக்கிய கிறிஸ்தவ சமூகம் ஒரு உள்நாட்டு சபையாக வளர்ந்து பரவியது. 15-ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகை தந்த போர்த்துக்கீசியர் லத்தீன் வழிபாட்டு முறைகளையும் சடங்கு முறைகளையும் கிறிஸ்தவர்களிடையே புகுத்த முயன்றனர். இதன் விளைவாக கேரள கிறிஸ்தவர்களிடையே பிரிவினை உருவானது. ஒரு பகுதி மக்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் கூட்டுறவிலிருந்து வேறுபட்டு நின்றனர். இவ்வாறாக வேறுபட்டு நின்ற சமூகத்தின் ஒரு பகுதியினர் 1930 செப்டம்பர் 20-ல் மேதகு மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் கத்தோலிக்கத் திருச்சபையோடு ஒன்றிப்பை ஏற்படுத்தினர். இவ்வாறு ஒன்றிப்பை ஏற்படுத்திய நிகழ்வை மறுஒன்றிப்பு என்கிறோம்.

2. மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையில் காலம் சென்ற ஆயர்களைப் பற்றி குறிப்பெழுதுக?

1. கீவற்கீஸ் மார் இவானியோஸ் (1882-1953)

மார் இவானியோஸ் ஆண்டகை ஒவ்வொரு வேளைகளிலும் ஒவ்வொரு பெயர்களில் அழைக்கப்பட்டிருந்தார்: பணிக்கர் செம்மாச்சன், எம்.எ. அச்சன், எம்.டி, செமினாரி முதல்வர், செராம்பூர் கல்லூரி பேராசிரியர், பெதனி மட நிறுவனர், ஆபோ கீவர்கீஸ், பெதனி ஆயர், மறுஒன்றிப்பின் சிற்பி, பேராசிரியர் மார் இவானியோஸ்.. பாரத நியூமேன். இந்த பெயர்கள் அனைத்தும் ஆண்டகையின் தனித்தன்மையையும் அவர் தலைமை தாங்கிய பல தலைமைப் பொறுப்புகளையும் குறிப்பிடுகின்றன.

மார் இவானியோஸ் ஆண்டகை மாவேலிக்கரை பறம்பில் பணிக்கர் வீட்டில் 1882 செப்டம்பர் 21-ம் நாள் பிறந்தார். M.A பட்டம் பெற்ற அவர் 1908 ஆகஸ்ட் 15-ம் நாள் பருமலை குரு மடத்தில் வைத்து வட்டச்சேரில் மார் திவன்னாசியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். 1919 ஆகஸ்ட் 15-ல் பெதனி ஆசிரமும் 1925 செப்டம்பர் 8-ல் பெதனி துறவியர் மடமும் நிறுவினார். 1925 மேய் 1-ம் நாள் நிரணம் என்ற இடத்தில் மார் இவானியோஸ் என்ற பெயரில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1929 பிப்ரவரி 13-ல்

www.malankaralibrary.com

மார் இவானியோஸ் பெதனியின் பேராயரானார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் கூட்டுறவிலிருந்து பிரிந்து நின்ற யாக்கோபாய திருச்சபையில் மார் இவானியோஸ் பிறந்து வளர்ந்தார். தமது சபையில் காணப்பட்ட சண்டைகளும் சச்சரவுகளும் கத்தோலிக்கத் திருச்சபையோடு மறுஒன்றிப்படைய அவரைத் தூண்டின. ஆர்த்தடோக்சு சபையின் ஆயர்மன்ற கட்டளைக்கு ஏற்ப அவர் மறுஒன்றிப்பு முயற்சிகளைத் தொடங்கினார். கத்தோலிக்கத் திருச்சபையில் மறுஒன்றிப்படைவதற்கான ஒழுங்குமுறைகளைச் செய்த போது ஏனைய ஆயர்கள் பின்வாங்கினர். உண்மையான சபையை கண்டடைந்த மார் இவானியோஸ் நான்கு பேருடன் 1930 செப்டம்பர் 20-ல் கத்தோலிக்கத் திருச்சபையோடு மறுஒன்றிப்படைந்தார்.

1933 மார்ச் 12-ம் நாள் அவர் திருவனந்தபுரம் மறைமாநிலத்தின் பேராயரானார். அவரின் பணிக்காலத்தில் ஏராளமான ஆலயங்களும் பள்ளிக்கூடங்களும், மார் இவானியோஸ் கல்லூரியும் நிறுவப்பட்டது. இவ்வாறாக சமூகத்தின் பல துறைகளில் அவர் இறங்கிச் சென்றார். 1953 ஜூலை 15-ம் நாள் மார் இவானியோஸ் ஆண்டகை காலமானார். இருபதாம் நூற்றாண்டு வெற்றி கண்ட மிகச் சிறந்த மறுஒன்றிப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கிய நபர் என்ற நிலையிலும் தூய வாழ்க்கையின் அடிப்படையிலும் மேதகு பேராயரை புனிதர் பதவிக்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. திருவனந்தபுரம் பட்டம் புனித மரியன்னை பேராலயத்தில் மேதகு பேராயர் இறுதி ஓய்வு கொள்கிறார்.

**2. யாக்கோபு மார் தியோபிலோஸ் (1891-1956)**

கோட்டயத்திற்கு அருகேயுள்ள ஒளச என்ற இடத்தில் களப்புரக்கல் குடும்பத்தில் 1892 பிப்ரவரி 29-ம் நாள் மார் தியோபிலோஸ் பிறந்தார். ஆசிரியராக இருந்த அவர் 1920-ல் பெதனி ஆசிரமத்தில் உறுப்பினராக சேர்ந்து 1924-ல் குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டார். 1929 - ல் மார் இவானியோஸ் பேராயரோடு இணைந்து பெதனி ஆயராக பணியைத் தொடங்கினார். 1930 செப்டம்பர் 20-ல் மார் இவானியோஸ் ஆண்டகையோடு கத்தோலிக்கத் திருச்சபையில் மறுஒன்றிப்படைந்தார். 1932-ல் திருவல்லா மறைமாவட்ட பொறுப்பை அவர் ஏற்றெடுத்தார். ஏராளமான ஆலயங்களும் பள்ளிக்கூடங்களும் இவரின் பணி காலத்தில் நிறுவப்பட்டது. 1956 ஜூன் 27-ல் காலம்சென்ற அவரின் உடல் திருவல்லா புனித ஜோண் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. 3. தோமஸ் மார் தியஸ்கோரஸ் (1884 - 1943)

க்னானாய சமூகத்தில் பாத்திரியர்க்கீஸ் பிரிவிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபைக்கு மறுஒன்றிப்படைந்த ஆயரே தியஸ்கோறஸ் ஆண்டகை. இவர் கோட்டயத்திற்கு அருகிலுள்ள சிங்வ னத்தில் 1884 ஜனவரி 4-ம் நாள் பிறந்தார். 28-ம் வயதில் குருவான இவர் 1926-ல் தியஸ்கோரஸ் என்ற பெயரில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். கத்தோலிக்கத் திருச்சபையோடு மறுஒன்றிப்படைய வேண்டிய ஆர்வம் ஆயரின் மனதில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. 1939 நவம்பர் 12-ம் தேதி ஆண்டகை கத்தோலிக்கத் திருச்சபையுடன் மறுஒன்றிப்படைந்தார். 1943 பிப்ரவரி 22-ல் காலம் சென்ற ஆண்டகையை திருமூலாபுரம் புனித மரியன்னை கத்தோலிக்க தேவாலயத்தில் அடக்கம் செய்தனர்.

**4. ஜோசப் மார் சேவேரியோஸ் (1894 - 1955)**

மல்லப்பள்ளி அருகில் ஆனிக்காடு என்ற இடத்தில் 1894 ஏப்ரல் 7-ல் ஜோசப் பிறந்தார். ஆசிரியராக வேலை பார்த்து வந்த அவர் 1929 -ல் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். 1933-ல் சேவேரியோஸ் என்ற பெயரில் நிரணம் மறைமாவட்டத்தின் ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டார். ஆர்த்தடோக்சு சபையின் ஆன்மீக தளர்ச்சியும், கீழ்படியாமையையும் கண்டு மனம் தளர்ந்த ஆண்டகை 1937 நவம்பர் 29-ல் மார் இவானியோஸ் ஆண்டகையின் முன்னிலையில் கத்தோலிக்கச் சபையுடன் மறுஒன்றிப்படைந்தார். 1938-ல் ஆண்டகை திருவல்லா மறைமாவட்டத்தின் பொறுப்பை ஏற்றெடுத்தார். 1955 ஜனவரி 18-ல் காலம் சென்ற ஆண்டகை திருவல்லா தூய யோவான் பேராலயத்தில் இறுதி ஓய்வு கொள்கிறார்.

5. சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ் (1908 - 1977)

திருவல்லாவுக்கு அருகில் திருமூலபுரத்தில் 1908-ல் செக்கரியா பிறந்தார். அடிப்படைக் கல்விக்கு பிறகு 30-ம் வயதில் கத்தோலிக்கத் திருச்சபையுடன் மறு ஒன்றிப் படைந்தார். குருத்துவப்பயிற்சிக்குப் பின் 38-ம்

www.malankaralibrary.com

வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1955-ல் திருவல்லா மறைமாவட்டத்தின் மூன்றாம் ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டார். 1977 செப்டம்பர் 28-ம் நாள் காலம் சென்ற ஆண்டகையை திருவல்லா தூய யோவான் பேராலயத்தில் நல்லடக்கம் செய்தார்கள்.

6. ஐசக் மார் யூஹானோன் (1930 - 1987)

திருவல்லா மறைமாவட்டத்தின் நான்காம் ஆயரே ஐசக் மார் யூஹானோன் ஆண்டகை. எர்ணாகுளம் மாவட்டத்தில் வெளியநாடு என்ற இடத்தில் 1930-ல் ஐசக் பிறந்தார். உரோமில் குருத்துவ பயிற்சியை முடித்த பின்னர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு 1978-ல் திருவல்லா மறைமாவட்ட ஆயராக பதவியேற்றார். 1987 ஏப்ரல் 28-ல் காலம் செய்த ஆண்டகையின் திருவுடலை திருவல்லா தூய யோவான் பேராலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

7. பெனடிக்ட்மார் கிரிகோரியோஸ் (1916 - 1994)

திருவனந்தபுரம் மறைமாநிலத்தின் இரண்டாவது பேராயராயிருந்தவர் மார் கிரிகோரியோஸ் ஆண்டகை அவர்கள். திருவல்லாவுக்கு அருகில் கல்லுப்பாறையில் 1916-ல் பெனடிக்ட் பிறந்தார். உயர்நிலை படிப்பை முடித்த பின் கத்தோலிக்கத் திருச்சபையின் உறுப்பினராகி, பெதனி ஆசிரமத்தில் சேர்ந்து 1944-ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். மார் இவானியோஸ் கல்லூரியின் முதல் முதல்வரான அவர் 1953-ல் ஆயராகவும் 1955-ல் பேராயராகவும் நியமிக்கப் பட்டார். 41 வருடங்கள் மலங்கரைச் சபையை வழிநடத்திய பேராயர் 1994 அக்டோபர் 10-ம் நாள் காலம் சென்றார். பட்டம் புனித மரியன்னை பேராலயத்தில் அன்னாரின் திருவுடல் இறுதி ஓய்வு கொள்கிறது.

8. லாரன்ஸ் மார் எப்ரேம் (1928 - 1997)

திருவனந்தபுரம் மறைமாநிலத்தின் துணை ஆயராகவும் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயராகவும் இருந்த லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை நெய்யாற்றின்கரை தாலூக்கில் சாணி என்ற இடத்தில் 1928-ல் பிறந்தார். 1953-ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் ரோமில் மேற்படிப்பை முடித்த பின் 1980-ல் திருவனந்தபுரம் மறை மாநிலத்தின் துணை ஆயராக திருநிலைப்படுத்தப் பட்டார். 1996-ல் மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமான போது அதன் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். 1997 ஏப்ரல் 8-ம் நாள் காலம் சென்ற ஆண்டகையின் உடல் மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. பவுலோஸ் மார் பீலக்சினோஸ் (1928 - 1998)

தொழியூர் சுதந்திர சுறியானி சபையின் ஆயராயிருந்த மேதகு பவுலோஸ் மார் பீலக்சினோஸ் ஆண்டகை 1977-ல் கத்தோலிக்கச் சபையுடன் மறுஒன்றிப்படைந்தார். நீண்ட நாட்களாக உண்மை சபையை தேடி இறுதி யில் கத்தோலிக்கத் திருச்சபையில் அவர் உறுப்பினரானார். 1928-ல் அவர் பிறந்தார். மேற்படிப்பிற்குப்பின் 1960-ல் குருவாகி 1967-ல் ஆயராகவும் நியமிக்கப்பட்டார். 1998 நவம்பர் 3-ல் காலம் செய்த ஆண்டகை திருவல்லா தூய யோவான் பேராலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

10. மோறோன் மோர் சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ் ஆண்டகை (1935 - 2007)

1935 ஆகஸ்டு மாதம் 16-ம் நாள் பந்தளத்தின் அருகிலுள்ள உள்ளன்னூரில் மலஞ்செருவில் மத்தாயி, ஏலியம்மா இவர்களின் மகனாக பிறந்தார். 1951-ல் பெதனி துவறவறசபையில் சேர்ந்தார். 1960 அக்டோபர் 4-ம் நாள் கர்தினால் அகாஜியான் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். உரோம், அமெரிக்கா போன்ற இடங்களில் மேல்படிப்பிற்கு சென்று வெற்றியும் பெற்றார். 1978 நவம்பர் 18-ம் நாள் பெத்தேரி மறைமாவட்டத்தின் முதல் ஆயராக அறிவிக்கப்பட்டார். 1978 டிசம்பர் 28-ம் நாள் திருமுலப்புரத்தில் வைத்து மேதகு ஆயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகை யிடமிருந்து ஆயர் பட்டம் பெற்றார். 1995 டிசம்பர் 14-ம் நாள் திருவனந்தபுரத்தில் உயர் மறைமாநிலத்தின் பேராயராகவும் மலங்கரை திருச்சபையின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். இவரது பணிக்காலத்தில் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை ஆயர் மன்ற அமைப்புள்ள உயர்பேராய திருச்சபையாக உயர்த்தப்பட்டது. 2005 பெப்ரவரி 10-ம் நாள் மலங்கரை கத்தோலிக்க சபையின் உயர் பேராயராக மோறோன் மோர் சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ் என்ற பெயரில் நியமிக்கப்பட்டார். 2007 ஜனவரி 18-ம் நாள் காலம் சென்ற ஆண்டகையை திருவனந்தபுரம் பட்டம்

www.malankaralibrary.com

பேராலயத்தில் நல்லடக்கம் செய்தனர்.

நமது மரபுப்படி ஆயர்கள் அப்போஸ்தலர்களின் வழிவந்தவர்களாவர். ஆகவே அவர்களின் உடனிருப்பையும், பரிந்துரையையும் ஆசீர்வாதமாக விசுவாசிகள் கருதுகின்றனர். ஆயர்கள் காலம் சென்ற நாட்கள் திருச்சபையை பொறுத்தமட்டில் ஆசிபெற்ற நினைவு நாட்களாவும், அவர்களை நினைவு கொள்வதன் மூலம் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

3. குறிப்பு வரைக: யாக்கோபு மார் தெயோபிலோஸ்.

கோட்டயத்திற்கு அருகேயுள்ள ஔச என்ற இடத்தில் களப்புரக்கல் குடும்பத்தில் 1892 பிப்ரவரி 29-ம் நாள் மார் தியோபிலோஸ் பிறந்தார். ஆசிரியராக இருந்த அவர் 1920-ல் பெதனி ஆசிரமத்தில் உறுப்பினராக சேர்ந்து 1924-ல் குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டார். 1929 - ல் மார் இவானியோஸ் பேராயரோடு இணைந்து பெதனி ஆயராக பணியைத் தொடங்கினார். 1930 செப்டம்பர் 20-ல் மார் இவானியோஸ் ஆண்டகையோடு கத்தோலிக்கத் திருச்சபையில் மறுஒன்றிப்படைந்தார். 1932-ல் திருவல்லா மறைமாவட்ட பொறுப்பை அவர் ஏற்றெடுத்தார். ஏராளமான ஆலயங்களும் பள்ளிக்கூடங்களும் இவரின் பணி காலத்தில் நிறுவப்பட்டது. 1956 ஜூன் 27-ல் காலம்சென்ற அவரின் உடல் திருவல்லா புனித ஜோண் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. 3. தோமஸ் மார் தியஸ்கோரஸ் (1884 - 1943)

இக்னானாய சமூகத்தில் பாத்திரியர்க்கீஸ் பிரிவிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபைக்கு மறுஒன்றிப்படைந்த ஆயரே தியஸ்கோறஸ் ஆண்டகை. இவர் கோட்டயத்திற்கு அருகிலுள்ள சிங்வ னத்தில் 1884 ஜனவரி 4-ம் நாள் பிறந்தார். 28-ம் வயதில் குருவான இவர் 1926-ல் தியஸ்கோரஸ் என்ற பெயரில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். கத்தோலிக்கத் திருச்சபையோடு மறுஒன்றிப்படைய வேண்டிய ஆர்வம் ஆயரின் மனதில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. 1939 நவம்பர் 12-ம் தேதி ஆண்டகை கத்தோலிக்கத் திருச்சபையுடன் மறுஒன்றிப்படைந்தார். 1943 பிப்ரவரி 22-ல் காலம் சென்ற ஆண்டகையை திருமூலாபுரம் புனித மரியன்னை கத்தோலிக்க தேவாலயத்தில் அடக்கம் செய்தனர்.

4. குறிப்பு வரைக: லாரன்ஸ் மார் எப்ரேம் (1928 - 1997)

திருவனந்தபுரம் மறைமாநிலத்தின் துணை ஆயராகவும் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயராகவும் இருந்த லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை நெய்யாற்றின்கரை தாலூக்கில் சாணி என்ற இடத்தில் 1928-ல் பிறந்தார். 1953-ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் ரோமில் மேற்படிப்பை முடித்த பின் 1980-ல் திருவனந்தபுரம் மறை மாநிலத்தின் துணை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1996-ல் மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமான போது அதன் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். 1997 ஏப்ரல் 8-ம் நாள் காலம் சென்ற ஆண்டகையின் உடல் மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

**குறு வினா விடைகள்**

1. புனித தோமையார் தமிழகத்தின் (இன்றைய கேரளா) முசிறியில் எந்த இடத்தை மையமாகக் கொண்டு கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்கினார்? மாலியங்கரை
2. பதினாறாம் நூற்றாண்டில் மலங்கரை திருச்சபை தனது தனித்தன்மையையும் அகில உலக திருச்சபையோடு இருந்த ஒன்றிப்பையும் எப்படி இழந்து, திருச்சபை இரண்டாக பிளவுண்டது? அயல்நாட்டு மறைப்பணியாளர்களின் வருகையால்
3. இரண்டாகப் பிளவுற்ற பின்னர் ஒரு குழுவைச் சார்ந்த மலங்கரை திருச்சபையினர் யாருடைய கண்காணிப்பில் வளர்ந்தது? அந்தியோக்கியாவின் ஒர்த்தடோக்ஸ் யாக்கோபாயா மறைமுதுவரின்
4. மார் இவானியோஸ் எந்த திருச்சபையில் பிறந்து வளர்ந்தவர்? யாக்கோபாயா
5. மார் இவானியோஸ் எந்த திருச்சபையிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபையோடு மறு ஒன்றிப்படைந்தார்? ஆர்த்தடோக்சு
6. மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை உருப்பெற்ற நாள் எப்போது? 1930 செப்டம்பர் 20

www.malankaralibrary.com

7. பேராயர் இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் பிறப்பு? கி.பி. 1882 செப்டம்பர் 28
8. இறையூழியரின் பெற்றோர் பெயர் என்ன? மாவேலிக்கரை பணிக்கர் வீட்டில் தோமா பணிக்கரும் அன்னம்மையும்.
9. இறையூழியரது திருமுழுக்குப் பெயர் என்ன? கீவற்கீஸ்
10. இறையூழியர் மார் இவானியோஸ் படித்த மேனிலை பள்ளிக்கூடம் எது? எம். டி. செமினாரி ஹைஸ்கூல் கோட்டயம்
11. இறையூழியர் எந்த கல்லூரியிலிருந்து இளங்கலை பட்டம் பெற்றார்? சென்னை கிறிஸ்தவக் கல்லூரி
12. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகைக்கு குருப்பட்டம் கொடுத்தவர் யார்? வட்டசேரில் மார் திவன்னாசியோஸ்
13. இறையூழியர் மார் இவானியோஸ் எந்த ஆண்டில் குருப்பட்டம் பெற்றார்? கி.பி. 1908 செப்டம்பர் 15
14. தந்தை கீவர்கீஸ் ஆயராக திருநிலைப்பட்டது எப்போது? கி.பி. 1925 மேய் 1
15. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகை அவர்களால் நிறுவப்பட்ட துறவற சமூகங்கள் யாவை ? OIC - Order of Imitation of Christ, SIC - Sisters of Imitation of Christ
16. முதல் துறவற ஆசிரமம் நிறுவப்பட்ட இடம் எது? பெருநாடு - முண்டன் மலை
17. PT.Geevarghese துறவி எவ்வாறு அழைக்கப்பட்டார்? ஆபோ கீவர்கீஸ்
18. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகைக்கு சிந்தனைக்கு உதவிய இரு இந்திய நாட்டு ஆசிரமங்கள் எவை? 1. காந்தியின் சபர்மதி ஆசிரமம் 2. தாகூரின் சாந்தி நிகேதன்
19. இவானியோஸ் என்ற பெயர் எப்புனிதரின் பெயரிலிருந்து மருவியது? புனித யோவான்
20. கத்தோலிக்கத் திருச்சபையோடு மறுஒன்றிப்படைய தொடர்பு கொள்ளும்படி மார் இவானியோஸை நியமித்த ஆயர்மன்ற கூட்டம் எது? பருமலை ஆயர்மன்ற கூட்டம்
21. மறுஒன்றிப்படைய அனுமதியளித்த திருத்தந்தை யார்? திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் பயஸ்
22. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையால் தோற்றுவிக்கப்பட்ட கல்லூரி எது? இறையூழியர் மார் இவானியோஸ்கல்லூரி, திருவனந்தபுரம்
23. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகை பட்டம் வழங்கிய துணை ஆயர் யார்? பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ்
24. மார் கிரிகோரியோஸ் ஆயருக்கு துணை ஆயர் பட்டம் கொடுத்த நாள் எது? கி.பி. 1953 ஜனவரி 29
25. பேராயர் இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகை இறந்த வருடம் எது? கி.பி. 1953 july 15
26. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் கல்லறை எங்குள்ளது? தூய மரியன்னை பேராலயம், பட்டம், திருவனந்தபுரம்
27. "பெதனியின் கண்ணாடி" எனப்படும் இறையூழியர் மார் இவானியோஸ் எழுதிய நூல் எது? கிரிதீபம்
28. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகை இறையூழியராக எப்போது உயர்த்தப்பட்டார்? கி.பி. 2007 July 14
29. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையை இறையூழியராக அறிவித்தவர்? உயர் பேராயர் பசேலியோஸ் மார் கிளிமிஸ்
30. கி.பி. 1934 ஜூன் 21-ல் இறையூழியர் மார் இவானியோஸ் தொடங்கிய இளங்குருத்துவக்கல்லூரி எது? தூய அலோசியஸ் குருமடம், பட்டம், திருவனந்தபுரம்
31. இறையூழியர் மார் இவானியோசின் நினைவு நாள் எது? ஜூலை 15
32. மறு ஒன்றிப்பு தினம் எது? கி.பி. 1950 செப்டம்பர் 20

www.malankaralibrary.com

33. மறுஒன்றிப்பின் சிற்பி யார்? இறையூழியர் மார் இவானியோஸ்
34. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாம் பேராயர் யார்? பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் .
35. பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் இறந்த நாள்? கி.பி. 1994 அக்டோபர் 10
36. புத்தூர் மறை மாவட்ட முதல் ஆயரும் இறையடி சேர்ந்தவருமான ஆயர் யார்? ஆயர் கீவற்கீஸ் மார் திவன்னாசியோஸ்(பிறப்பு - கி.பி. 1950 நவம்பர் 1, - ஆயர்பாட்டம் - கி.பி. 1997 பெப்ருவரி 5)
37. 1956ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? யாக்கோபு மார் தியோபிலஸ் (பிறப்பு - கி.பி. 1892 February 29 - மரணம் - கி.பி. 1956 June 27
38. கி.பி. 1943 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? தோமஸ் மார் தியஸ்கோறஸ் (பிறப்பு - கி.பி. 1884 ஜனவரி 4 - மரணம் - கி.பி. 1943 February 21)
39. கி.பி. 1955 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? ஜோசப் மார் சேவேரியோஸ் (பிறப்பு - 1894 April 7 - மரணம் - 1955 January 18)
40. கி.பி. 1977 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ்(பிறப்பு - 1908- மரணம் -1977 September 28)
41. கி.பி. 1987 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? Isac Mar Yoohanon (பிறப்பு - 1930- மரணம் -1987 April 28)
42. கி.பி. 1994 ல் இறையடி சேர்ந்த திருவனந்தபுரம் மறைமாவட்ட பேராயர் யார்? - பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் (பிறப்பு - 1916 -மரணம் -1994 October 10).
43. கி.பி. 1997 ல் இறையடிசேர்ந்த மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் யார்? - லாரன்ஸ் மார் எப்ரேம் (பிறப்பு - 1928- மரணம் -1997 April 8)
44. கி.பி. 1998 ல் இறையடி சேர்ந்த Thozhiyoor ஆயர் யார்? -பவுலோஸ் மார் பீலக்சினோஸ் (பிறப்பு - 1928 - மரணம் -1998 November 3)
45. கி.பி. 2007 ல் இறையடிசேர்ந்த திருவனந்தபுரம் முதல் உயர் பேராயர் யார்? சிறில் மார் பசேலியோஸ் காதோலிக்கோஸ்(பிறப்பு - 1935 August 16 மரணம் -2007 January 18 )
46. பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையை இறை ஊழியராக பிரகடனப்படுத்தியது எப்போது? கி.பி. 2007 July 14
47. இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் 125 -ஆம் பிறப்பு விழா எப்போது நடைபெற்றது? கி.பி. 2007 September 23

## பாடம் 16

## நமது மறைமாவட்டங்களும் ஆயர்களும்

### பயிற்சி வினாக்கள்

1. மலங்கரை கத்தோலிக்கச் திருச்சபையின் மறைமாவட்டங்கள் யாவை? மலங்கரை கத்தோலிக்க திருச்சபைக்கு இன்று 11 மறைமாவட்டங்களும் 1 மறை ஆட்சிவட்டமும் (Exarchate) உள்ளன. அவை:

1. திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்(பேருயர் மறைமாவட்டம்) (Major Archdiocese)
2. திருவல்லா மறைமாநிலம்(உயர் மறைமாவட்டம்) (Archdiocese)
3. பத்தேரி மறைமாவட்டம்
4. மார்த்தாண்டம் மறைமாவட்டம்
5. மூவாற்றுப்புழை மறைமாவட்டம்
6. மாவேலிக்கரை மறைமாவட்டம்
7. பத்தனம்திட்டை மறைமாவட்டம்

www.malankaralibrary.com

8. புத்தூர் மறைமாவட்டம்
9. டெல்லி - குர்காவ்ன் (Gurgaon) மறைமாவட்டம்
10. அமெரிக்கா கானடா சமாதானத்தின் அரசி மறைமாவட்டம்
11. பாறசாலை மறைமாவட்டம்
12. புனே கட்கி மறையாட்சி வட்டம்

2. மலங்கரை கத்தோலிக்கச் திருச்சபையின் தற்போதைய ஆயர்கள் யாவர்?

மலங்கரை கத்தோலிக்க திருச்சபைக்கு 15 ஆயர்கள் உள்ளனர். மோறோன் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கோஸ் ஆண்டகை நமது திருச்சபையின் தந்தையும் தலைவருமாகவும் திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தின் பேருயர் பேராயராக விளங்குகிறார். தோமஸ் மார் கூறிலோஸ், வர்க்கீஸ் மார் திமோத்தியோஸ், யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம், ஜோசுவா மார் இக்னாத்தியோஸ், ஆபிரகாம் மார் யூலியோஸ், ஜோசப் மார் தோமஸ், வின்சென்ட் மார் பவுலோஸ், தோமஸ் மார் எவுசேபியோஸ், ஜேக்கப் மார் பர்ணபாஸ், சாமுவேல் மார் ஐரேனியோஸ், பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ், தோமஸ் மார் அந்தோணியோஸ், கீவர்கீஸ் மார் மக்காரியோஸ், யூஹானோன் மார் தியோடோஷியஸ் போன்றவர்கள் ஆயர்களாக திருச்சபையை வழிநடத்துகின்றனர்.

3. ஒவ்வொரு மறைமாவட்டத்தையும் பற்றி குறிப்பெழுதுக?

**திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)ம்**

1933 மார்ச் 12-ம் நாள் நிறுவப்பட்ட திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்(பேருயர் மறைமாவட்டம்) நான்கு மறைமாவட்டங்களை உருவாக்கியது. திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)ம் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)மாக விளங்குகின்றது. இரண்டு லட்சம் விசுவாசிகளும் 154 குருக்களும் 317 ஆலயங்களும் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தில் உள்ளன. மார் இவானியோஸ் (1930-1953) மார் கிரிகோரியோஸ் (1953-1994) சிறில் மார் பசேலியோஸ் காதோலிக்கோஸ் ஆண்டகை (1995-2007) போன்ற பேராயர்கள் இந்த உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்தினர். இந்த ஆயர்களின் தொலைநோக்குப் பார்வையும், ஆன்மீக ஞானமும் மலங்கரை திருச்சபைக்கு இன்றும் ஒரு சொத்தாக இருக்கின்றது.

திருச்சபையின் தலைவரும் தந்தையுமான மோறோன் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கோஸ் ஆண்டகை தற்போது திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தின் பேருயர் பேராயர் ஆவார். இவர் 1959 ஜூன் 15-ம் நாள் திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தில் உள்ள முக்கூரில் பிறந்தார். 1986 ஜூன் 11-ம் நாள் பத்தேரி மறைமாவட்டத்திற்காக குருப்பட்டம் பெற்றார். 2001 ஆகஸ்டு 15-ம் நாள் திருவனந்தபுரத்தின் துணை ஆயராகவும், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் திருத்தூதரக சந்திப்பாளராகவும் திருநிலைப்படுத்தப்பட்டார். திமோத்தியோஸ் ஆண்டகை ஓய்வு பெற்றபின் 2003 அக்டோபர் 2-ம் நாள் திருவல்லா மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டார். 2006 ஜூன் 10-ம் நாள் திருவல்லா மறைமாவட்டம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)மாக உயர்த்தப்பட்டதை தொடர்ந்து இவர் திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் பேராயராக நியமிக்கப்பட்டார். 2007 பெப்ரவரி 10-ம் நாள் தந்தையும் தலைவருமான சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ் ஆண்டகையின் மறைவுக்குப்பின் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கோஸ் என்ற பெயரில் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் இரண்டாவது காதோலிக்கோஸாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2007 மார்ச் 5-ம் நாள் இவர் பொறுப்பு ஏற்று திருச்சபைக்கு வலுவான தலைமையை தந்து கொண்டிருக்கிறார்.

**திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)ம்**

1933 நவம்பர் 6-ம் நாள் திருவல்லா மறைமாவட்டம் நிறுவப்பட்டது. பரந்து விரிந்து காணப்படுகின்ற இவ்வுயர் மறைமாவட்டத்தில் 120 குருக்களும் 132 ஆலயங்களும் 50,000 இறைவிசுவாசிகளும் உள்ளனர். 2001 ஜூன் 10-ம் நாள் திருவல்லா மறைமாவட்டத்தை மறைமாநில(உயர் மறைமாவட்டம்)மாக திருத்தந்தை உயர்த்தினார். மார் தியோபிலோஸ் (1933 -1950) மார் யூஹானோன் (1978-1987) மார் திமோத்தியோஸ் (1988 - 2003) மார் கிளீமிஸ் (2003 - 2007) போன்றவர்கள் இந்த மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தை தலைமை

தாங்கி வழிநடத்தினார்கள்.

தற்போது தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகை பேராயராக செயல்படுகிறார். 1958 அக்டோபர் 19-ம் நாள் நிரணத்தில் பிறந்த அவர் 1985 டிசம்பர் 30-ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1997 ஜூலை 17-ம் நாள் திருவல்லா மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். 2003 -ல் புதிதாக உருவான மூவாற்றுபுழ மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். 2007 மேய் 1-ம் நாள் திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் இரண்டாவது பேராயராக பொறுப்பேற்று செயல்படுகிறார்.

திருவல்லா மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயர்தான் கீவர்க்கீஸ் மார் திமோத்தியோஸ் ஆண்டகை கோட்டயம் மாவட்டத்தில் அமயன்னூரில் 1928 பிப்ரவரி 2-ம் நாள் பிறந்த இவர் 1953 ஆகஸ்ட் 6-ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1988 ஆகஸ்ட் 6-ம் நாள் திருவல்லா மறைமாவட்டத்தின் ஆயராகப் பொறுப்பேற்றார். 2003-ம் ஆண்டில் மறைமாவட்ட பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார்.

**பத்தேரி மறைமாவட்டம் - ஜோசப் மார் தோமஸ்**

1978 அக்டோபர் 28-ம் நாள் திருவல்லா மறைமாவட்டம் பிரிந்து மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் மூன்றாவது மறைமாவட்டமாக பத்தேரி மறைமாவட்டம் உதயமானது. இன்று இந்த மறைமாவட்டத்தில் 100 ஆலயங்களும் 85 குருக்களும் ஏறக்குறைய 30,000 இறைமக்களும் உள்ளனர். பத்தேரி மறைமாவட்டத்தின் முதல் ஆயர் சிறில் மார் பசேலியோஸ் ஆவார். அவர் திருவனந்தபுரம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் தலைவராக பொறுப்பேற்றதைத் தொடர்ந்து கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ் பத்தேரி மறைமாவட்ட ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். 2010 ஏப்ரல் 13-ம் நாள் பத்தேரி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக ஜோசப் மார் தோமஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார்.

மேதகு ஆயர் 1952 ஏப்ரல் 20-ம் நாள் வடசேரிக்கர கோந்நாத்து வீட்டில் பிறந்தார். 1978 டிசம்பர் 23-ம் நாள் பேராயர் கிரிகோரியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தின் துணை ஆயராகவும் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் திருத்தூதரக கண்காணிப்பாளராகவும் 2005 பெப்ரவரி 19-ம் நாள் பொறுப்பேற்றார். இப்போது இவர் பத்தேரி மறைமாவட்ட ஆயராக உள்ளார்.

**மார்த்தாண்டம் மறைமாவட்டம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையினருக்காக திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்திலிருந்து 1996 டிசம்பர் 16-ம் நாள் மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமானது. தமிழ் நாட்டிலுள்ள இந்த மறைமாவட்டத்தில் 90 ஆலயங்களும், 60 குருக்களும் ஏறக்குறைய 75,000 இறைமக்களும் உள்ளனர். 1997 ஜனவரி 23-ம் நாள் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பொறுப்பேற்றார். 1997 ஏப்ரல் 8-ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

தொடர்ந்து யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகை மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக நியமிக்கப்பட்டார். 2010 மார்ச் 14-ம் நாள் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குமரன் குடியில் 1964 பெப்ரவரி 20-ம் நாள் பிறந்தார். 1991 ஜனவரி 2-ம் நாள் தாய்பங்கான அணக்கரையில் வைத்து பேராயர் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார்.

இவர் 2010 மார்ச் 13-ம் நாள் திருவனந்தபுரத்தில் வைத்து பசேலியோஸ் மார் கிளீமிஸ் காதோலிக்கோஸ் ஆண்டகையிடமிருந்து ஆயர்ப்பட்டம் பெற்று மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக பதவி ஏற்றார். மார்த்தாண்டம் தலத்திருச்சபையிலிருந்து உருவான முதல் ஆயர் இவரே.

**மூவாற்றுப்புழை மறைமாவட்டம்**

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் வளர்ச்சியின் சிறந்த அடையாளமே 2003 பெப்ருரவரி 6-ல் தொடங்கப்பட்ட மூவாற்றுபுழா மறைமாவட்டம். திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தைப் பிரித்து மூவாற்றுபுழ மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது. இந்த மறைமாவட்டத்தில் 65 பங்கு தளங்களும் 50 குருக்களும் ஏறக்குறை 20,000 இறை விசுவாசிகளும் உள்ளனர். இந்த மறைமாவட்டத்தின் முதல் ஆயராக

www.malankaralibrary.com

திருவல்லா துணை ஆயராக இருந்த தோமஸ் மார் கூரிலோஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார். 2008 முதல் மேதகு ஆபிரகாம் மார் யூலியோஸ் ஆண்டகை மூவாற்றுபுழை மறைமாவட்டத்தை வழிநடத்தி வருகின்றார்கள்.

1945 மேய் 25-ம் நாள் திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தில் கல்லுப்பாறை கடமான்குளம் என்ற இடத்தில் மேதகு ஆயர் பிறந்தார். 1970 அக்டோபர் 10-ம் நாள் மேதகு சகரியாஸ் மார் அத்தனாசியோஸ் ஆயரிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். 2008 பெப்ரவரி 9-ம் நாள் மூவாற்றுபுழை செயின்ட் ஜோசப் பேராலயத்தில் வைத்து ஆபிரகாம் மார் யூலியோஸ் என்ற பெயரில் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கா ஆண்டகையிடமிருந்து ஆயர்ப் பட்டம் பெற்றார். மூவாற்றுப்புழை மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக மறைமாவட்டத்தை வழிநடத்தி வருகின்றார்.

**மாவேலிக்கரை மறைமாவட்டம்**

செங்கன்னூர் முதல் களியக்காவிளை வரை பரந்து விரிந்து கிடந்த அன்றைய திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தை பிரித்து 2006-ல் மாவேலிக்கரை மறைமாவட்டம் உருவானது. இந்த மறைமாவட்டத்தில் 60-க்கு மேல் குருக்களும், 100 ஆலயங்களும் 50,000 இறைவிசுவாசிகளும் உள்ளனர்.

இந்த மறைமாவட்டத்தின் முதல் ஆயராக திருவனந்தபுரம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் துணை ஆயராக இருந்த மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை பொறுப்பேற்றார்கள். மேதகு ஆயர் 1950 மே 24-ம் நாள் கொட்டாரக்கரை கிழககேத் தெரு என்ற இடத்தில் பிறந்தார். 1978 ஏப்ரல் 2-ம் நாள் மேதகு ஆயர் கிரிகோரியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். 1998-ல் மேதகு ஆயர் சிறில் பசேலியோஸ் காதோலிக்கா ஆண்டகையிடமிருந்து திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)ம் த்தின் துணை ஆயராக ஆயர்பட்டம் பெற்றார். 2006 மார்ச் 5-ம் நாள் புதிதாக உருவாக்கப்பட்ட மாவேலிக்கரை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டு செயலாற்றி வருகின்றார்.

**பத்தனம்திட்டை மறைமாவட்டம்**

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் ஏழாவது மறைமாவட்டமாக 2010 மார்ச் 20-ம் நாள் பத்தனம்திட்டை மறைமாவட்டம் உதயமானது. திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)ம் பிரிக்கப்பட்டு பத்தனம்திட்டை மறைமாவட்டம் நிறுவப்பட்டது. இந்த மறைமாவட்டத்தில் இப்போது 100 தேவாலயங்களும் 88 குருக்களும் 50,000 இறைவிசுவாசிகளும் உள்ளனர். மறைமாவட்டத்தின் முதல் ஆயராக மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகை நியமிக்கப்பட்டார்.

பத்தனம்திட்டை மாவட்டத்தில் கடமனிட்டையில் 1944 மே 19-ம் நாள் பிறந்த இவர் 1973 மே 5-ம் நாள் மேதகு ஆயர் கிரிகோரியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். அமெரிக்காவின் மலங்கரை மிஷன்களின் பொறுப்பிலிருந்த இவர் 1998 ஜூன் 29-ம் நாள் சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ் ஆண்டகையிடமிருந்து ஆயர்ப்பட்டம் பெற்றார். 1998-ல் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக பொறுப்பேற்றார். 2010 மார்ச் 20-ம் நாள் புதிதாக உருவாக்கப்பட்ட பத்தனம்திட்டை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பொறுப்பேற்றார்.

மேதகு ஆயர் சாமுவேல் மார் ஐரேனியோஸ் ஆண்டகை திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தின் துணை ஆயராக இருந்தார். இவர் 1952 மேய் 13-ம் நாள் பத்தனம்திட்டை மாவட்டத்தில் கடமனிட்ட என்ற இடத்தில் பிறந்தார். 1978 டிசம்பர் 22-ம் நாள் பேராயர் கிரிகோரியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். 2010 மார்ச் 13-ம் நாள் திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தின் துணை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். மேதகு ஆயர் சாமுவேல் மார் ஐரேனியோஸ் ஆண்டகை பத்தனம்திட்டை மறைமாவட்டத்தின் வாரிசு ஆயராக தற்போது பதவியேற்றுள்ளார்.

**புத்தூர் மறைமாவட்டம்**

கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலுள்ள சில மாவட்டங்களில் பரந்து விரிந்து கிடந்த மலங்கரை கத்தோலிக்க மக்களுக்காக உருவாக்கப்பட்ட பத்தேரி மறைமாவட்டத்தின் கர்நாடக பகுதிகளை

www.malankaralibrary.com

பிரித்து உருவாக்கப்பட்டது தான் புத்தூர் மறைமாவட்டம். இதில் கர்நாடகத்தின் 9 மாவட்டங்கள் அடங்கி உள்ளன. இங்கு 25 ஆலயங்களும் 15 குருக்களும், 3,500 இறைவிசுவாசிகளும் உள்ளனர். புதிதாக நிறுவப்பட்ட மறைமாவட்டத்தின் பொறுப்பை மேதகு ஆயர் கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ் ஆண்டகை ஏற்றுள்ளார்.

இவரது இறப்பிற்குப் பின்னர் மேதகு ஆயர் கீவர்கீஸ் மார் மக்காரியோஸ் இதன் இரண்டாவது ஆயராக நியமிக்கப்பட்டார். இவர் தென் கர்நாடகாவின் நூஜிபால்தலாவில் காலாயில் குடும்பத்தில் ஜூலை 16, 1958-ல் பிறந்தார். மேய் 1, 1986-ல் மேதகு சிறில் மார் பசேலியோஸ் காதோலிக்க ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். இவர் 2017, செப்டம்பர் 21-ம் நாள் கீவர்கிஸ் மார் மக்காரியோஸ் என்ற பெயரில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**டெல்லி - குர்காவ்ன் (Gurgaon) மறைமாவட்டம்**

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் வரையறுக்கப்பட்ட எல்லைக்கு வெளியே வாழும் மலங்கரை மக்களின் கூட்டமைப்புக்கு கண்காணிப்பாளராக 2007 பிப்ரவரி 7-ம் நாள் மேதகு ஜேக்கப் மார் பர்ணபாஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார். 2015 மார்ச் 26-ம் நாள் வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை உட்படுத்தி குர்காவ்ன் மறைமாவட்டம் உதயமானது. இதன் முதல் ஆயராக மார் பர்ணபாஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார்.

றாந்நிக்கு பக்கத்திலுள்ள நீரேற்றுக்காவு என்ற இடத்தில் 1960 டிசம்பர் 3-ம் நாள் ஆயர் பிறந்தார். பெதனி துறவற சபை உறுப்பினராக சேர்ந்தார். 1986 அக்டோபர் 2-ம் நாள் குருப்பட்டம் பெற்றார். 2007-ல் ஜேக்கப் மார் பர்ணபாஸ் என்ற பெயரில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் மறைஆட்சிவட்டம் மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டது.

இந்தியாவுக்கு வெளியே குறிப்பாக அமெரிக்காவிலும், ஐரோப்பிய ஐக்கிய நாடுகளிலும் வாழும் மலங்கரை கத்தோலிக்கர்களை ஒருங்கிணைக்கும் முயற்சி 1984-ம் ஆண்டு ஆரம்பமானது 2001-ம் ஆண்டு திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் மேதகு ஐசக் மார் கிளீமிஸ் ஆண்டகையை திருத்தூதரக கண்காணிப்பாளராக நியமித்தார். 2005-ல் மேதகு ஜோசப் மார் தோமஸ் ஆண்டகை திருத்தூதரக கண்காணிப்பாளராக பொறுப்பேற்றார். 2010 ஜூலை திங்கள் 14-ம் நாள் திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் வட அமெரிக்காவில் வாழும் மலங்கரை கத்தோலிக்க மக்களுக்காக மறை ஆட்சி வட்டம் ஒன்றை நிறுவினார். இதன் முதல் ஆயராக மேதகு தோமஸ் மார் எவுசேபியஸ் ஆண்டகை 2010 அக்டோபர் 3-ல் பொறுப்பேற்றார். 2016 ஜனவரி 4-ம் நாள் இம்மறை ஆட்சி வட்டம், அமெரிக்கா, கானடா சமாதானத்தின் அரசி மறைமாவட்டமாக உயர்வு பெற்றது.

**அமெரிக்கா கானடா சமாதானத்தின் அரசி மறைமாவட்டம்**

இந்தியாவிற்கு வெளியே குறிப்பாக வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலுமுள்ள மலங்கரை கத்தோலிக்க திருச்சபை மக்களின் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்காக 2001 -ம் வட அமெரிக்கா ஐரோப்பா போன்ற இடங்களில் திருத்தூதரக கண்காணிப்பாளராக ஐசக் மார் கிளீமிஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார். 2005-ல் இவருடைய இடத்தில் ஜோசப் மார் தோமஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார். 2010-ல் ஜோசப் மார் தோமஸ் ஆண்டகை பத்தேரி மறைமாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டதனால் அவருடைய இடத்திற்கு புதிய ஆயரான தோமஸ் மார் எவுசேபியோஸ் நியமிக்கப்பட்டார். 2017-ல் பாறசாலை மறைமாவட்டம் உருவாகியபோது தோமஸ் மார் எவுசேபியோஸ் ஆண்டகை அதன் ஆயராக நியமிக்கப்பட்டார். மேதகு பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் அமெரிக்கா கானடா சமாதானத்தின் அரசி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டார். இவர் பத்தனம்திட்டை மறைவட்டத்தில் றாந்நி கரிம்பனம் குழியில் 1952 மே 9-ம் நாள் பிறந்தார். 1979 ஏப்ரல் 27-ம் நாள் குருப்பட்டம் பெற்றார். 2010 மார்ச் 13-ம் நாள் இவர் திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் துணை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். தற்போது அமெரிக்கா மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்,

**பாறசாலை மறைமாவட்டம்**

2018-ம் ஆண்டு திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்திலிருந்து பாறசாலை மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது. அதன் முதல் ஆயராக மேதகு ஆயர் தோமஸ் மார் எவுஸேபியோஸ்

நியமிக்கப்பட்டார். மேதகு ஆயர் தோமஸ் மார் எவுசேபியஸ் அவர்கள் பத்தனம்திட்டை மாவட்டத்தில் மயிலப்பிறஎனும் இடத்தில் 1961-ல் பிறந்தார். 1986 டிசம்பர் 29-ம் நாள் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையிடமிருந்து குருத்துவ அருட்பொழிவு பெற்றார். 2010-ம் ஆண்டு செப்டம்பர் 21-ம் நாள் மார் எவுசேபியோஸ் எனும் பெயரில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**புனே கட்கி மறையாட்சி வட்டம்**

புனே - கட்கி மறையாட்சி வட்டம் 2015 மார்ச் 26-ம் நாள் உருவாக்கப்பட்ட போது அதன் முதல் ஆயராக மேதகு ஆயர் தோமஸ் மார் அந்தோணியோஸ் நியமிக்கப்பட்டார். திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தில் அடூரில் 1955 நவம்பர் 25-ம் நாள் பிறந்தார். பெதனி துறவற திருச்சபை உறுப்பினரான இவர் 1980 டிசம்பர் 27-ம் நாள் சிறில் மார் பசேலியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். 2010 மார்ச் 31-ம் நாள் தோமஸ் மார் அந்தோணியோஸ் என்ற பெயரில் கூரியா ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

**கூரியா ஆயர்**

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் பொது நிர்வாகத்தில் காதோலிக்கோஸ் ஆண்டகைக்கு உதவி புரியவும் ஆயர் மாமன்றம் மற்றும் பணிக்குழுக்களின் (Commission) செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் கூரியா ஆயர் ஒருவர் நியமிக்கப்பட்டார். 2010 மார்ச் 13-ம் நாள் திருநிலைப்படுத்தப்பட்ட மேதகு ஆயர் தோமஸ் மார் அந்தோணியோஸ் ஆண்டகை இந்த பொறுப்பை செயல்படுத்தி வந்தார்.

கூரியாவின் இரண்டாவது ஆயராக யூஹானோன் மார் தியோடோஷியஸ் பத்தனம்திட்டை மறைமாவட்டத்தில் புதுசேரிபாகம் பகுதியில் 1959 ஏப்ரல் 8-ம் நாள் பிறந்தார். இவர் 1985 டிசம்பர் 22-ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 2017 செப்டம்பர் 21-ம் நாள் யூஹானோன் மார் தியோடோஷியஸ் என்ற பெயரில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். யூஹானோன் மார் தியோடோஷியஸ் ஆண்டகை மூவாற்றுப்புழை மறைமாவட்டத்தின் வாரிசு ஆயராக தற்போது பதவியேற்றுள்ளார். யூஹானோன் மார் தியோடோஷியஸ் ஆண்டகை அவர்கள் தற்போது ஐரோப்பா, ஓசியானியா நாடுகளின் திருத்தூதரக சந்திப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

## குறு வினா விடைகள்

1.மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர்களை அட்டவணைப் படுத்துக?

| | ஆயர் பெயர்கள் | பணித்தளங்கள் |
|---|---|---|
| 1. | (பேருயர் பேராயர்) உயர் பேராயர் மோறோன் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கோஸ் | திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்), |
| 2. | பேராயர் தோமஸ் மார் கூறிலோஸ் | திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்) |
| 3. | ஆயர் வர்க்கீஸ் மார் திமோத்தியோஸ் | பணி ஓய்வு நிலை |
| 4. | ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் | பத்தனம்திட்டை மறைமாவட்டம் |
| 5. | ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் | மாவேலிக்கரை மறைமாவட்டம் |
| 6. | ஆயர் ஆபிரகாம் மார் யூலியோஸ் | மூவாற்றுப்புழை மறைமாவட்டம் |

www.malankaralibrary.com

| | | |
|---|---|---|
| 7. | ஆயர் ஜோசப் மார் தோமஸ் | பத்தேரி மறைமாவட்டம் |
| 8. | ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் | மார்த்தாண்டம் மறைமாவட்டம் |
| 9. | ஆயர் தோமஸ் மார் எவுசேபியோஸ் | பாறசாலை மறைமாவட்டம் |
| 10. | ஆயர் ஜேக்கப் மார் பர்ணபாஸ் | டெல்லி - குர்காவ்ன் (Gurgaon) மறைமாவட்டம் |
| 11. | ஆயர் சாமுவேல் மார் ஐரேனியோஸ் | பத்தனம்திட்டை மறைமாவட்ட வாரிசு ஆயர் |
| 12. | ஆயர் பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் | அமெரிக்கா கானடா சமாதானத்தின் அரசி மறைமாவட்டம் |
| 13. | ஆயர் தோமஸ் மார் அந்தோணியோஸ் | புனே கட்கி மறையாட்சி வட்டம் |
| 14. | ஆயர் கீவர்கீஸ் மார் மக்காரியோஸ் | புத்தூர் மறைமாவட்டம் |
| 15. | ஆயர் யூஹானோன் மார் தியோடோஷியஸ் | மூவாற்றுப்புழை மறைமாவட்ட வாரிசு ஆயர்<br>கூரியா ஆயர்<br>ஐரோப்பா, ஓசியானியா நாடுகளின் திருத்தூதரக சந்திப்பாளர் |

16. புனித தோமையாரால் உருவாக்கப்பட்ட இந்திய கிறிஸ்தவ திருச்சபையில் எப்போது பிளவு ஏற்பட்டது? 1653-ல்
17. “கிறிஸ்றறோ பாஸ்தோரும் பிறின்சிப்பி” பற்றிக் குறிப்பு வரைக? “கிறிஸ்றறோ பாஸ்தோரும் பிறின்சிப்பி” என்ற திருமடலின் வழியாக 1932 ஜூன் 11-ல் மலங்கரை கத்தோலிக்கர்களுக்காக திருவனந்தபுரம், திருவல்லா என்ற மறைமாவட்டங்களோடு மலங்கரை கத்தோலிக்க ஆட்சி பீடம் நிறுவப்பட்டது.
18. மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையினரின் எண்ணிக்கைப் பற்றிக் கூறுக? மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபைக்கு ஏறக்குறைய ஐந்து லட்சம் விசுவாசிகளும் சுமார் 1000 மறை பணித்தளங்களும், 750-க்கு மேல் குருக்களும், இரண்டாயிரத்தி முன்னூறுக்கு மேல் துறவறத்தாரும் உள்ளனர். ஏராளம் கல்விக்கூடங்களும், மருத்துவமனைகளும், சமூக சேவை மையங்களும் திருச்சபையில் உள்ளன.
19. திருவனந்தபுரம் மறைமாவட்டம் எப்போது உருவானது? 1933 மார்ச் 12-ம் நாள்
20. திருவனந்தபுரம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் முன் ஆயர்கள் யாவர்? பேராயர் மார் இவானியோஸ் (1930-1953) பேராயர் மார் கிரிகோரியோஸ் (1953-1994) உயர் பேராயர் சிறில் மார் பசேலியோஸ் காதோலிக்கோஸ் ஆண்டகை (1995-2007)
21. திருவனந்தபுரம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் தற்போதைய ஆயர் யார்? திருச்சபையின் தலைவரும் தந்தையுமான மோறோன் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கோஸ் ஆண்டகை இப்போது திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)ம் த்தின் பேராயர் ஆவார்.
22. திருவல்லா மறைமாவட்டம் எப்போது உருவானது? 1933 நவம்பர் 6-ம் நாள் திருவல்லா மறைமாவட்டம் நிறுவப்பட்டது. பரந்து விரிந்து காணப்படுகின்ற மறைமாவட்டத்தில் 120 குருக்களும் 132 ஆலயங்களும் 50,000 இறைவிசுவாசிகளும் உள்ளனர். 2001 ஜூன் 10-ம் நாள் திருவல்லா மறைமாவட்டத்தை மறைமாநில(உயர் மறைமாவட்டம்)மாக திருத்தந்தை உயர்த்தினார்.

www.malankaralibrary.com

23. திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் முன் ஆயர்கள் யாவர்? மார் தியோபிலோஸ் (1933 - 1950) மார் யூஹானோன் (1978-1987) மார் திமோத்தியோஸ் (1988 - 2003) மார் கிளீமிஸ் (2003 - 2007) போன்றவர்கள் இந்த மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தை தலைமை தாங்கி வழிநடத்தினார்கள்.
24. திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் தற்போதைய ஆயர் யார்? தற்போது தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகை பேராயராக செயல்படுகிறார்.

25. கீவர்க்கீஸ் மார் திமோத்தியோஸ் பற்றிக் குறிப்பு வரைக? திருவல்லா மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயர்தான் கீவர்க்கீஸ் மார் திமோத்தியோஸ் ஆண்டகை கோட்டயம் மாவட்டத்தில் அமயன்னூரில் 1928 பிப்ரவரி 2-ம் நாள் பிறந்த இவர் 1953 ஆகஸ்ட் 6-ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1988 ஆகஸ்ட் 6-ம் நாள் திருவல்லா மறைமாவட்டத்தின் ஆயராகப் பொறுப்பேற்றார். 2003-ம் ஆண்டில் மறைமாவட்ட பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார்.
26. பத்தேரி மறைமாவட்டம் எப்போது உருவானது? 1978 அக்டோபர் 28-ம் நாள் தற்போதைய திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்திலிருந்து பிரிந்து மலங்கரை திருச்சபையின் மூன்றாவது மறைமாவட்டமாக பத்தேரி மறைமாவட்டம் உதயமானது. இன்று இந்த மறைமாவட்டத்தில் 100 ஆலயங்களும் 85 குருக்களும் ஏறக்குறை30,000 இறைமக்களும் உள்ளனர்.
27. பத்தேரி மறைமாவட்டத்தின் முன் ஆயர்கள் யாவர்? பத்தேரி மறைமாவட்டத்தின் முதல் ஆயர் சிறில் மார் பசேலியோஸ் ஆவார். அவர் திருவனந்தபுரம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் தலைவராக பொறுப்பேற்றதைத் தொடர்ந்து கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ் பத்தேரி மறைமாவட்ட ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.
28. பத்தேரி மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? 2010 ஏப்ரல் 13-ம் நாள் பத்தேரி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக ஜோசப் மார் தோமஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார்.
29. மார்த்தாண்டம் மறைமாவட்டம் எப்போது உருவானது? கன்னியாகுமரி மாவட்டத்தில் மலங்கரை கத்தோலிக்க திருச்சபையினருக்காக திருவனந்தபுரம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்திலிருந்து 1996 டிசம்பர் 16-ம் நாள் மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமானது. தமிழ் நாட்டிலுள்ள இந்த மறைமாவட்டத்தில் 90 ஆலயங்களும், 60 குருக்களும் ஏறக்குறைய 75,000 இறைமக்களும் உள்ளனர்.
30. மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முன் ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் பற்றிக் கூறுக? 1997 ஜனவரி 23-ம் நாள் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பொறுப்பேற்றார். 1997 ஏப்ரல் 8-ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.
31. மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயர் யார்? யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகை மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக நியமிக்கப்பட்டார்.
32. மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? 2010 மார்ச் 14-ம் நாள் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை பொறுப்பேற்றுக் கொண்டார்.
33. ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் பற்றிக் கூறுக? தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குமரன் குடியில் 1964 பெப்ரவரி 20-ம் நாள் பிறந்தார். 1991 ஜனவரி 2-ம் நாள் அணக்கரையில் வைத்து பேராயர் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையிடமிருந்து குருப்பட்டம் பெற்றார். இவர் 2010 மார்ச் 13-ம் நாள் திருவனந்தபுரத்தில் வைத்து பசேலியோஸ் மார் கிளீமிஸ் காதோலிக்கோஸ் ஆண்டகையிடமிருந்து ஆயர்ப்பட்டம் பெற்று மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் மூன்றாவது ஆயராக பதவி ஏற்றார். மார்த்தாண்டம் தலத்திருச்சபையிலிருந்து உருவான முதல் ஆயர் இவரே.
34. மூவாற்றுப்புழை மறைமாவட்டம் எப்போது உருவானது? 2003 பெப்ருரவரி 6-ல் திருவல்லா மறைமாவட்டத்தைப் பிரித்து மூவாற்றுபுழ மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது. இந்த மறைமாவட்டத்தில் 65 பங்கு தளங்களும் 50 குருக்களும் ஏறக்குறை 20,000 இறை விசுவாசிகளும் உள்ளனர்.
35. மூவாற்றுப்புழை மறைமாவட்டத்தின் முன் ஆயர்கள் யாவர்? முதல் ஆயராக தோமஸ் மார் கூரிலோஸ் ஆண்டகை நியமிக்கப்பட்டார்.
36. மூவாற்றுப்புழை மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? 2008 முதல் மேதகு ஆபிரகாம் மார் யூலியோஸ் ஆண்டகை மூவாற்றுபுழை மறைமாவட்டத்தை வழிநடத்தி வருகின்றார்கள்.

37. மாவேலிக்கரை மறைமாவட்டம் எப்போது உருவானது? இன்றைய திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தை பிரித்து 2006 மார்ச் 5-ம் நாள் புதிதாக மாவேலிக்கரை மறைமாவட்டம் உருவானது. இந்த மறைமாவட்டத்தில் 60-க்கு மேல் குருக்களும், 100 ஆலயங்களும் 50,000 இறைவிசுவாசிகளும் உள்ளனர்.
38. மாவேலிக்கரை மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? மாவேலிக்கரை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக திருவனந்தபுரம் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் துணை ஆயராக இருந்த மேதகு ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகை பொறுப்பேற்றார்கள்.
39. பத்தனம்திட்டை மறைமாவட்டம் எப்போது உருவானது? மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் ஏழாவது மறைமாவட்டமாக 2010 மார்ச் 20-ம் நாள் பத்தனம்திட்டை மறைமாவட்டம் உதயமானது.
40. பத்தனம்திட்டை மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? பத்தனம்திட்டை மறைமாவட்டத்தின் முதல் ஆயராக மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகை நியமிக்கப்பட்டார்கள்.
41. புத்தூர் மறைமாவட்டம் எங்கே உருவானது? கேரளம், கர்நாடகம், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களிலுள்ள சில மாவட்டங்களில் பரந்து விரிந்து கிடந்த மலங்கரை கத்தோலிக்க மக்களுக்காக உருவாக்கப்பட்ட பத்தேரி மறைமாவட்டத்தின் கர்நாடக பகுதிகளை பிரித்து உருவாக்கப்பட்டது தான் புத்தூர் மறைமாவட்டம் இதில் கர்நாடகத்தின் 9 மாவட்டங்கள் அடங்கி உள்ளன. இங்கு 25 ஆலயங் களும் 15 குருக்களும், 3,500 இறைவிசுவாசிகளும் உள்ளனர்.
42. புத்தூர் மறைமாவட்டத்தின் முன் ஆயர் யாவர்? புத்தூர் மறைமாவட்டத்தின் முதல் முன் ஆயர் மேதகு ஆயர் கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ் ஆண்டகை ஆவார்.
43. புத்தூர் மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? மேதகு ஆயர் கீவர்கீஸ் மார் மக்காரியோஸ் இதன் இரண்டாவது ஆயராக நியமிக்கப்பட்டார்.
44. டெல்லி - குர்காவ்ன் (Gurgaon) மறைமாவட்டம் எப்போது உருவானது? 2015 மார்ச் 26-ம் நாள் வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை உட்படுத்தி குர்காவ்ன் மறைமாவட்டம் உதயமானது.
45. டெல்லி - குர்காவ்ன் (Gurgaon) மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? முதல் ஆயராக மார் பர்ணபாஸ் ஆண்டகையே நியமிக்கப்பட்டார்.
46. அமெரிக்கா கானடா சமாதானத்தின் அரசி தற்போதைய ஆயர் யார்? மேதகு பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ்
47. பாறசாலை மறைமாவட்டம் எப்போது உருவானது? 2018-ம் ஆண்டு திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்திலிருந்து பாறசாலை மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது.
48. பாறசாலை மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர் யார்? மேதகு ஆயர் தோமஸ் மார் எவுஸேபியோஸ்
49. புனே கட்கி மறையாட்சி வட்டம் எப்போது உருவானது? புனே - கட்கி மறையாட்சி வட்டம் 2015 மார்ச் 26-ம் நாள் உருவாக்கப்பட்ட போது அதன் முதல் ஆயராக மேதகு ஆயர் தோமஸ் மார் அந்தோணியோஸ் நியமிக்கப்பட்டார்.
50. தற்போதைய கூரியா ஆயர் யார்? 2017 செப்டம்பர் 21-ம் நாள் யூஹானோன் மார் தியோடோஷியஸ் என்ற பெயரில் கூரியா ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.
51. ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் வழியாக இயேசு கிறிஸ்து தமது பணியை தொடர்கிறார் என்பது பற்றிய பாடல் எது? “தலைமைக்குருக்கள்-குருவானவர்கள் நல் திருத்தொண்டர் ஆண்டவர் இவர்களை நியமித்தாரே நானிலமெங்கும்” ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் வழியாக இயேசு கிறிஸ்து தமது பணியை பூமியில் தொடர்கிறார் என்பதை தேவ நற்கருணை வாங்கும் வேளையிலுள்ள பாடலின் வழியாக திருச்சபை நினைவுபடுத்துகிறது.
52. “உங்கள் தலைவர்களுக்குக் **கீழ்ப்படியுங்கள்**. அவர்களுக்கு பணிந்திருங்கள்” (எபிரேயர் 13:17).
53. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளின் முதல் திருத்தூதுவ சந்திப்பாளராக நியமிக்கப்பட்ட ஆயர் யார்? ஐசக் மார் கிளிமீஸ்.
54. ஆயர் மோறான் மோர் பசேலியோஸ் கிளிமீஸ் உயர் பேராயரின் பதவியேற்பு எப்போது நடைபெற்றது? கி.பி. 2005 மேய் 14
55. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)ம் (Major Arch

www.malankaralibrary.com

Diocese) எது? திருவனந்தபுரம்

56. மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் மறைமாநில(உயர் மறைமாவட்டம்)ம் எது? திருவல்லா

57. திருவல்லா மறைமாநிலத்தின்(Province) கீழ் உள்ள மறைமாவட்டங்கள் யாவை? திருவல்லா, பத்தேரி, மூவாற்றுப்புழா, புத்தூர்

58. திருவனந்தபுரம் மறைமாநிலத்தில்(Province) உள்ள மறைமாவட்டங்கள் யாவை? திருவனந்தபுரம், மார்த்தாண்டம், மாவேலிக்கரை, பத்தனம்திட்டா, பாற்சாலை

59. தற்போது மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் எத்தனை ஆயர்கள் உள்ளனர்? 16(2017)

60. கி.பி. 2010 -ல் புதிதாக உருவான மறைமாவட்டங்கள் யாவை? புத்தூர், பத்தனம்திட்டை

61. கி.பி. 2015 -ல் புதிதாக உருவான புதிய மறைமாவட்டம் எது? குட்காவ் (புது டில்லி)

62. கி.பி. 2015 -ல் புதிதாக உருவான எக்ஸார்கேட் எது? கட்சி (புனே) 98. கி.பி.

63. 2017 - ல் புதிதாக உருவான புதிய மறைமாவட்டம் எது? பாறசாலை

64. திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)த்தின் உயர் பேராயர் யார்? மோறான் மோர் பசேலியோஸ் கிளிமீஸ் காதோலிக்கோஸ். (பிறப்பு - கி.பி. 1959 ஜூன் 15 - ஆயர்பாட்டம் - கி.பி. 2001 ஆகஸ்ட் 15)

65. மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் யார்? ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் (பிறப்பு - கி.பி. 1964 பெப்ருவரி 20 - ஆயர்ப்பட்டம் - கி.பி. 2010 மார்ச் 13)

66. திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்)த்தின் பேராயர் யார்? பேராயர் தோமஸ் மார் கூரிலோஸ் (பிறப்பு - கி.பி. 1958 அக்டோபர் 19 ஆயர்பட்டம் - கி.பி. 1997 ஜூலை 17)

67. புத்தூர் மறைமாவட்டத்தின் ஆயர் யார்? ஆயர் கீ வர்கீஸ் மார் மக்காரியோஸ்

68. பத்தேரி மறை மாவட்டத்தின் ஆயர் யார்? ஆயர் ஜோசப் மார் தோமஸ் (பிறப்பு கி.பி. 1952 ஏப்ரல் 20, - ஆயர்பட்டம் - கி.பி.2005 பெப்ருவரி 19)

69. மூவாற்றுப்புழா மறை மாவட்டத்தின் ஆயர் யார்? ஆயர் ஆபிரகாம் மார் யூலியோஸ் (பிறப்பு - கி.பி.1944 ஜூன் 1 - ஆயர்பட்டம் - கி.பி.2008 பெப்ரவரி 9)

70. அமெரிக்கா (The Syro-Malankara Catholic Eparchy in the USA and Canada) மறை மாவட்டத்தின் ஆயர் யார்? ஆயர் பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ்(பிறப்பு கி.பி.1952 மேய் 9 - ஆயர்பாட்டம் - கி.பி.2010 March 13)

71. மாவேலிக்கரை மறை மாவட்டத்தின் ஆயர் யார்? ஆயர் ஜோசுவா மார் இக்னாத்தியோஸ்( பிறப்பு - கி.பி. 1950 மேய் 24. ஆயர்பாட்டம் - கி.பி. 1998 ஜூன் 29)

72. பத்தனம்திட்டா மறை மாவட்டத்தின் ஆயர் யார்? யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் (பிறப்பு - கி.பி. 1944 மேய் 19 -ஆயர்பாட்டம் - கி.பி. 1998 ஜூன் 29)

73. பாறசாலை மறை மாவட்டத்தின் ஆயர் யார்? ஆயர் தோமஸ் மார் எவுஸேபியுஸ் (பிறப்பு - கி.பி. 1961 ஜூன் 6 - ஆயர்ப்பட்டம் - கி.பி. 2010 செப்டம்பர் 21)

74. குட்காவ் (புது டில்லி) மறை மாவட்டத்தின் ஆயர் யார்? ஆயர் ஜேக்கப் மார் பர்ண பாஸ்(பிறப்பு - கி.பி. 1960, டிசம்பர் 3 -ஆயர்பட்டம் - கி.பி. 2007 மார்ச் 10)

75. ஐரோப்பிய நாடுகளில் சந்திப்பாளர், கூரியா ஆயர் யார்? ஆயர் யூஹானோன் மார் தியடோஷியஸ்

76. கட்கி எக்ஸார்கேட்டின் (Exarchate) ஆயர் யார்? ஆயர் தோமஸ் மார் அந்தோணியோஸ்(பிறப்பு - கி.பி. 1955 நவம்பர் 25 -ஆயர்பாட்டம் - கி.பி. 2010 மார்ச் 13)

77. புத்தூர் மறை மாவட்ட முதல் ஆயரும் இறையடி சேர்ந்தவருமான ஆயர் யார்? ஆயர் கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ்(பிறப்பு - கி.பி. 1950 நவம்பர் 1, - ஆயர்பாட்டம் - கி.பி. 1997 பெப்ருவரி 5)

78. திருவல்லா மறைமாநில(உயர் மறைமாவட்டம்) முன்னாள் ஆயரும் தற்போது ஓய்வு கொள்ளும் ஆயர்

யார்? ஆயர் கீ வர்கீஸ் மார் திமோத்தியோஸ்(பிறப்பு - கி.பி. 1928 பெப்ருவரி 2 -ஆயர்பாட்டம் - கி.பி. 1988 ஆகஸ்ட் 6)

79. பத்தனம்தட்டை மறைமாவட்ட வாரிசு ஆயர் யார்? ஆயர் சாமுவேல் மார் ஐரேணியோஸ் (பிறப்பு - கி.பி. 1952 மேய் 13 - ஆயர்பட்ட ம் - கி.பி. 2010 March 13)

80. 1956ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? யாக்கோபு மார் தியோபிலஸ் (பிறப்பு - கி.பி. 1892 February 29 - மரணம் - கி.பி. 1956 June 27

81. கி.பி. 1943 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? தோமஸ் மார் தியஸ்கோறஸ் (பிறப்பு - கி.பி. 1884 ஜனவரி 4 - மரணம் - கி.பி. 1943 February 21)

82. கி.பி. 1955 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? ஜோசப் மார் சேவேரியோஸ் (பிறப்பு - 1894 April 7 - மரணம் - 1955 January 18)

83. கி.பி. 1977 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ்(பிறப்பு - 1908- மரணம் -1977 September 28)

84. கி.பி. 1987 ல் இறையடி சேர்ந்த திருவல்லா மறைமாவட்ட ஆயர் யார்? Isac Mar Yoohanon (பிறப்பு - 1930- மரணம் -1987 April 28)

85. கி.பி. 1994 ல் இறையடி சேர்ந்த திருவனந்தபுரம் மறைமாவட்ட பேராயர் யார்? - பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் (பிறப்பு - 1916 -மரணம் -1994 October 10).

86. கி.பி. 1997 ல் இறையடிசேர்ந்த மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் யார்? - லாரன்ஸ் மார் எப்ரேம் (பிறப்பு - 1928- மரணம் -1997 April 8)

87. கி.பி. 1998 ல் இறையடி சேர்ந்த Thozhiyoor ஆயர் யார்? -பவுலோஸ் மார் பீலக்சினோஸ் (பிறப்பு - 1928 - மரணம் -1998 November 3)

88. கி.பி. 2007 ல் இறையடிசேர்ந்த திருவனந்தபுரம் முதல் உயர் பேராயர் யார்? சிறில் மார் பசேலியோஸ் காதோலிக்கோஸ்(பிறப்பு - 1935 August 16 மரணம் -2007 January 18 )

*தற்போதைய தமிழகத் திருச்சபை நூல்களில் Major Archdiocese, மற்றும் Major Archbishop போன்ற ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் இல்லை. ஏனென்றால் இவை கிழக்கத்தியத் திருச்சபைகளுக்கு மட்டுமே உரிய சொற்கள் ஆகும். இதற்கு இணையான தமிழ்ச் சொல்லை நாமே கண்டறிய வேண்டும்.*

*இத்தகைய குழப்பங்களுக்கு தீர்வாக பின்வரும் வார்த்தைகளை நான் முன் மொழிகிறேன்:*

| | | | |
|---|---|---|---|
| *Diocese* | *மறைமாவட்டம்* | *Bishop* | *ஆயர்* |
| *Archdiocese* | *உயர் மறைமாவட்டம்* | *Archbishop* | *பேராயர்* |
| *Major Archdiocese* | *பேருயர் மறைமாவட்டம்* | *Major Archbishop* | *பேருயர் பேராயர்* |

*Major என்பதற்கு திருச்சபை நூல்கள் உயர் என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றன. Arch என்பதற்கும் திருச்சபை நூல்கள் உயர் என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றன (Archdiocese). எனவே Major Archdiocese என்பதற்கு உயர் மறைமாவட்ட(பேருயர் மறைமாவட்டம்)ம் என்ற சொல் பொருந்தும் எனக் கருதுகிறேன்.*

## பாடம் 17

## புனித பேதுரு - பவுல் சீடர்கள்

www.malankaralibrary.com

**பயிற்சி வினாக்கள்**

1. அப்போஸ்தலர்களின் தலைவர் புனித பேதுரு என்பதற்கு விவிலியம் அளிக்கும் சான்றுகள் யாவை? கலிலேயக் கடலோரமாய் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது இயேசு சீமோனை அழைத்தார் (மத்தேயு 4:18-22; மாற்கு 1:16-20; லூக்கா 5:11). படகையும், வலையையும் விட்டு விட்டு பேதுரு இயேசுவைப் பின் தொடர்ந்தார்.

இயேசுவின் இறைத்தன்மையை அறிக்கையிட்டவரும் ஏனைய (மத்தேயு 16:16) சீடர்களுக்காக பல வேளைகளில் பேசியவரும் பேதுருவே (திருத்தூதர் பணிகள் 1:15, 2:14) அப்போஸ்தலர்களின் பெயர் குறிப்பிடப்படுகின்ற இடங்களிலெல்லாம் முதலில் பேதுருவின் பெயரே இடம் பெறும் (மத்தேயு 10:2, மாற்கு 3:16, லூக்கா 6:16).

இயேசுவின் பொது வாழ்வின் முக்கிய நிகழ்வுகளுக்கெல்லாம் அவரே சாட்சியாயிருந்தார். இயேசுவின் தோற்றம் மாறுதலின் நேரத்திலும், யாயிரின் மகளைக் குணப்படுத்திய வேளையிலும், கெத்சமனியில் மன்றாடிய போதும், தண்ணீரின் மீது நடந்த போதும் பேதுரு உடனிருந்தார். இயேசு பேதுருவின் கேள்விக்கு விடையாகவே அடிப்படையான தத்துவங்கள் சிலவற்றை விளக்கி கூறினார் (மத். 15:15; மாற்கு 10:28; லூக்கா 18:28). இயேசுவை அறிக்கையிட்ட பேதுரு பின்னர் அவரையே மறுதலித்தார். ஆனால் முழு மனவருத்தத்தோடு மீண்டும் இயேசுவை ஏற்றுக் கொண்டார். சீடர்களில் இயேசுவின் உயிர்ப்பை முதலில் அறிந்துக் கொண்டவர் பேதுருவே (மாற்கு 16:7; லூக்கா 24:34). உயிர்த்த இயேசு திருச்சபையை வழி நடத்திட சிறப்பு அதிகாரத்தை பேதுருவுக்கு வழங்கினார் (யோவான் 21:15-19). இவ்வாறு பேதுரு சீடர்களுள் முதன்மையாளராக திகழ்ந்தார். பேதுருவாகிய பாறை மேல் என் திருச்சபையை நிறுவுவேன் என் ஆடுகளை மேய்' என்ற இறைவார்த்தையின் வாயிலாக திருச்சபையை வழி நடத்துவதற்கான அதிகாரத்தை இயேசு பேதுருவுக்கு வழங்கி அவரை திருச்சபையின் தலைவராக நியமித்தார்.

2. புனித பேதுருவின் இரத்த சாட்சியத்தை விவரி? நற்செய்தியை அறிவிப்பதற்காக பேதுரு உரோமைக்குச் சென்றார். அங்கே பல இன்னல்களை தாங்கிக் கொண்டு நற்செய்தியை பறைசாற்றினார். கி.பி - 67-ல் நீரோ மன்னனின் காலத்தில் ரோமில் வைத்து தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார்.

3. புனித பவுலைப் பற்றிய அறிவு நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது? புனித பவுலின் மறைபரப்பு பணி வாழ்க்கையும், ஆழமான ஆன்மீக சிந்தனைகளும் பற்றிய அறிவு நமக்கு அவரின் திருமுகங்களிலிருந்தும் 'திருத்தூதர் பணி' நூலிலிருந்தும் கிடைக்கின்றன.

4. புனித பவுலின் வரலாற்றுப் பின்னணியை விவரி? சிலிசியாவிலுள்ள தர்சு என்ற நகரில் கி.பி. 1-ம் ஆண்டு பவுல் பிறந்தார் (திருத்தூதர் பணிகள் 22:3). பெஞ்சமின் குலத்தில் பிறந்த அவர் உரோமைக் குடியுரிமை யையும் பெற்றிருந்தார். பவுலின் முதற்பெயர் சவுல். சவுல் என்ற எபிரேய பெயருக்கு 'கடவுளோடு கேட்டது' என்று பொருள். மனமாற்றத்திற்கு பின் சிறிது என்று பொருள்படுகின்ற பவுல் என்ற உரோமைப் பெயரை ஏற்றார். கிரேக்க மொழி வல்லுநரான சவுல் யூதப் பண்டிதரான கமாலியேல் என்பவரிடம் கல்வி பயின்றார். சட்டங்களை முறையாக கற்ற அவர் சட்டங்களை முழுமையாகக் கடைப் பிடிக்கின்ற பரிசேய குலத்தைச் சார்ந்தவர். கி.பி. 36-ல் மனம் மாறினார். 'புறவினத்தாரின் அப்போஸ்தலர்' என்று சிறப்பாக அழைக்கப்படுகின்ற பவுல் மூன்று தூதுரைப் பயணங்களை மேற்கொண்டார். திருவிவிலியத்தில் புனித பவுலின் பெயரில் 14 திருமுகங்கள் உள்ளன.

5. புனித பவுலின் மனமாற்றம் எவ்வாறு நடந்தது? ஒரு யூதனாயிருப்பதில் பெருமை கொண்டிருந்த சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவும் இயேசுவின் பெயரை இவ்வுலகிலிருந்து அகற்றுவதற்குமாகச் செயல்பட்டார். தமஸ்கு நோக்கிய பயணத்தின் போது இயேசு சவுலை பவுலாக மாற்றினார். 'நீ துன்புறுத்தும் இயேசு நான் தான்' (திருத்தூதர் பணிகள் 9:6) என்ற இயேசுவின் வார்த்தைகள் பவுலின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையானது. கிறிஸ்தவர்களை அழிக்க புறப்பட்டதை விட மிக்க ஆற்றலோடு சிலுவையில் இறந்து உயிர்த்த இயேசுவிற்கும் சான்று பகர அவர் தயாரானார். தமது வாழ்வில் ஆழமாகப் பதிந்த இயேசுவின் நற்செய்தியை எல்லா இடங்களிலும் பயமின்றி புயலாக மாறி பறைசாற்றினார்.

6.மனமாற்றத்திற்குப் பின் புனித பவுலுக்கு கிறிஸ்தவர்களோடிருந்த மனநிலை எப்படியிருந்தது? 'நீ துன்புறுத்தும் இயேசு நான் தான்' (திருத்தூதர் பணிகள் 9:6) என்ற இயேசுவின் வார்த்தைகள் பவுலின்

www.malankaralibrary.com

வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையானது. கிறிஸ்தவர்களை அழிக்க புறப்பட்டதை விட மிக்க ஆற்றலோடு சிலுவையில் இறந்து உயிர்த்த இயேசுவிற்கும் சான்று பகர அவர் தயாரானார். தமது வாழ்வில் ஆழமாகப் பதிந்த இயேசுவின் நற்செய்தியை எல்லா இடங்களிலும் பயமின்றி புயலாக மாறி பறைசாற்றினார். இயேசுவை சொந்தமாக்குவதற்காக அவர் பலவற்றை இழந்தார். இயேசுவின் பெயரால் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதில் அவர் பெருமைப்பட்டார். இயேசுவின் சிலுவையன்றி வேறொன்றிலும் மகிமையைக் கண்டடைய எனக்கு இயலாமல் போவதாக என்றும் 'இனி வாழ்பவன் நானல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்' (கலாத்தியார் 2:20) என்றும் புனித பவுல் கூறினார்.

7. அப்போஸ்தலரான புனித பவுலின் நற்செய்திப் பணியின் ஆர்வத்தை விவரி? கிறிஸ்தவர்களை அழிக்க புறப்பட்டதை விட மிக்க ஆற்றலோடு சிலுவையில் இறந்து உயிர்த்த இயேசுவிற்கும் சான்று பகர அவர் தயாரானார். தமது வாழ்வில் ஆழமாகப் பதிந்த இயேசுவின் நற்செய்தியை எல்லா இடங்களிலும் பயமின்றி புயலாக மாறி பறைசாற்றினார். இயேசுவை சொந்தமாக்குவதற்காக அவர் பலவற்றை இழந்தார். இயேசுவின் பெயரால் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதில் அவர் பெருமைப்பட்டார்.

8. சவுல் என்ற வார்த்தையின் பொருள் என்ன? சவுல் என்ற எபிரேய பெயருக்கு 'கடவுளோடு கேட்டது' என்று பொருள்.

9. பவுல் என்ற வார்த்தையின் பொருள் என்ன? மனமாற்றத்திற்கு பின் சிறிது என்று பொருள்படுகின்ற பவுல் என்ற உரோமைப் பெயரை ஏற்றார்.

10. பேதுரு என்ற வார்த்தையின் பொருள் என்ன? பேதுருவின் முதல் பெயர் சீமோன் (மாற்கு 1:16, லூக்கா 5:3). பேதுரு என்ற பெயர் பாறை எனப் பொருள்படும். 'பெத்றா' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. இயேசு தான் சீமோனுக்கு பேதுரு என்ற பெயரை வழங்கினார்.

## குறு வினா விடைகள்

1. திருச்சபையின் இரு பெருந்தூண்கள் எனப்படுபவர் யார்? தூய பேதுருவும் பவுலும்.
2. அப்போஸ்தலர் குழுவின் தலைவர் யார்? தூய பேதுரு
3. பேதுருவின் முதல் பெயர் என்ன? சீமோன் (மாற்கு 1:16, லூக்கா 5:3).
4. பேதுரு என்ற பெயர் **<u>பாறை</u>** எனப் பொருள்படும்.
5. 'பெத்றா' என்ற சொல்லின் மூல மொழி யாது? கிரேக்கம்
6. சீமோனுக்கு பேதுரு என்ற பெயரை வழங்கியவர் யார்? இயேசு
7. பேதுருவின் குடும்ம் பற்றிகி கூறுக? பேதுரு கலிலேயனான யோனாவின் மகனும் அப்போஸ்தலரான அந்திரேயாவின் சகோதரரும் ஆவர்.
8. பேதுரு எந்த இடத்தில் பிறந்தார்? பெத்சாயிதா (யோவான் 1: 44).
9. இயேசு சீமோனை எப்போது அழைத்தார்? கலிலேயக் கடலோரமாய் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது (மத்தேயு 4:18-22; மாற்கு 1:16-20; லூக்கா 5:11). படகையும், வலையையும் விட்டு விட்டு பேதுரு இயேசுவைப் பின் தொடர்ந்தார்.
10. ஆதித்திருச்சபையை முதலில் வழிநடத்தியது யார்? பேதுரு
11. புனித பவுல் ஆதித்திருச்சபையில் யாருடைய தலைமையை அங்கீகரித்தார்? பேதுருவின்
12. அப்போஸ்தலர் குழுவிற்கு யூதாசிற்குப் பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க சீடர்களின் பிரதிநிதியாக பேசியவர் யார்? பேதுரு
13. எருசலேமில் அப்போஸ்தலர்களின் கூட்டத்தை கூட்டியவர் யார்? பேதுரு
14. பேதுரு எங்கே நற்செய்தி அறிவித்தார்? உரோமையில்
15. பேதுரு எப்போது கொல்லப்பட்டார்? கி.பி - 67-ல்
16. பேதுரு யார் காலத்தில் கொல்லப்பட்டார்? நீரோ மன்னனின்
17. பேதுரு எங்கே வைத்து கொல்லப்பட்டார்? ரோமில்
18. பேதுரு எவ்வாறு கொல்லப்பட்டார்? தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு
19. பேதுருவின் உடல் எங்கே வைக்கப்பட்டுள்ளது? வத்திக்கான் குன்றில்
20. பேதுருவின் உடல் வைக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டப்பட்ட பசிலிக்கா யாது? புனித பீட்டர்ஸ் பசலிக்கா

www.malankaralibrary.com

21. முதல் பாப்பரசர், முதல் திருத்தந்தை யார்? பேதுரு
22. பவுலின் பிறப்பு பற்றிக் கூறுக? சிலிசியாவிலுள்ள தர்சு என்ற நகரில் கி.பி. 1-ம் ஆண்டு பவுல் பிறந்தார் (திருத்தூதர் பணிகள் 22:3).
23. பவுலின் பிறந்து வளர்ந்த குலம் யாது? பெஞ்சமின் குலத்தில்
24. சவுல் யாரிடம் கல்வி பயின்றார்? யூதப் பண்டிதரான கமாலியேலிடம்
25. பவுல மனமாற்றமடைந்த ஆண்டு எது? கி.பி. 36-ல்.
26. பவுலின் சிறப்புப் பெயர் என்ன? 'புறவினத்தாரின் அப்போஸ்தலர்'
27. பவுலின் தூதுரைப் பயணங்கள் எத்தனை? மூன்று
28. திருவிவிலியத்தில் புனித பவுலின் பெயரில் திருமுகங்கள் எத்தனை? பதிநான்கு
29. பவுல் எப்போது கொல்லப்பட்டார்? ஏறக்குறைய கி.பி - 67-ல்
30. பேதுரு யார் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்டார்? நீரோ மன்னனின்
31. பேதுரு எங்கே வைத்து கொல்லப்பட்டார்? ரோமில்
32. பேதுரு எவ்வாறு கொல்லப்பட்டார்? தலை வெட்டப்பட்டு இரத்தசாட்சியானார்
33. பேதுருவின் உடல் எங்கே வைக்கப்பட்டுள்ளது? உரோமில்
34. **தமஸ்கு** நோக்கிய பயணத்தின் போது இயேசு சவுலை பவுலாக மாற்றினார்.
35. பவுலின் வாழ்க்கையில் திருப்பு முனையான இயேசுவின் வார்த்தைகள் யாவை? 'நீ துன்புறுத்தும் இயேசு நான் தான்' (திருத்தூதர் பணிகள் 9:6)
36. பதிமூன்று நோன்பு பற்றிக் குறிப்பு வரைக? அந்தியோக்கியன் மரபுப்படி கிறிஸ்துவின் சீடர்களுக்கு ஆராதனையில் சிறந்த இடமுண்டு. திருச்சபை ஜூன் 29-ம் தேதி 'புனித பேதுரு - புனித பவுல் சீடர்களின் திருநாள்' கொண்டாடுகின்றது. சீடர்களின் நன்மதிப்பைப் பொருட்டு மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையில் கடைபிடிக்கப்படுகின்ற நோன்பே பதிமூன்று நோன்பு. இது 'சீடர்களின் நோன்பு' என்று அறியப்படுகிறது.
37. புனித பவுலடியாரின் மனமாற்றத்தின் திருநாளாக எப்போது? ஜனவரி 25
38. பேதுரு சீடரின் புகழ்ச்சிக்காக பாடுகின்ற பாடல் யாது? புது ஞாயிறுக்குப் பின் வருகின்ற முதல் ஞாயிறு நாம் புனித பேதுருவை நினைவு கூர்கிறோம். திருப்பலியில் நற்செய்தி வாசகத்திற்குப் பின் கீழ்காணும் பாடலை பேதுரு சீடரின் புகழ்ச்சிக்காக பாடுகிறோம்.
    "மீனவராம் சீமோனை ஆண்டவர் அழைத்தார்
    மீன்பிடி வேலை கைவிடு நீ என்றும், சொன்னாரே
    வாழ்வின் உலகம் சென்றிடவே நீ மானிடரை
    உன் வலை வீசி சேர்த்திடுவாய் சீமோனை நீயும்
    உரோமையிலே - சீமோன் வலைவீச
    தேவர்களைப் பலரும் விட்டொழிய
    இயேசுவை நம்பி வாழ்வுதனைக் கைக்கொண்டாரவர்கள்"
39. பவுலின் பணிகள் பற்றி பாடுகின்ற பாடல் யாது? "பவுலடியாரின்........." என்ற பாடல் திருப்பலியில் பவுலின் திருமுகங்களை வாசிப்பதற்கு முன் பாடுகிறோம்.
40. "கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல; **கிறிஸ்துவே** என்னுள் வாழ்கிறார்" (கலாத்தியர் 2:20)

**பாடம் 18**

## புனித பிரான்சிஸ் அசிசியார்

### பயிற்சி வினாக்கள்

1. புனித பிரான்சிஸ் அசிசியின் இளமைப்பருவத்தை விவரி? 1182 செப்டம்பர் 26-ம் தேதி இத்தாலியில் அசிசி என்ற கிராமத்தில் பிரான்சிஸ் பிறந்தார். அவரின் தந்தை பீட்டர் பர்ணாந்தும் தாய் பீக்கயும் ஆவர். குழந்தையின் திருமுழுக்கு வேளையில் "ஜாண்' என்ற பெயர் வழங்கப்பட்டது. பிரான்சிஸ் பேசத் தொடங்கியதும் அவரின் தாய் அவருக்கு சிலுவை வரையவும் சின்னச் சின்ன மன்றாட்டுக்களை செபிக்கவும் கற்றுக் கொடுத்தார். இயேசுவோடும் மரியன்னையோடும் பக்தி உருவாக குழந்தையை தயார் செய்தார்.

www.malankaralibrary.com

2. புனித பிரான்சிஸிற்கு இறையழைத்தல் ஏற்பட்ட நிகழ்ச்சியை விவரி? இளமைத் துடிப்பில் பெயரும் பெருமையும் பெறுவதற்காக எந்த தீரச்செயலையும் செய்ய பிரான்சிஸ் தயாரானார். அதனால் வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் அவர் போரில் பங்கு பெற்றார். ஒருநாள் ஜெர்மனிக்கு எதிராக போரின் உடையணிந்து ஆயுதங்களுடன் போர்க்களத்தை அடைந்தார். போர் தொடங்குவதற்கு முந்தைய நாள் பிரான்சிஸ் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில் கடவுள் பிரான்சிசோடு கேட்டார் : "பிரான்சிஸ் நீ எங்கே செல்கிறாய்?". மறுமொழியாக : "நான் போர் செய்ய போகிறேன்" என்றார். கடவுளின் குரல் மீண்டும் முழங்கியது: "பிரான்சிஸ், எஜமானனுக்கு சேவை செய்வதா, வேலையாளுக்கு சேவை செய்வதா, இதில் எது சிறந்தது?". பிரான்சிஸ் மறுமொழியாக கூறினார்: "எஜமானனுக்கு", மீண்டும் குரல்: "அப்படியெனில் எதற்காக வேலையாளுக்குச் சேவைச் செய்ய போகிறாய்?", பிரான்சிஸ் கேட்டார் : "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்?". "நீ திரும்பிப் போ" என்றது கடவுளின் குரல். பிரான்சிஸ் திரும்பிச் சென்றார். போரிலிருந்து சமாதானத்திற்கு திரும்பிச் செல்வதன் தொடக்கமே அது. 'பெயருக்கும் பெருமைக்கும்' பதிலாக ஏழ்மையும், பொறுமையும், அமைதியும் ஏற்றெடுக்கவே இந்த முடிவு.

அந்தக்காலத்தில் பிரான்சிசுக்கு ஒரு காட்சியில் இடிந்து விழும் நிலையிலுள்ள ஆலயத்தை புதுப்பிப்பதற்கான அழைப்பு கிடைத்தது. இந்த அழைத்தலின் உட்பொருளை திருப்பலியில் நற்செய்தி வாசகத்தின் போது தெளிவாக புரிந்து கொண்டார். நற்செய்திக்காக அனைத்தும் துறந்துவிடும் தூண்டுதல் பிரான்சிசை ஆட்கொண்டது. "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும்" (மத்தேயு 19:21). "உங்களது பயணத்திற்காக எதையும் எடுத்துக் கொள்ள வேண்டாம்" (மத்தேயு 10:10). "என்னைப் பின்பற்றவிரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மத்தேயு 16:24)

இது போன்ற இறைவார்த்தைகள் பிரான்சிசை அதிகமாகத் தொட்டன. இவ்வாறாக பிரபு குடும்பத்தைச் சார்ந்த பிரான்சிஸ் வீடு, செல்வம் அனைத்தையும் துறந்து முழு ஏழையாக இயேசுவைப் பின்தொடர்ந்தார்.

3. புனித பிரான்சிஸின் சிறந்த குணங்கள் யாவை? மேலும் தியாகச் செயல்கள் செய்யவும், பிறரன்பு பணிகள் செய்யவும் அவருக்கு பயிற்சி அளித்தார். குழந்தை வளர்ந்ததும் சில சிறப்புக் குணங்கள் அவரில் காணத் தொடங்கின. எந்த செயலைச் செய்வதிலும் உற்சாகமும் ஒழுக்கமும் அவர் கடைபிடித்தார். இச்சிறுவனில் மிகச் சிறப்பாகக் காணப்பட்ட பண்பு இரக்க குணமாகும். தேவைப்படுகின்றவர்களுக்கு எதையும் உடனடியாக வழங்குவதில் பிரான்சிஸ் கவனம் செலுத்தினார். இந்தக் குணமே பிரான்சிசை பிற்காலத்தில் உயர்நிலை அடையச் செய்தது. பகைமையுள்ள இடத்தில் அன்பை விதைக்கவும், வருத்தம் நிறைந்த இடத்தில் மகிழ்ச்சியை பகிரவும் புனித பிரான்சிஸ் நடத்திய முயற்சிகள் அவரை பெருமைக்குரியவாராக்குகின்றன.

4. பிரான்சிஸ்கன் சமூகம் கத்தோலிக்கச் சபைக்கு வழங்கிய கொடைகள் யாவை? புனித பிரான்சிசும் அவரது துறவறசமூகங்களும் கத்தோலிக்கச் சபையில் பக்தி முயற்சிகளுக்கு காரணமாயிருந்தனர். பலிபீடத்தில் சிலுவையை வைத்து பலி செலுத்துதல் நற்கருணையை பேழையில் பாதுகாக்கின்ற முறை. மணியடித்து மூவேளை செபம் சொல்லுதல், கிறிஸ்துமஸ் குடில், சிலுவைப்பாதை போன்றவை இவரது நற்கொடைகளாகும்.புனித பிரான்சிஸ் அனைத்தையும் துறந்து இயேசுவைப் பின்தொடரக் காரணமான நிகழ்ச்சியை விவரி. ஒரு நாள் பிரான்சிசுக்கு ஒரு காட்சியில் இடிந்து விழும் நிலையிலுள்ள ஆலயத்தை புதுப்பிப்பதற்கான அழைப்பு கிடைத்தது. இந்த அழைத்தலின் உட்பொருளை திருப்பலியில் நற்செய்தி வாசகத்தின் போது தெளிவாக புரிந்து கொண்டார். நற்செய்திக்காக அனைத்தும் துறந்துவிடும் தூண்டுதல் பிரான்சிசை ஆட்கொண்டது. "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும்" (மத்தேயு 19:21). "உங்களது பயணத்திற்காக எதையும் எடுத்துக் கொள்ள வேண்டாம்" (மத்தேயு 10:10). "என்னைப் பின்பற்றவிரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மத்தேயு 16:24)

இறைவார்த்தைகள் பிரான்சிசை அதிகமாகத் தொட்டன. இவ்வாறாக பிரபு குடும்பத்தைச் சார்ந்த பிரான்சிஸ் வீடு, செல்வம் அனைத்தையும் துறந்து முழு ஏழையாக இயேசுவைப் பின்தொடர்ந்தார்.

6. புனித பிரான்சிஸின் திருமுழுக்குப் பெயர் என்ன? குழந்தையான புனித பிரான்சிஸிற்கு திருமுழுக்கு வேளையில் "ஜாண்" என்ற பெயர் வழங்கப்பட்டது.

7. புனித பிரான்சிஸின் பெற்றோர்கள் யார்? புனித பிரான்சிஸின் தந்தை பீட்டர் பர்ணாந்தும் தாய் பீக்கயும் ஆவர்.

8. பிறரன்புப் பணிகள் செய்ய பிரான்சிஸிற்கு பயிற்சி அளித்தது யார்? பிரான்சிஸ் பேசத் தொடங்கியதும் அவரின் தாய் அவருக்கு சிலுவை வரையவும் சின்னச் சின்ன மன்றாட்டுக்களை செபிக்கவும் கற்றுக் கொடுத்தார். இயேசுவோடும் மரியன்னையோடும் பக்தி உருவாக குழந்தையை தயார் செய்தார். மேலும் தியாகச் செயல்கள் செய்யவும், பிறரன்பு பணிகள் செய்யவும் அவருக்கு பயிற்சி அளித்தார். குழந்தை வளர்ந்ததும் சில சிறப்புக் குணங்கள் அவரில் காணத் தொடங்கின. எந்த செயலைச் செய்வதிலும் உற்சாகமும் ஒழுக்கமும் அவர் கடைபிடித்தார். இச்சிறுவனில் மிகச் சிறப்பாகக் காணப்பட்ட பண்பு இரக்க குணமாகும். தேவைப்படுகின்றவர்களுக்கு எதையும் உடனடியாக வழங்குவதில் பிரான்சிஸ் கவனம் செலுத்தினார். இந்தக் குணமே பிரான்சிஸை பிற்காலத்தில் உயர்நிலை அடையச் செய்தது.

## குறு வினா விடைகள்

1. புனித பிரான்சிஸ் அசிசியார் கத்தோலிக்க திருச்சபையால் எந்த சிறப்பு பெயருடன் அழைக்கப்படுகின்றார்? 'இரண்டாம் கிறிஸ்து'
2. புனித பிரான்சிஸ் அசிசியார் எப்போது எங்கே பிறந்தார்? 1182 செப்டம்பர் 26-ம் தேதி இத்தாலியில் அசிசி என்ற கிராமத்தில் பிரான்சிஸ் பிறந்தார். அவரின் தந்தை பீட்டர் பர்ணாந்தும் தாய் பீக்கயும் ஆவர்.
3. புனித பிரான்சிஸ் அசிசியார் எந்த நாட்டுக்கு எதிராக போர் புரிய புறப்பட்டார்? ஜெர்மனிக்கு
4. “நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் **உடைமைகளை** விற்று ஏழைகளுக்குக் கொடும்” (மத்தேயு 19:21).
5. “உங்களது **பயணத்திற்காக** எதையும் எடுத்துக் கொள்ள வேண்டாம்” (மத்தேயு 10:10).
6. “என்னைப் பின்பற்றவிரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் **சிலுவையைத்** தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மத்தேயு 16:24)
7. பிரான்சிஸின் சீடர்களின் அன்றாட செயல்பாடுகள் யாவை? நற்செய்தியை பறைசாற்றுதல், வயலிலும் நிலத்திலும் பணிசெய்தல், இரவில் நீண்ட நேரமிருந்து செபித்தல் போன்றவையே அவர்களின் செயல்பாடுகள். நாளைய தினத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை . கடவுளிடமே அவர்கள் முழுமையாக அடைக்கலம் பெற்றிருந்தனர்.
8. பிரான்சிஸ் பெண்களுக்காக தொடங்கிய சமூகம் எது? பிரான்சிஸ்கன் மூன்றாம் சமூகமும்
9. புனித பிரான்சிஸின் மனித நேயச் செயல்கள் பற்றிக் கூறுக? புனித பிரான்சிஸ் மிகுந்த மனித நேயம் உடையவர். ஒரு நாள் ஒரு தொழுநோயாளியின் புண்களை அவரே தூய்மையாக்கினார். உடனே அவர் தொட்ட புண்களெல்லாம் குணமடைந்தன. அவர் பலவேளைகளிலும் தமது உடைகளையே பிறருக்கு தானமாக வழங்கினார். ஏழ்மையை சுயமாக ஏற்றுக்கொண்ட பிரான்சிஸ் எளிமையின் அடையாளமாக விளங்கினார். பிரான்சிஸ் சமாதானத்தை விரும்புகிறவரும் இயற்கையை அன்பு செய்கின்றவருமாக காணப்பட்டார்.
10. இயேசுவின் ஐந்து காயங்கள் கொண்ட பிரான்சிஸ் எனப்படுவது ஏன்? இயேசுவின் அன்பினுடையவும், பாடுகளினுடையவும் அடையாளமாக ஐந்து காயங்களை தமது உடலில் ஏற்க வேண்டிய பாக்கியத்தை இயேசு பிரான்சிஸிற்கு வழங்கினார்.
11. புனித பிரான்சிஸின் இறப்பு எப்போது? 1226 அக்டோபர் 3-ம் தேதி பிரான்சிஸ் இறைவனடி சேர்ந்தார்.
12. புனித பிரான்சிஸ் புனிதராக அறிவிக்கப்பட்டது எப்போது? 1228 ஜூலை 28-ம் நாள் பாப்பரசர் ஒன்பதாம் கிரகரி அவரை புனிதராக அறிவித்தார்.
13. திருப்பலியில் மறைப்பரப்புப் பணி புரிந்த புனிதர்களிடம் எவ்வாறு மன்றாடுகிறோம்? "ஆண்டவரே, உலகம் முழுவதும் உற்சாகத்துடன் உமது நற்செய்தியை அறிவிக்கவும் உண்மை விசுவாசத்தில் புனித சபையை நிலைநாட்டவும் செய்தவர்களை நீர் நினைவு கூர்ந்தருளும்” என்று நாம் திருப்பலியில் மன்றாடுகிறோம். திருச்சபைக்காக தம் உயிரை அர்ப்பணித்த இந்தப் புனிதரை நமது மறைப்பரப்புப் பணிகளில் சிறப்பாக நினைவுகூர்ந்து அவரது பரிந்துரைக்காக மன்றாடுகிறோம்.

www.malankaralibrary.com

14. மலங்கரை கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் (M.C.Y.M) விண்ணக பாதுகாவலர் யார்? புனித பிரான்சிஸ்

15. "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது **விண்ணகத்தில்** நீர் செல்வராய் இருப்பீர்". | (மத்தேயு 19: 21).

**பாடம் 19**

**புனித குழந்தை தெரசா**

**பயிற்சி வினாக்கள்**

1. புனித குழந்தை தெரசாவின் குழந்தை பருவத்தை விவரி. 1873 ஜனவரி 2-ம் நாள் பிரான்சில் அலன்சோண் என்ற இடத்தில் தெரசா மார்ட்டின் என்ற குழந்தை தெரசா பிறந்தார். இறைபக்தியில் சிறந்த தம்பதிகளான மார்டின் செலினா என்பவர்களின் இளைய மகளே தெரசா, இளமையிலே மிகுந்த அன்பும் உற்சாகமும் உள்ளவளாக தெரசா காணப்பட்டாள். அவளின் நான்காம் வயதில் தமது அன்பு தாயை இழந்தாள். அதன் பின்னர் தெரசாவின் குடும்பத்தினர் லிசூவிற்கு குடித்தனம் மாறினர். தாயின் இறப்பிற்குப் பின் அக்கா பௌளினா தெரசாவின் தாயும் ஆசிரியையுமாக இருந்தார். தெரசாவை இறைபக்தியிலும் நன்மையிலும் கிறிஸ்தவ மதிப்பீடுகளில் வளர்க்க பௌளின் மிகவும் கவனமாக இருந்தார். அக்காவின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் தெரசா மிக்க மகிழ்ச்சியடைந்தார். இவ்வாறாக தெரசா சிறந்த இறைவனுக்கு ஏற்றப் பிள்ளையாக வளர்ந்து வந்தார்.

2. புனித குழந்தை தெரசா ஒரு துறவியாக மாறியது எவ்வாறு? தமது சகோதரிகளான மேரியும் பௌளினும் கார்மல் துறவறமடத்தில் சேர்ந்தது தெரசாவை வேதனையடையச் செய்தது, தம்மையும் ஒரு சிறு மலராக இயேசுவிற்கு அர்ப்பணிக்க வேண்டிய ஆவல் அவளிடம் தோன்றியது. ஆனால் ஒன்பது வயதான அவளை மடத்தில் நுழைவதற்கான ஆவலை ஆயரிடம் தெரிவித்தும் அவள் மிக இளமையானவள்' என ஆயர் கருத்து தெரிவித்தார். இயேசுவிற்காகத் தம்மை அர்ப்பணிக்கும் ஆவலை அவர் திருத்தந்தை பதிமூன்றாம் லியோவுக்கு தெரியப்படுத்தினார். அவளது தீராத ஆவலைப் புரிந்து கொண்ட திருத்தந்தை அவளின் ஆவலை தீர்த்து வைக்க மனம் கொண்டார். அதன்படி பதினாறு வயது ஆவதற்கு முன்னாலேயே தெரசா மடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

3. குறிப்பெழுதுக.

புனித குழந்தை தெரசாவின் வாழ்க்கைத் தூய்மை? கன்னியர் இல்லத்தில் அனைவருடைய அன்புக்கும் உரியவளாயிருந்தாள் தெரசா. துறவறச் சட்டங்களை பணிவுடன் பின்பற்றுவதிலும் இறையன்பிலும் பிறரன்பிலும் வளர்வதற்கு கடவுளின் அருள் அவளுக்கு ஏராளமாகக் கிடைத்தன. இவ்வாறாக தூய வாழ்க்கையில் வளர்வதற்கு தெரசாவால் முடிந்தது. அருட்சகோதரி தெரசாவின் வாழ்க்கைத் தூய்மையும் ஆன்ம சமர்ப்பணமும் தம் 22-வது வயதிலேயே புது துறவியர்களின் பயிற்சியாளராக நியமனம் செய்வதற்கு அதிகாரிகளைத் தூண்டியது. பேரார்வமுடன், மன்றாட்டிலும் இறைபராமரிப்பிலும் வேரூன்றி தமது புதிய பணியில் தெரசா முன்னேறினாள். குழந்தை தெரசாவின் வாழ்க்கை புது துறவிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாயிருந்தது.

அருட்சகோதரி தெரசா அன்றாட வாழ்க்கையில் சின்னச் சின்ன காரியங்களை இறையன்பிலும், முழு இதயத்தோடும் செய்தாள். இதுவே அவள் கண்ட புனித வாழ்வுக்கான சிறு வழியாகும். தமது வாழ்க்கை முழுவதும் இயேசுவிற்காக அர்ப்பணித்து இயேசுவின் பூந்தோட்டத்தில் ஒரு சின்னப் பூவாக தோற்றமளிக்க வேண்டுமென்பதே அவளுடைய இலட்சிய கனவாக இருந்தது.

மறைதூதுவரான புனித குழந்தை தெரசா? இயேசுவின் சபைக்காக நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்பது குழந்தை தெரசாவின் மிகப்பெரிய ஆவலாயிருந்தது. கார்மல் துறவறமடத்தின் சட்டங்கள் நற்செய்தியை பறைசாற்றுவோருக்கு மன்றாட்டின் வழியாக ஊக்கம் அளிப்பதற்கே முக்கியத்துவம் அளித்திருந்தது. ஆகவே, மறைதூதுவர்களுக்காக தீவிரமாக மன்றாடவும் தமது சின்னச் சின்ன ஒறுத்தல்களை நற்செய்திப் பணியின் வெற்றிக்காக இறைவனிடம் சமர்ப்பிக்கவும் குழந்தை தெரசா முக்கியத்துவம் கொடுத்திருந்தார். இந்த நற்செய்திப் பணியிலுள்ள ஆவல், துறவற இல்லத்திற்கு வெளியே நற்செய்திப் பணிக்காகச் செல்லாத இவரை நற்செய்திப் பணியாளர்களின் பாதுகாவலியாகவும் திருச்சபையின்

www.malankaralibrary.com

முனைவர் என்று அறிவிக்கவும் திருச்சபையைத் தூண்டியது.

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையும் புனித குழந்தை தெரசாவும்? நமது சபையின் பாதுகாவலர் புனிதர்களில் ஒருவரே புனித குழந்தை தெரசா, நமது சபையின் ஆன்மீக உயர்விற்காக புனித குழந்தை தெரசா எப்பொழுதும் விண்ணகத்திலிருந்து நமக்காக மன்றாடுகிறார். மறுஒன்றிப்பு இயக்கத்திற்கு வலுவூட்ட மார் இவானியோஸ் ஆண்டகை புனித குழந்தை தெரசாவின் பரிந்துரையை வேண்டி வந்தார். இயேசுவின் நல்ல மக்களாக, சபையின் நல்ல சந்ததிகளாக வளர்வதற்கு புனித குழந்தை தெரசா நமக்காக மன்றாடுகிறார் என்பதில் நாமும் மகிழ்ச்சியடைவோம்.

புனித அல்போன்சம்மாள்? பள்ளி படிப்பை முடித்த பின் இயேசுவின் பாலுள்ள அன்பின் பொருட்டு ஒரு கன்னியராக வேண்டுமென்பதே அல்போன்சாவின் விருப்பம். ஆனால் அவரை திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று குடும்பத்தினர் ஆவல்கொண்டனர். அல்போன்சா மிகவும் அழகாக இருந்ததால் ஏராளமான திருமண ஆலோசனைகள் வந்துகொண்டிருந்தன. வீட்டிலுள்ளவர்களின் விருப்பத்திற்கேற்ப திருமணம் நிச்சயிக்கப்பட்டது. துறவற வாழ்க்கையோடு அதிக விருப்பமுடைய அல்போன்சா திருமணத்திற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. அதன் பெயரில் அவர் ஏராளமான துன்பங்களை ஏற்றுக் கொண்டார்.

ஏழாம் வகுப்பை முடித்தபின் அவள் கிளாரா மடத்தில் சேர்ந்தார். கன்னியரான பின் அல்போன்சா நோயுற்றார். எனினும் அவர் அனைவருக்கும் அன்பை வழங்கினார். துன்பங்களை முழுமையாக ஏற்றார். 36-ம் வயதில் 1946 ஜூலை மாதம் 28-ாம் நாள் அவர் இவ்வுலகிலிருந்து விடைபெற்றார். 1986 பிப்ரவரி 8-ம் நாள் கோட்டயத்தில் வைத்து, பாப்பரசர் இரண்டாம் யோவான் பவுல் அல்போன்சாவை அருளாளராக உயர்த்தினார்.

சிறந்த கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த அல்போன்சா தமது சிறு வயது முதலே ஆன்மீகச் செயல்களில் மிகவும் கவனமுடன் ஈடுபட்டார். தாழ்ச்சி, அன்பு, மனமிரக்கம், ஆழமான இறைபக்தி முதலான குணங்களால் நிறைந்த அல்போன்சாவின் வாழ்க்கை அனைவரையும் கவர்ந்தது. மிகவும் இளமையிலேயே கடவுளின் மணமகளாக மாறிய அல்போன்சா அதற்காக எத்தகைய தியாகத்தையும் ஏற்றுக்கொள்ள தயாராயிருந்தார்.

புனித குழந்தை தெரசாவின் வாழ்க்கை வரலாறு அல்போன்சாவுக்கு சிறந்த தூண்டுதலை அளித்தது. கன்னியர் இல்லத்தில் சேர்ந்த அல்போன்சா இறைவனோடு மிகவும் ஒன்றித்திருந்தார். கன்னியர் இல்லத்தில் கீழ்படிதலையும் பிற புண்ணி யங்களையும் கற்றறிந்து செயலாக்கம் செய்வதில் அனைவருக்கும் முன்மாதிரியாக விளங்கினார். அல்போன்சாம்மாவின் பதினாறு வருட துறவறவாழ்க்கை முழுவதும் உடலளவிலும் மனதளவிலும் துன்பங்கள் நிறைந்ததாக காணப்பட்டது. ஆனால் அவைகள் அனைத்தையும் கடவுளின் பாடுகளோடு இணைத்து தாங்கிக் கொள்ள அல்போன்சா தயாரானார். புனிதத்தின் நறுமணம் வீசும் அவரின் வாழ்க்கையை நாமும் பின்பற்றுவோம். 2008 அக்டோபர் மாதம் 12-ம் நாள் திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் இவரை புனிதையாக அறிவித்தார்.

4. புனித அல்போன்சாவின் குழந்தை பருவத்தைக் குறித்து விவரி? கோட்டயத்திற்கு அருகிலுள்ள குடமாளூர் என்ற இடத்தில் முட்டத்து பாடத்து குடும்பத்தில் ஜோசப்பினுடையவும் மேரியுடையவும் மகளாக 1910 ஆகஸ்ட் 19-ம் தேதி அல்போன்சா பிறந்தார். அல்போன்சாவுக்கு மூன்று மாத காலமானபோது அவருடைய தாய் இறந்தார். தாயை இழந்த குழந்தையை தந்தையும், பாட்டியும் சீராட்டி வளர்த்தனர். ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதி குடமாளூர் ஆலயத்தில் வைத்து ஞானஸ்நானம் வழங்கி அன்னக் குட்டி என்று பெயர் சூட்டினர்.

## குறு வினா விடைகள்

1. குழந்தை தெரசா எந்த வயது வரை வாழ்ந்திருந்தார்? 24 வயது
2. குழந்தை தெரசா எப்போது இறைவனடி சேர்ந்தார்.? 1897 செப்டம்பர் 30-ம் தேதி குழந்தை தெரசா இறைவனடி சேர்ந்தார்.
3. குழந்தை தெரசா எப்போது புனிதையாக அறிவிக்கப்பட்டார்? 1925-ம் ஆண்டு பாப்பரசர் பதினொன்றாம் பத்திநாதர் குழந்தை தெரசாவை புனிதையாக அறிவித்தார்.
4. புனித குழந்தை தெரசா யாருடைய விண்ணக பாதுகாவலராக உள்ளார்? புனித குழந்தை தெரசா, என்றும் தூய வாழ்வை நாடுவோருக்கு மாதிரியாகவும், விண்ணக பாதுகாவலராகவும் இருப்பார்.

www.malankaralibrary.com

5. புனித குழந்தை தெரசா எப்படி எனக்கு முன்மாதிரியாக உள்ளார்? தமது சிறு வயது முதலே இயேசுவின் நல்ல மகளாக வளர ஆவல் கொண்ட குழந்தை தெரசா எனக்கு என்றும் சிறந்த எடுத்துக்காட்டாவார். நானும் இயேசுவின் நல்ல குழந்தையாக வளர ஆசைப்படுகிறேன். குழந்தை தெரசாவின் குறுக்குவழி எனது இந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு உதவும். குழந்தை தெரசாவின் மன்றாட்டும் எளிமையும் இறைபற்றும் அன்பும் தியாகமும் எனது வாழ்வை தூய்மையும் மகிழ்ச்சியும் உடையதாக்கும். குழந்தை தெரசாவின் பரிந்துரையை என் வாழ்வில் நான் வேண்டுவேன்.
6. புனித அல்போன்சாம்மா நோக்கி நான் மன்றாட வேண்டிய செபம் என்ன? செபிப்போமாக புனித குழந்தை தெரசாவே, புனித அல்போன்சம்மாளே இறைக்குழந்தையாக வளர்ந்து வருவதற்கான எனது ஆவலை உங்கள் பரிந்துரைக்காக நான் சமர்ப்பிக்கிறேன். எப்பொழுதும் எனக்காக மன்றாடுங்கள்.
7. “உங்களை அழைத்தவர் **<u>தூய்மையுள்ளவராய்</u>** இருப்பது போல் நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள்” | (1 பேதுரு 1:15)

**பாடம் 20**

## இந்திய திருச்சபையின் புனிதர்கள்

**குறிப்பெழுதுக :**

1. புனித சாவற குரியாக்கோஸ் ஏலியாஸ்

ஆலப்புழ மாவட்டத்தில் கைனகரி சாவற்குடும்பத்தில் குரியாக்கோஸ், மறியம் தம்பதியரின் புதல்வனாக 1805 பிப்ரவரி பத்தாம் தேதி ஏலியாஸ் பிறந்தார். குருமடத்தில் சேர்வதற்கு முன்னரே பல்வேறு மொழிகளைக் கற்றார். கி.பி. 1829 நவம்பரில் ஏலியாஸ் குருப்பட்டம் பெற்றுக்கொண்டார். தந்தை ஏலியாசை ஒரு தியான உரையாளராகவே பங்குமக்கள் கருதினர். கி.பி. 1833-ல் மாந்நானத்து சி.எம்.ஐ. துறவறசமூகத்தை தொடங்குவதற்கு அவர் காரணமாயிருந்தார். ஆலயத்தோடு பள்ளிக் கூடங்களையும் நிறுவினார். கேரள மக்களிடம் எழுத்தறிவு வளரச் செய்திட விழிப்புணர்வு கொடுத்தார். அவரின் இலக்கியப் படைப்புகள் மிகவும் புகழ் பெற்றவை. திருக்குடும்ப அர்ப்பணிப்பு, நாற்பது மணி ஆராதனை போன்ற வைகளை மக்கள் மத்தியில் பரவச் செய்தார். சமூகத்தில் வேதனையடைபவர்களின் உயர்விற்காக அவர் அதிக அளவில் உழைத் தார். செபமும் தியானமும் தவமும் அவரை தெய்வீக மனிதனாக மாற்றியது.

1871 ஜனவரி 3-ம் தேதி கூனம்மாவில் வைத்து தந்தை ஏலியாஸ் இறையடி சேர்ந்தார். அவரது பரிந்துரையால் பற்பல அற்புதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. 1986 பிப்ரவரி 8-ம் தேதி கோட்டயத்தில் வைத்து பாப்பரசர் இரண்டாம் யோவான் பவுல் தந்தை குரியாக்கோஸ் ஏலியாசை அருளாளராக அறிவித்தார். நவம்பர் 23, 2014-ம் தேதி வத்திகானில் வைத்து இவரை புனிதராக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார்.

2. புனித மரியம் திரேசியா

சிறமேல் குடும்பத்தில் தோமஸ், தாண்ட இவர்களின் மகளாக 1876 ஏப்ரல் 26-ல் திரிச்சூர் புத்தன்சிறயில் மரியம் திரேசியா பிறந்தார். மிகவும் சிறு வயதிலேயே கிறிஸ்தவ விசுவாசத் திலும் இறை நம்பிக்கையிலும் மரியம் திரேசியா ஆழ்ந்த பற்றை வெளிப்படுத்தினார். அடிப்படைக் கல்வி கிடைக்காதிருந்தும் மரியம் திரே சியாவுக்கு எழுத வும் வாசிக்கவும் தெரிந்திருந்தது. மரியம் திரேசியா 37-ம் வயதில் (1913-ல்) புத்தன்சிறயில் ஒரு செபக்கூடம் நிறுவினார். 1914 மேய் 14-ல் திருக்குடும்ப துறவியர் சமூகத்தை ஆரம்பித்தார்.

நிரந்தரமான மன்றாட்டும் சமூக சேவையும் திரேசியாவின் வாழ்க்கையை சிறப்புற செய்தது. குடும்பச் சேவையை முக முத்திரையாக்கிய திரேசியா அனைத்து இல்லங்களிலும் திருக்குடும்ப பக்தியை பரப்ப சிறந்த உற்சாகத்தைக் காட்டினார். கடவுளுக்கு ஏற்ற ஒரு வாழ்க்கையை நடத்திய அவர் 1926 ஜூன் 8-ல் திருச்சூரிலுள்ள குழிக்காட்டுச் சேரியில் வைத்து காலமானார். மாபெரும் ஜூபிலி 2000 ஏப்ரல் 9-ம் தேதி திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவரை அருளாளராக அறிவித்தார்.

3. இறையூழியர் மார் இவானியோஸ்

www.malankaralibrary.com

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் மறு ஒன்றிப்பு இயக்கத்திற்கு வித்திட்ட மாமேதை மார் இவானியோஸ் ஆண்டகையின் வாழ்வும், அவரிடம் காணப்பட்ட புண்ணியங்களும் ஏராளமானோரை வியப்பிலாழ்த்தியுள்ளது. அவர் இறுதி ஓய்வு கொள்ளும் பட்டம் பேராலயத்திற்கு வருடம் தோறும் மக்கள் திருப்பயணம் மேற்கொள் கின்றனர். அவரது பரிந்துரையால் தங்களின் வேண்டுதல்கள் நிறைவேறியதாக சான்று பகர்கின்றனர். 2007-ம் ஆண்டு ஜூலை 14-ம் நாள் இறையூழியராக அறிவிக்கப்பட்டுள்ளார். விரைவில் இறைவன் இவரை புனிதர் நிலைக்கு உயர்த்த வேண்டுமென்று மன்றாடுவோம்.

**குறு வினா விடைகள்**

1. முத்தி பேறுபெற்றவர் என்பதன் பொருள் என்ன? ஒரு நபரை புனிதர் என்ற பதவிக்கு உயர்த்துவதற்கு முன் திருச்சபை வழங்குகின்ற அங்கீகாரமே அருளாளர் அல்லது முத்திபேறுபெற்றவர் என்பது.
2. அருளாளர் தந்தை அகஸ்டின் (குஞ்ஞுச்சான்) குறிப்பு வரைக? 1891-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் கேரள மாநிலத்தில் ராம்புரம் என்ற ஊரில் பிறந்தார். 1921 டிசம்பர் 17-ல் குருப்பட்டம் பெற்றார். தனது வாழ்க்கையை தலித் மக்களின் நலனுக்காக செலவிட்டார். 1973 அக்டோபர் 16-ல் காலமானார், கார்டினல் வர்க்கி விதயத்தில் 2006 ஏப்ரல் 30-ல் ராம்புரத்தில் வைத்து அருளாளராக உயர்த்தினார். ஏழைகள் மீது அன்பு, இரக்கம் நிறைந்த இதயம் சாதி, மத வேற்றுமையில்லாத உறவு இவையே இவரது வாழ்வின் சிறப்பம்சம்.
3. அருளாளர் தேவசகாயம் பிள்ளை என்பவர் யார்? அருளாளர் தேவசகாயம் பிள்ளை குமரி மாவட்டத்தில் 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்து திருமறையை ஏற்று மறைசாட்சியாக இறந்த அருளாளர் தேவசகாயம் பிள்ளை விரைவில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட ஜெபிப்போம்.
4. “என்னைப் பின்பற்றவிரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் **சிலுவையைத்** தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மத்தேயு 16: 24)